வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 2

என்றுமே எம்.ஜி.ஆர்.
நிழல், நிஜம், நிரந்தரம்



முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,

சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித் திருமகன் நூல் வரிசை - 2



முனைவர் செ. இராஜேஸ்வரி **MA., M.Phil., Ph.D.,**

நூல் விவரம்

நூலின் பெயர் : என்றுமே எம்.ஜி.ஆர்., நிழல், நிஜம், நிரந்தரம்

நூல் வரிசை : வெற்றித் திருமகன் நூல் வரிசை - 2

ஆசிரியர் : முனைவர் செ. இராஜேஸ்வரி

பதிப்பாளர் : சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,
கம்பர் சாலை, தினமணி நகர்,
மதுரை - 625018.
அலைபேசி எண்: 7010997639

பதிப்பு : ஐந்தாம் பதிப்பு

மொழி : தமிழ்

சென்னை பல்கலைக்கழகத்தில்
பாரதரத்னா புரட்சிதலைவர் எம்ஜிஆர்
ஆய்விருக்கை தொடங்கிய எம்ஜிஆரின்
அன்பு தம்பி உண்மைத்தொண்டர்

**மனித நேயச்செம்மல் சென்னை
முன்னாள் மேயர் திருமிகு
சைதைதுரைசாமி**

அவர்களுக்கு இந்நூல் அன்பு காணிக்கை



நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று

பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy

English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***
2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***
4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***
5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***
6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***
7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***
8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***
9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***
10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***
11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***

12. **இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,**

13. **முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்**

14. **இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.**

15. ***எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]***

16. **படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு** *ஆகியவை வெளிவந்துள்ளன.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் **பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி** *என்ற கவிதை நூல்களை இவர் முறையே"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You Language of Love, and A Lady at the little gate", என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்] ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி

அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் **'அமராவதியின் காதல்'** என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **"என்னோட ராசி நல்ல ராசி"** என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் **'மர வழிபாட்டின் வேர்களைத் தேடி *(Deep into the roots of Tree worship)*, காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு'** போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்

1. எம்.ஜி.ஆரின் நிழல், நிஜம், நிரந்தரம்



நாளை போடப்போறேன் சட்டம் – பொதுவில்
நன்மை புரிந்திடும் திட்டம்
நாடு நலம் பெறும் திட்டம்
என்று நாடோடி மன்னன் படத்தில் பாடிய படியே எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்ததும் பல மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றினார். ஒப்பனையும் ஒரிஜினலும் ஒன்றுகலந்ததாக எம்.ஜி.ஆரின் வாழ்க்கை அமைந்துவிட்டதால் அவரை சினிமா எம்.ஜி.ஆர் என்றும் அரசியல் எம்.ஜி.ஆர் என்றும் பிரித்துப் பார்க்க இயலவில்லை.

உலகப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றம்

எம்.ஜி.ஆர் சினிமாவில் தனது ஹீரோ அந்தஸ்தை தக்க வைத்துக்கொள்ள பாடுபட்டதைப்போலவே முதல்வர் பொறுப்பேற்றதும் அதை தக்கவைக்க பல சவால்களைச் சந்தித்தார். அவரது ஆட்சிக்காலம் அவருக்கு மலர் பாதையாக அமையவில்லை. மாறாக பெரும் போராட்டக்களமாக அமைந்தது. மக்களின் முழு நம்பிக்கையை அவர் பெற்றிருந்ததால் அவர் அதிலும் வெற்றிபெற்றார். அவர் முதல்வரான காலகட்டத்தில் சர்வதேசப் பொருளாதாரத்தில் பல கொள்கை மாற்றங்கள் ஏற்பட்டன. LPG எனப்படும் Liberalization, Privatization, Globalization அதாவது தாராளமயமாக்கல் தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகள் தீவிரமாக இந்தியாவில் வேரூன்ற

தொடங்கின. இந்நிலையில் அவர் பல மக்கள் நலத்திட்டங்களுக்காக மத்திய அரசுடன் போராடினார். ஏழை மக்களுக்கு அரசு உதவ வேண்டும் என்ற சோசலிச கொள்கை வலுவிழக்க தொடங்கிய காலகட்டம் அது. பொதுவுடைமை கொள்கை சிதறடிக்கப்பட்ட காலம். மக்கள் அவரவர் சொந்த முயற்சியில் தேவையானவற்றை பெற வேண்டுமே தவிர அரசை எதற்கும் எதிர்பார்க்க கூடாது என்ற கொள்கை பிரசாரம் தொடங்கியது. இந்நிலையில் 1977இல் முதல்வர் பொறுப்பேற்ற எம்.ஜி.ஆர் தன் படங்களில் “நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்-- இங்கு ஏழைகள் வேதனைப்படமாட்டார்’’ என்று பாடியது பொய்யாகிவிடக் கூடாது என்ற சிந்தனையில் மிகவும் கவனமாகத் தான் சினிமாவில் நடித்துக்காட்டிய படி மக்கள் மீது அக்கறை கொண்டவராக ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தினார்.

எம்.ஜி.ஆர் தன் ஆட்சிக்காலத்தில் பெரிய அளவில் தொழிற்சாலைகள் அணைக்கட்டுகள் மேம்பாலங்கள் போன்றவற்றை உருவாக்காவிட்டாலும் மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்னை இல்லாமல் இருக்கும்படி கவனித்துக் கொண்டார். பெண்களும் பிள்ளைகளும் பாதுகாப்பாக உணர்ந்தனர். பசிக் கொடுமையால் சிறுவர்கள் சிறுமிகள் தவறான பாதையில் போகும் சூழ்நிலை ஏற்படாதபடி பார்த்துக்கொண்டார். சத்துணவு முறையான கல்வி வழங்கப்பட்டதால் அவர்கள் வளர்ந்ததும் வேலை வாய்ப்பு பெற்றனர். நடுத்தரக் குடும்பங்களில் இரு பிரிவுகள் தோன்றியது, திமுக ஆட்சியில் வேலையில்லா போராட்டம் கடுமையாக இருந்தது. எம்.ஜி.ஆர் காலத்தில் அந்நிலை குறையத் தொடங்கியது. பெண்களுக்கும் வேலை கிடைத்தது. சத்துணவு திட்டத்திற்காக அவர் ஒரே நாளில் பத்தாயிரம் பெண்களுக்கு வேலை அளித்தார். இது இந்தியாவில் இதுவரை நடந்திராத சாதனையாகும். கல்லூரிகளில் வேலை வாய்ப்புக் கல்வி அறிமுகமானதால் இளைஞர்களிடையே நம்பிக்கை தோன்றியது.

‘தொழிலாளி’ யாக எம்.ஜி.ஆரின் நலத் திட்டங்கள்

ஏழை பங்காளன் என்று மக்களால் அழைக்கப்பட்ட எம்.ஜி.ஆர் அதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். ரிக்ஷாக்காரனாக பெயின்டராக வண்டி இழுக்கும் தொழிலாளியாக பரிசலோட்டியாக கிணறு தூர் வாருபவராக பல வேடங்களில் நடித்து மக்கள் மனதில் இடம்பிடித்தார். இதனால் அவர் மீது மிகுந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தொழிலாளிகளிடையே காணப்பட்டது. அவர்கள் எதிர்பார்த்தபடியே எம்.ஜி.ஆரும் நெசவாளர் தீப்பெட்டி தொழிலாளர் மற்றும் பனையேறும் தொழிலாளிகளுக்கு விபத்து நிவாரணத் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

மீனவ நண்பனாக எம்.ஜி.ஆரின் நலத்திட்டங்கள்

படகோட்டியாக வந்து “தரை மேல் பிறக்க வைத்தான் – எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்; கரை மேல் இருக்க வைத்தான் –பெண்களை கண்ணீரில் குளிக்க வைத்தான்’’ என்று சோக கீதம் இசைத்த எம்.ஜி.ஆர் தன்னை மீனவ நண்பனாக நிலை நிறுத்தும் முயற்சியில் அவர்களுக்கென சிறப்பு வீட்டு வசதி திட்டத்தை அறிமுகம் செய்தார். இதனால் கடற்கரையில் குப்பங்களின் குடிசைகளில் வாழ்ந்து வந்த இவர்களின் நிலை விரைவில் மாறியது.

“ஒளி விளக்கு’’ அளித்த எம்.ஜி.ஆர்

இருளை அகற்றி எம்.ஜி.ஆர் நம் வாழ்வில் ஒளி விளக்கேற்றுவார் என்ற நம்பிக்கையில் வாக்களித்த மக்களை அவர் ஏமாற்றாமல் வீட்டுக்கொரு விளக்கு திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். குடிசைகளுக்கு இலவச மின்சாரமும் அளித்து அந்த விளக்கை ஒளிரச் செய்தார். இதனால் ஏழை குழந்தைகள் தங்கள் வீட்டிலேயே இரவில் படித்தனர். வீட்டில் மின்சார விளக்கு இல்லாத போது ஊர் மந்தையில் உள்ள பொது விளக்கில் சிறுவர்கள் படிப்பதுண்டு. ஆனால் அங்கேயும் தாழ்த்தப்பட்டோர் சென்று படிக்க இயலாது. கிராமங்களில் அதிகாரம்

படைத்தோராக உயர் சாதியினர் இருந்ததால் ஏழை தலித் குழந்தைகள் படிக்க விளக்கின்றி சிரமப்பட்டனர். எனவே இவர்கள் வீட்டில் காடா விளக்கில் படித்து வந்தனர்.

‘நாடோடி’ எம்.ஜி.ஆரின் சாதிக் கொடுமைக்கு எதிரான திட்டம்

நாடோடி படத்தில் எம்.ஜி.ஆர் தாழ்த்தப்பட்டவரின் மகன் என்பதால் அவரை எடுத்து வளர்த்தவரின் சொத்து ஏராளமாக அவருக்கு இருந்தும் அவருக்குச் சாதிக்கொடுமை பற்றி பிரசாரக் கூட்டங்களில் பேசி வரும் ஒரு தமிழாசிரியரே பெண் கொடுக்க மறுத்துவிடுவார். தாயின் மடியில் படத்திலும் எம்.ஜி.ஆருக்கு இதே கதைதான். பணக்காரரான அவரைப் பார்த்து எம்.ஆர்.ராதா என்ன சாதியோ என்ன குலமோ என்று ஏளனமாகப் பேசுவார். எம்.ஜி.ஆர் தன் ஆட்சிக்காலத்தில் கிராமங்களில் முன்சீஃப் கர்னம் போன்ற பொறுப்புகளில் இருப்பவர்கள் உயர் சாதியினர் என்பதால் அவர்களில் பலர் தாழ்த்தப்பட்டோரிடம் பாரபட்சமாக நடக்கின்றனர் என்பதை அறிந்து அந்தப் பதவிகளை ஒழித்தார். அரசுத் தேர்வு மூலமாக கிராம நல அதிகாரி [வி.ஏ.ஓ] பொறுப்புக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற புதிய முறையை அறிமுகம் செய்தார். இப்போது தாழ்த்தப்பட்டவர்களும் கிராம நிர்வாக அதிகாரியாகப் பொறுபேற்றனர்.

விவசாயி எம்.ஜி.ஆரின் நலத்திட்டங்கள்

எம்.ஜி.ஆர் தான் நடித்த விவசாயி ஒரு தாய் மக்கள் படங்களில் நவீன விவசாய முறைகள் மற்றும் கூட்டுப்பண்ணை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றி உணர்த்தியிருப்பார். அவர் முதல்வரானதும் 325 கோடிக்கான விவசாயக் கடனை தள்ளுபடி செய்தார். பாசனத்துக்காக 3.31 இலட்சம் பம்பு செட்களுக்கு மின் இணைப்பு வழங்கினார். பேரிடர் காலங்களில் விவசாயிகள் நஷ்டமடையக் கூடாது என்பதற்காகப் பயிர் பாதுகாப்பு காப்பீடு திட்டத்தை கொண்டு வந்தார்.

விதவையின் கரிசனம்

உழைக்கும் கரங்கள் படத்தில் குமாரி பத்மினி இளம்விதவையாக நடிப்பார். எம்.ஜி.ஆர் மீது ஆசைப்படுவார். எம்.ஜி.ஆர் இணங்காததும் ஒரு போலிச் சாமியாரிடம் தன்னை இழந்துவிடுவார். அதன்பிறகு எம்.ஜி.ஆர் அந்தச் சாமியாரை அடித்து உதைத்து திருத்தி குமாரி பத்மினிக்குத் திருமணம் செய்துவைப்பார். இது சினிமா கதை. நிஜத்திலும் எம்.ஜி.ஆர் விதவை பெண்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். விதவைகளை மறுமணம் செய்வோருக்கு ரூ. 5,300 ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார். இதனால் ஆயிரக்கணக்கான விதவைகள் பலனடைந்தனர்.

ஒருமுறை ஒருவர் எம்.ஜி.ஆரிடம் வந்து விதவைகள் தன் கணவரின் வேலையை வாரிசு முறைப்படி பெற்றுக்கொண்டு பின்பு மறு திருமணம் செய்கின்றனர். இது முதல் கணவருக்குச் செய்யும் துரோகம் இல்லையா? மறுமணம் செய்துகொண்டால் முதல் கணவரால் கிடைத்த வேலையை விட்டுவிட வேண்டும் என்று ஆணையிடுங்கள் தலைவரே என்று வேண்டினார். அதற்கு எம்.ஜி.ஆர் “அந்த விதவைப்பெண்ணின் சம்பளத்துக்காகத்தான் பலர் மறு மணம் செய்கின்றனர். அவளுக்கு வேலை போய்விட்டால் அவனும் அவளை விட்டு போய்விடுவான். வேலைதான் விதவைக்கு பலம். அதை நாம் கெடுக்கக் கூடாது” என்றார். எம்.ஜி.ஆரின் இந்த பதில் ஆண்கள் மற்றும் பெண்களின் உளவியலை அவர் நன்றாகப் புரிந்துவைத்திருப்பதையும் விதவை பெண்கள் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று அவர் கருதியதையும் புலப்படுத்துகிறது. ஆனால் எம்.ஜி.ஆர் தன் ஆட்சிக்காலத்திலேயே இந்தச் சலுகையை விதவை பெண்களுக்கு வழங்கிவிட்டார்.

சைக்கிளில் டபுள்ஸ் போகவும் எம்.ஜி.ஆர் காலத்தில் அனுமதி வழங்கப்பட்டது பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. அதன்பிறகு சைக்கிளில் கணவனும் மனைவியுமாக சினிமாவுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் போக ஆரம்பித்தனர். இது சிறிய

உத்தரவு என்றாலும் பெரியளவில் மக்கள் மனதை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியதை மறுக்க இயலாது.

எம்.ஜி.ஆரின் தமிழ்ப் பற்றும் பணியும்

ஐந்து வயது முதல் தமிழ்நாட்டில் வாழ்ந்த எம்.ஜி.ஆருக்குத் தாய்மொழி வேறாயினும் தமிழே தன் மொழியாகி விட்டது. திமுக கட்சியில் அவர் இணைந்திருந்ததும் அவருக்குத் தமிழின் மீது அதிக பற்று உண்டாகக் காரணமாயிற்று. அவரது முதல் சொந்தப் படமான நாடோடி மன்னன் "செந்தமிழே வணக்கம் -- திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும் செந்தமிழே வணக்கம்'' என்ற தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்கும். இப்பாடல் இன்று மதிமுக கட்சியினரின் இறை வணக்கப் பாடலாக உள்ளது.

கலைஞர் கதை வசனம் எழுதி எம்.ஜி.ஆர் நடித்த எங்கள் தங்கம் படத்தில் "என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்'' என்பார். அவருக்கு இயற்கையாகவே தமிழ் மொழியின் மீது பற்றும் ஆர்வமும் இருந்ததால் அவர் தானும் பல தமிழ் நூல்களை வாசித்து தன் தமிழறிவை வளர்த்துக்கொண்டார். படித்த தமிழறிஞர்களிடமும் பலவற்றை கேட்டறிந்தார் அவர் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு கி.ஆ.பெ. விசுவநாதம் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் பன்மொழிப்புலவர் தேவநேயப்பாவாணர் போன்ற தமிழறிஞர்களை கௌரவித்து மணிமண்டபங்கள் எழுப்பினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் இறந்து ஒரு மாதத்துக்குள் அவருக்குச் சிலை வைக்கும் கோரிக்கை முன்வைக்கப்பட்டு சிலை பணிகள் துரிதமாக நடந்தன. தெ பொ மீ அவர்களின் தமையனார் சதாவதானி தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலரின் பதி பக்தி மேடை நாடகத்தில் எம்.ஜி.ஆர் நடித்திருக்கிறார். அது திரைப்படமாக இருந்த சமயத்திலும் எம்.ஜி.ஆர் அதில் நடிப்பதாக இருந்தது. ஆக அவர்கள் குடும்பத்துக்கும் எம்.ஜி.ஆருக்கும் இருந்த நீண்ட நாள் தொடர்பு சிலை தொடர்பான பணிகளை விரைவுபடுத்தியது. எம்.ஜி.ஆர் தன் பதவிக் காலத்தில்

தமிழ்த்தொண்டு செய்த பெருமக்களின் பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்லூரியில் 2% ஒதுக்கீடு வழங்கினார்.

1981இல் தன் தொகுதியான மதுரை மேற்கில் ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடத்தினார். அதன் தொடக்க விழாவில் சிறிய பெரிய என அனைத்துக் கட்சித் தலைவர்களும் சிறப்புரையாற்றி அந்த மாநாட்டில் பங்கேற்கச் செய்தார். அப்போது பொதுமக்களும் இம்மாநாட்டில் பங்கேற்று மகிழும் வகையில் அவர்கள் கண்டும் கேட்டும் ரசிக்க முத்தமிழ் அரங்கங்களையும் மாபெரும் பொருட்காட்சி ஒன்றையும் நடத்தினார். பல்கலைக்கழகத்தில் கருத்தரங்குகளில் அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்கி விவாதங்கள் நடத்தினர்.

மதுரை மேற்கில் ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஜனவரி ஒன்று முதல் பத்து நாள்கள் வரை தமிழகத்து மக்கள் இலட்சக் கணக்கானோர் தமிழில் தலை சிறந்த பேச்சாளர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் நடத்திய கவியரங்கம் பட்டி மன்றம் நாட்டிய நாடகம் இன்னிசை கச்சேரி, போன்றவற்றை கண்டும் கேட்டும் ரசித்தனர்.

எம்.ஜி.ஆர் வேறு எந்த ஆட்சியிலும் வேறு எந்த முதல்வரும் தமிழுக்குச் செய்யாத ஒன்றை தம் ஆட்சியில் செய்தார். அதுதான் தஞ்சையில் தமிழுக்கென்று ஆயிரம் ஏக்கர் பரப்பில் தமிழாராய்ச்சிக்கென்று அவர் தொடங்கிய தமிழ்ப் பலகலைக்கழகம் ஆகும். ஆனால் எம்.ஜி.ஆருக்குப் பின் வந்த முதல்வர்கள் அவரது நோக்கத்தை பாழ்படுத்திவிட்டனர். இப்பல்கலை உலகத்தரத்துக்கு உயர்ந்திருக்க வேண்டிய ஓர் அமைப்பாகும்.

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை எம்.ஜி.ஆர் சிறப்புற நடத்தினார். அவர் ஆட்சிக்காலத்தில் இன்னும் பல வகையில் அவர் தமிழுக்கும் தமிழ்ப் பெரியோருக்கும் உதவினார்

நல்ல நல்ல பிள்ளைகளை நம்பியிருந்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் தன் படத்தில் குழந்தை ரசிகர்களுக்காக தனிக் காட்சிகளும் பாடல்களும் காமெடியன் செய்யும் சில வேடிக்கை சண்டைகளும் வைத்திருப்பார். தனது தத்துவப்பாடல்களை அவற்றின் பல்லவியை இரண்டு வயது நிரம்பிய குழந்தை பாடும்படியாக எளிமையாக எழுத வேண்டும் என்பார். என் அண்ணனுக்கு ஒன்பது குழந்தைகளைக் கொடுத்த இறைவன் எனக்கு ஒரு குழந்தை கூட கொடுக்கவில்லையே என்று வசன கர்த்தா அரூர் தாசிடம் கவலைப்பட்ட எம்.ஜி.ஆர் சிறு குழந்தைகள் தன் வீட்டில் வந்து விளையாடுவதை பெரிதும் விரும்பினார். குழந்தைகள் நல்ல பண்புடனும் பழக்க வழக்கத்துடனும் வளர்க்கப்பட வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். அதனால்தான் முதல்வரானதும் குழந்தைகளுக்காக நல்ல பல திட்டங்களை அறிமுகம் செய்தார்.

ஆட்சியிலும் சோறு போட்ட எம்.ஜி.ஆர்

ஏழு வயதில் சாப்பாட்டுக்கு வழியின்றி நாடக கம்பெனியில் சேர்ந்து நடித்த எம்.ஜி.ஆர் அந்த நிலைமை தமிழகக் குழந்தைகளுக்கு வரக் கூடாது என்று விரும்பினார். காமராஜரை தன் தலைவராகவும் அண்ணாவை தன் வழிகாட்டியாகவும் கொண்டிருந்த எம்.ஜி.ஆர் காமராஜர் கொண்டுவந்த பள்ளிக்குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டத்தை விரிவு படுத்தி சத்துணவுத் திட்டமாக அறிவித்தார். காமராஜர் அறிமுகப்படுத்திய திட்டத்தில் குழம்பு கறிகாய் போன்றவை கிடையாது. அது பசிக்கான உணவு மட்டுமே. ஆனால் ஆரம்பம் முதல் தன் வாழ்வில் உடல் நலம் உடல் பயிற்சி ஆகியவற்றில் ஈடுபாடு காட்டி வந்த எம்.ஜி.ஆர் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டத்தில் அவர்களின் உடல்நலனைக் காக்கும் சத்துகள் இருக்க வேண்டும் என்று விரும்பியதால் இத்திட்டத்தில் சோறு, பருப்பு, காய்கறி, கீரை ஆகிய அனைத்தும் கலந்து சமவிகித உணவாக வழங்கப்பட்டது.

எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் பிறந்த நான்கு மாதக் குழந்தை முதல் பதினேழு வயது மாணவர்கள் வரைக்குமாகச் சேர்த்து திட்டமிடப்பட்டது. நான்கு மாதக் குழந்தைக்குச் சத்துணவு மாவு உருண்டை காலை பதினோரு மணிக்கு வழங்கப்படும் அதை தாய்மார் வந்து வாங்கி குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும் இப்போது அந்த நிலை மாறிவிட்டது. சத்துமாவு பாக்கெட்டுகளைத் தாய்மாரிடம் வீட்டுக்குச் சத்துணவு ஆயாமார் கொடுத்துவிடுகின்றனர். காமராஜர் அரசுப் பள்ளிகளுக்கு மட்டும் எனத் தொடங்கிய இத்திட்டம் எம்.ஜி.ஆர் ஆட்சியில் அரசு உதவி பெறும் அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் காலணி மற்றும் சீருடை என எம்.ஜி.ஆர் குழந்தைகள் நலத்திட்டங்களைக் கொண்டுவந்தார், பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்க பிரதமர் ராஜீவ் காந்தியிடம் உதவி கேட்டுப் போயிருந்தபோது அதிகாரிகள் காலம் தாழ்த்தினர் உடனே கோபப்பட்டு எம்.ஜி.ஆர் புறப்பட்டுவிட்டார். இவர்கள் கொடுக்காவிட்டால் நாம் வீட்டுக்கு ஒரு ரூபாய் என வசூலித்து இத்திட்டத்தைக் கொண்டுவருவோம் என்றார். அதன்பிறகு அவரைச் சமாதானப்படுத்தி பிரதமரின் உதவியாளர் எம்.ஜி.ஆரை அழைத்து நிதி உதவி செய்வதாக ஒப்புக்கொண்டார். இந்தத் துணிச்சல் எம்.ஜி.ஆர் கூடப் பிறந்தது ஆகும். அவர் தான் செய்ய நினைத்ததை செய்து முடிக்க வேண்டும் என்ற முனைப்புடன் செய்து வெற்றி பெறுவார்.

தமிழகத்தில் சத்துணவுத் திட்டம் கொண்டுவர வேண்டும் என்று எம்.ஜி.ஆர் கூறிய போது அரசு அதிகாரிகள் அரசிடம் அவ்வளவு நிதி இல்லை என்றனர். உடனே எம்.ஜி.ஆர் கோபத்துடன் உங்கள் நிதியே தேவையில்லை என் மக்களிடம் நிதி பெற்று நான் இத்திட்டத்தை நிறைவேற்றுகிறேன் என்றார். உடனே சத்துணவு நிதி ஒன்றை அறிவித்தார். நல்ல உள்ளங்கள் தாராளமாக உதவின. அவரை வளர்த்துவிட்ட திரையுலகினர் முதலில் உதவ முன்வந்தனர். பின்பு தொழிலதிபர்கள் வந்தனர். பலர் தம் ஒரு நாள் சம்பளத்தை ஒரு மாத சம்பளத்தைக்

கொடுத்து உதவினர். இது உலகுக்கே ஒரு முன்னோடி திட்டமாக உருவாயிற்று.

கல்வித் திட்டம்

சர்வதேசப் பொருளாதாரக் கொள்கை காரணமாக தனியார்மயமாக்கல் விரைந்து வந்ததால் பள்ளிக்கல்வி முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக் கல்வி வழங்குவதற்கான வாய்ப்பும் எம்.ஜி.ஆர் காலத்தில் அமைந்தது. தன்னிடம் வந்து வேலூர் மாவட்ட மாணவர்களுக்குப் படிக்க கல்லூரிகள் இல்லை, அரசு ஒரு கல்லூரி தொடங்க வேண்டும் என்று அவரது அமைச்சர் விசுவநாதன் கேட்டார் உடனே எம்.ஜி.ஆர் நீங்களே ஒரு கல்லூரி ஆரம்பியுங்கள். இந்த அரசு உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்றார். அப்படி ஆரம்பிக்கப்பட்டதுதான் இன்றைய வி.ஐ.டி அகாடமி. எம்.ஜி.ஆர் ஆதரவுடன் பல அதிமுக கட்சியினர் பாலிடெக்னிக் தொழிற்பயிற்சி கல்லூரிகளையும் சுயநிதி கல்லூரிகளையும் தொடங்கி நடத்தினர். இவற்றில் எம்.ஜி.ஆர் ஏழை மாணவர்களுக்கு 25% இலவச ஒதுக்கீட்டைப் கேட்டுப் பெற்றார். மற்ற மாணவர்களுக்கு இக்கல்லூரிகளில் கல்விக்கட்டணம் வசூலிக்கலாம் என்ற சட்டம் இயற்றினார். ஏழை மாணவர்கள் இலவசத் தொழிற்கல்வி பெற்றனர். இவை இன்று சர்வதேச தரத்துடன் பல்கலைக்கழகங்களாக வெளிநாட்டு மாணவர்களும் வெளி மாநில மாணவர்களும் படிக்கும் கலாலயமாக திகழ்கின்றன. எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது தொழில் பயிற்சி அல்லது வேலை வாய்ப்புள்ள தொழிற்படிப்புகளைப் படித்த மாணவர்கள் வேலைக்குப் போய் கை நிறைய சம்பாதித்தனர். எம்.ஜி.ஆரின் குழந்தை நலத்திட்டம் அவரது ஆட்சியில் வெற்றி பெற்றது.

நிறைவு

எம்.ஜி.ஆர் தான் சினிமாவில் சொல்லிய விஷயங்களும் அவர் ஆட்சியில் அவர் அறிமுகம் செய்த திட்டங்களும் ஏறத்தாழ ஒன்றாகவே இருந்ததனால் இன்றளவும் அவரை

மக்கள் மறக்கவில்லை. அவரது ஒரிஜினல் முகமும் ஒப்பனை முகமும் அதிக வித்தியாசமின்றி ஒரே மாதிரி இருக்கும்படி அவர் ஆரம்பத்தில் கவனித்துக்கொண்டார். இது காலப்போக்கில் அவருக்கு மாபெரும் புகழையும் வெற்றியையும் தரும் அம்சமாக மாறிவிட்டது. இந்த ஒற்றுமை தொடக்கத்தில் அவர் மக்கள் மத்தியில் புகழ் பெற உதவியது; இந்தப் புகழே அவர் முதல்வரானதும் சினிமாவில் சொன்னபடி மாற்றங்களைக் கொண்டுவரவும் மக்கள் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் ஊக்கமளித்தது.

2. எம்.ஜி.ஆர் தொடங்கி வைத்த ஆன்மீகப் புரட்சி..!

எம்.ஜி.ஆர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளராக இருந்தபோது கழுத்தில் தாமரை மணி மாலை அணிந்து கதருடுத்தி கோயிலுக்குப் போய்வந்தார். தன் இறை நம்பிக்கையை வெளிப்படையாகத் தெரிவித்தார். 'ஆண்டவன் வழிவிடுவான் , 'ஆண்டவனுக்குத் தெரியும்' என்று எதற்கெடுத்தாலும் ஆண்டவன், ஆண்டவன் என்று இவர் பேசுவதைக் கேட்டு மற்றவர்கள் எம்.ஜி.ஆருக்கு 'ஆண்டவன்' என்றே பட்டப்பெயர் வைத்துவிட்டனர்.



படப்பிடிப்புத்தளத்தில், 'ஆண்டவன் எங்கேய்யா? ஆண்டவனுக்கு கார் போய்விட்டதா' என்று எம்.ஜி.ஆரை 'ஆண்டவன்' என்ற பட்டப்பெயரால் குறிப்பிட்டு பேசினார். தன்னை ஆண்டவனே என்று அழைத்துப் பேசுவோரிடம் எம்.ஜி.ஆரும் பதிலுக்கு 'ஆண்டவன்' என்றே அவர்களை அழைத்துப் பேசினார். ஆனால் அவர் திமுகவில் சேர்ந்த பின்பு ஆண்டவனே என்று அவர் மற்றவர்களை அழைத்துப்

பேசுவதில்லை. மற்றவர்கள் பழைய பழக்கத்தின் காரணமாக எம்.ஜி.ஆரை 'ஆண்டவனே' என்று அழைப்பதை நிறுத்தவில்லை. ஆண்டவன் என்ற பெயரால் எம்.ஜி.ஆரை இவர்கள் தொடர்ந்து அழைத்து வந்தனர்.

திமுக-வில் எம்.ஜி.ஆர்

அண்ணாவினால் ஈர்க்கப்பட்டு எம்.ஜி.ஆர் திமுகவில் இணைந்த பின்பு கோயிலுக்குப் போவதை நிறுத்திவிட்டார். ஒருமுறை திருப்பதிக்குப் போய் கடவுளைப் பார்க்க முடியாத காரணத்தால் இனி கோயிலுக்குப் போவதில்லை என்று முடிவு எடுத்ததாகவும் தெரிவித்தார். இதனால் இவர் தெய்வமறுப்புக் கொள்கையை ஏற்றுக்கொண்டதாக திமுகவினர் அகமகிழ்ந்தனர். அதே வேளையில் திமுகவில் அப்போது இருந்துவந்த சிவாஜிகணேசன் தன் குடும்பத்தாருடன் திருப்பதிக்குப் போய் வந்ததால் திமுகவினர் அவரை கொள்கை விரோதியாகப் பார்த்தனர். 'திருப்பதி கணேசா, திரும்பிப் போ' எனச் சொல்லி திமுகவிலிருந்து அனுப்பிவிட்டனர். ஆக இப்போது திமுக உறுப்பினரான எம்.ஜி.ஆர் கோயில் போகும் பழக்கம் இல்லாதவர். திரைப்படங்களிலும் சாமி படங்களைக் கூட வணங்காதவர் என்ற எண்ணம் அவரது கட்சியினர் மத்தியிலும் ரசிகர்களிடையேயும் ஆழமாகப் பதிந்துவிட்டது.

ஜெயலலிதாவின் ஆளுமை

பத்மினி, சரோஜாதேவி உடன் ஜோடியாக நடிக்கும்போது எம்.ஜி.ஆர் கோயிலுக்குப் போனதாகவோ வீட்டில் தெய்வ வழிபாடுகளில் கலந்து கொண்டதாகவோ (1953இல் 'ஜெனோவா' படத்தில் அவர் பைபிள் வாசிக்கும் காட்சி இருந்தது.) காட்சிகள் வைக்கப்படவில்லை. நான் ஏன் பிறந்தேன் படத்தில் கே.ஆர்.விஜயா சுமங்கலி பூஜை செய்து அழும்போது பூஜை முடியும் தருணத்தில் எம்.ஜி.ஆர் அங்கு வந்துவிடுவார். விஜயா தன் கையில் எடுத்திருந்த மலர்களை எம்.ஜி.ஆரின் கால்களில் போட்டு வணங்குவார்.

ஜெயலலிதா எம்.ஜி.ஆருடன் நடித்த படங்களில் முருகன் கோயிலில் நின்று இருவரும் சாமி கும்பிடுவதாகக் காட்சிகள் இடம்பெற்றன. ‘உங்களுக்கு தெய்வ நம்பிக்கை இருக்கும்போது அதை வெளிக்காட்ட தயங்குவது ஏன்? என்ற வினாவே எம்.ஜி.ஆரை கோயில் காட்சிகளில் நடிக்க வைத்தது என்று துணிந்து கூறலாம். அதுவரைஅவர் மருதமலைக்குப் போனது, நம்பியாருக்கு சபரிமலையாத்திரையின் போது முதல் மாலை அனுப்பியது என ஆன்மிக ஆர்வம் இருந்தாலும் அவர் அதைத் தன் படங்களில் வெளிப்படுத்தவில்லை.

காஞ்சித்தலைவன் படத்தில் எம்.ஜி.ஆர் போருக்குப் புறப்படும் முன்பு கொற்றவையை வழிபடுவதை நேரடியாகக் காட்டாமல் கோயில் வாயிலிலிருந்து அவர் தேரில் கிளம்பிச் செல்வதாகக் காட்டுவார்கள். அதைப் போல மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படத்தில் அவர் கோயில் திருப்பணிகளுக்குப் பணம் வழங்கியதை கோபுரங்களின் மீது தங்கக் காசுகள் கொட்டுவதாக ‘டபுள் எக்ஸ்போஷர்’ முறையில் காட்டியிருப்பார்கள். ஆனால், ஜெயலலிதாவுடன் நடிக்கும் படங்களில் மட்டுமே இருவரும் ஜோடியாகக் கோயிலில் இருப்பார்கள்.

என் அண்ணன் படத்தில்...

குதிரை வண்டிக்காரனான எம்.ஜி.ஆரும் புல்லுக்கட்டுக்காரியான ஜெயலலிதாவும் முருகன் கோயிலில் நின்று கைகூப்பி கண்மூடி சாமி கும்பிடுவார்கள். பின்பு கண்ணைத் திறந்து பார்த்த எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவிடம் நீ என்ன வேண்டிக்கொண்டாய் என்று கேட்டதற்கு ஜெயலலிதா நமக்குச் சீக்கிரம் திருமணம் நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாகக் கூறுவார். ஜெயலலிதா எம்.ஜி.ஆரிடம் இதே கேள்வியைக் கேட்டதற்கு எம்.ஜி.ஆர், தன் தங்கைக்குச் சீக்கிரம் திருமணம் நடக்க வேண்டும் என்று சாமியிடம் வேண்டியதாகக் கூறுவார். இறைவனிடம் பக்தியோடு வேண்டிக்கொண்டால் அந்தக் காரியம்

நடக்கும் என்ற நம்பிக்கையை இந்தப் படக்காட்சியில் எம்.ஜி.ஆர் பகிரங்கமாக தெரிவித்திருப்பார்.

நம்நாடு படத்தில்

எம்.ஜி.ஆர் உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று ஜெயலலிதா முருகன் கோயிலில் போய் வேண்டிக்கொள்வார். பின்பு எம்.ஜி.ஆரை வில்லன்கள் அடித்துப் போட்டதும் அதே கோயிலில் இருவரும் தஞ்சம் புகுந்த போது பூசாரி அவர்களை வெளியேறும்படி சொல்லிவிடுவார். அப்போது எம்.ஜி.ஆர் ஆண்டவன் இப்போது கோயிலை விட்டு வெளியேறி விட்டான் என்று விரக்தியுடன் ஒரு வசனம் பேசுவார்.

தனிப்பிறவி படத்தில் 'முருகனாக'

முருகனின் தீவிர பக்தரான தேவர், எம்.ஜி.ஆரை வைத்து எடுத்த படம் தனிப்பிறவி. இருவரும் இவர்கள் சினிமா வாய்ப்பு கேட்டு கஷ்டப்பட்ட காலங்களில் எம்.ஜி.ஆர் ஆண்டவனே என்று எதற்கெடுத்தாலும் சொல்வதைப் போல தேவர் முருகா என்று சொல்வார். மற்றவர்களைக் கூட முருகா என்றுதான் அழைப்பார். கோபம் வந்தால் என்ன முருகா இப்படிச் செய்கிறாய் என்று கேவலமாக வசை மொழிகளைப் பயன்படுத்தித் திட்டுவார். இவரது தனிப்பிறவிப் படத்தில் ஒரு பாடல்காட்சியில் எம்.ஜி.ஆர் முருகன் வேடமிட்டார். ஜெயலலிதா வள்ளி, தெய்வானை என்ற இருவராகவும் வந்தார். அவர் ஏகாதிபத்திய உணர்வு கொண்டவர் அல்லவா? எனவே வள்ளி, தெய்வானை என இரண்டு வேடங்களையும் அவரே ஏற்று நடித்தார்.

சிவபெருமானாக எம்.ஜி.ஆர்

அதிமுக தொடங்கிய பின்பும் எம்.ஜி.ஆர் திராவிடக் கொள்கையில் பிடிப்புள்ளவராகவே இருந்தார். உழைக்கும் கரங்கள் படத்தில் போலிச்சாமியார் ஒருவர் இளம்பெண்களை மதுகலந்த தண்ணீரை தீர்த்தம் எனக் கொடுத்து மயங்க வைத்து கெடுப்பதை நேரடியாகக் காட்டி,

அந்தச் சாமியாரை காலால் எட்டி உதைத்து ‘துவம்சம்’ செய்திருப்பார்.

இப்படத்தில் சிவபெருமான வேடத்தில் ‘ருத்ரதாண்டவமும்’ ஆடியிருப்பார். சிவபெருமானே நேரில் வந்து வில்லன்களை உதைத்து அடிப்பதாக அக்காட்சி அமைந்திருக்கும். மதுரைவீரனுக்கு பூஜை போடும் பாடல்காட்சியும் இப்படத்தில் இடம்பெறும்.

ஸ்ரீமுருகன் (1946) படத்தில் மாலதி பார்வதியாகவும் நடித்தார். அவர்கள் ஆடிய சிவதாண்டவக் காட்சி அற்புதமாகப் படம் பிடிக்கப்பட்டது. அந்தப் படத்தை எம்.ஜி.ஆர் பார்க்க மிகவும் ஆசைப்பட்டார். ஆனால் அந்த பிலிம் சேதம் அடைந்ததால் அவருக்குப் பார்க்கக் கிடைக்கவில்லை.

எம்.ஜி.ஆரின் மூகாம்பிகை வழிபாடு

1995ல் ஜெயலலிதா சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடையும் வரை அவர் கோயிலுக்குச் சென்றதாகவோ பூஜை, யாகங்கள் நடத்தியதாகவோ பெரியளவில் தகவல்கள் இல்லை. தோல்விக்குப் பின்பு அவர் பெயரில் பிரத்யிங்கரா தேவி கோயிலிலும் மற்றும் சத்ரு சங்கார பூஜைகளும் நடத்தப்பட்டு வந்தன. இதன் விளைவாகவோ என்னவோ அவருக்கு அடுத்த தேர்தலில் வெற்றியும் கிடைத்தது. ஆனால் எம்.ஜி.ஆர் பதவியில் இருக்கும்போதே தன் அண்ணனின் சம்பந்தியும் இயக்குநருமான சங்கருடன் சேர்ந்து தன் தாய் சொல்லிச் சென்றிருந்த கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்குப் போய் வழிபாடு செய்தார். தனக்கு நாடோடி மன்னன் படவெற்றிவிழாவில் மதுரையில் வைத்து மதுரை முத்துவால் வழங்கப்பட்ட நூறு பவுன் தங்கவாளையும் மூகாம்பிகைக்குக் காணிக்கையாக வழங்கினார். அந்த வாளை இப்போது மூலஸ்தான விக்ரகத்தின் அருகில் காணலாம். அந்தக் கோயிலில் அவர் ஆதி சங்கரரின் தியான அறைக்குள் அமர்ந்து தியானம் செய்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர் மூகாம்பிகை கோயிலுக்குப் போய்வந்ததை அறிந்த அதிமுகவினர் அந்தக் கோயிலுக்குப் போய்வரத் தொடங்கினர். தமிழில் மூகாம்பிகை பற்றிய திரைப்படங்கள் வரத் தொடங்கின. அடிமட்டத் தொண்டர்களும் மாதந்தோறும் பணம் செலுத்தி மைசூர் சாமுண்டீஸ்வரி, கொல்லூர் மூகாம்பிகை என 'டூர்' போய்வரத் தொடங்கினர். ஆன்மிக சிந்தனையும் ஸ்தல யாத்திரைகளும் தமிழகத்தில் எம்.ஜி.ஆரால் புத்துயிர் பெற்றன. கோவிலுக்குப் போவது முட்டாள்தனம் என்ற எண்ணம் பரவியிருந்த காலகட்டத்தில் எம்.ஜி.ஆரின் மூகாம்பிகை பக்தி தெய்வநம்பிக்கையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

எம்.ஜி.ஆரின் உடல்நலம் தேற பிரார்த்தனை


மாஸ்கோ திரைப்பட விழாவில், 'மக்கள் திலகம்' எம். ஜி. ஆருடன் நிருபர்கள் கூட்டத்தில் லதா கலந்து கொண்டபோது எடுத்த படம்.

1952ல் திமுக பெற்ற முதல் வெற்றி முதல் 1972ல் அதிமுக பெற்ற வெற்றி வரை தமிழகத்தில் இந்துக்களின் தெய்வ நம்பிக்கை ஓர் இருண்ட காலத்தில்தான் இருந்துவந்தது. நாத்திகர் வெற்றி பெற்றால் ஆத்திகர் தோல்வி அடைவது சகஜம் தானே. திமுகவினர் உச்சித் திலகத்தை ரத்தம் என்று

கேலி செய்வர். திருமண் இட்டால் நூற்றிப்பதினொன்று என்று நையாண்டி செய்வர். விபூதி பூசினால் பட்டை என்றும் சாம்பல் என்றும் ஏளனம் செய்வர்.

கலைஞர் கருணாநிதியே நேரடியாக இந்தக் கேலியில் இறங்கியதால் இந்துமத அடையாளங்கள் பெரிதும் விமர்சனத்துக்குள்ளாயின. இந்த நிலை எம்.ஜி.ஆர் மூகாம்பிகை கோயிலுக்குச் சென்றதும் மாறியது. மேலும் எம்.ஜி.ஆர் உடல்நலமின்றி அமெரிக்காவில் இருந்த போது அவரது ரசிகர்கள் நடத்திய வழிபாடுகள் தமிழகத்தில் மாபெரும் ஆன்மிகப் புரட்சியை ஏற்படுத்தின.

ஆன்மிகப் புரட்சி

எம்.ஜி.ஆர் இறந்துவிட்டார். அவரது பிணத்தை வைத்து ஓட்டுக் கேட்கிறார்கள் என்று 1984ல் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்தனர். மக்கள் இரண்டுமுறை எமன் கையில் இருந்து பிழைத்த எம்.ஜி.ஆர் இந்த முறையும் பிழைத்து விடவேண்டும் என்று மனமுருக வேண்டினர். பால்குடம் எடுத்தனர். காவடி எடுத்தனர். பல கிலோமீட்டர் தொலைவுக்கு அங்கப்பிரதட்சணம் செய்தபடி கோவில்களுக்குப் போய் சாமி கும்பிட்டனர்.

எம்.ஜி.ஆர்தான் ‘வாத்தியார்’ ஆச்சே, அவர் தான் சாகப்பிழைக்கக் கிடந்தால் அனைத்துத் தரப்பினரும் அவரவர் முறைப்படி கடவுளை வணங்கி பிரார்த்திக்க வேண்டும் என்று ‘ஒளிவிளக்கு’ படத்தில் எடுத்துக்காட்டியிருந்தார் அல்லவா! அவர் காட்டிய வழியில் அவரது ரசிகர்களும் தொண்டர்களும் முழு நம்பிக்கையுடன் இறைவனை வேண்டினர். முதலில் இந்துமதத்தின் அடித்தட்டு மக்கள் ஆரம்பித்து வைத்த நாட்டுப்புறத் தெய்வவழிபாடு மெள்ள மெள்ள பெருங்கோவில்களில் பூஜைகளாக பரிணமித்தன.

கோயில்களில் நடந்த தெய்வ வழிபாடுகள் தேவாலயம், மசூதி என விரிவு பெறத் தொடங்கின. தமிழகத்தின் அனைத்துத் தரப்பினரும் அவர்களுக்கு ஏற்ற முறையில்

முழு விசுவாசத்துடன் கடவுளை வணங்கினர். இவர்களின் விசுவாசம் இவர்களைக் காத்தது. எம்.ஜி.ஆர் உயிரோடு திரும்பினார். பேச்சில் ஏற்பட்ட குறையை மக்கள் பொருட்படுத்தவில்லை. பிழைத்து வந்ததே போதும் என்று மனமகிழ்ந்தனர்

3. திரையுலகம் திறந்து வைத்த கதவுகள்

1940களில் தமிழ் திரையுலகம்



எம்.ஜி.ஆர் 1936-ல் தமிழ்த்திரைக்கு அறிமுகமாகி பதினோரு ஆண்டுகள் கழித்து 1947-ல் கதாநாயகன் அந்தஸ்து பெற்றார். அந்த சமயம் பி.யு சின்னப்பாவும் டி.கே. தியாகராஜ பாகவதரும் தமிழ்த் திரையுலக ஜாம்பவான்களாக இருந்த நிலை மாறியதால், ஓர் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. 1944 ஆம் வருடம் நவம்பர் 27-ல் லட்சுமி காந்தன் கொலைவழக்கில் கைதான பாகவதர் 1966-ல் விடுதலை பெற்று வந்ததும் படங்களில் முன்பு போல் ஆர்வம் காட்டவில்லை. சில படங்கள் நடித்தபோதும் அவை சரியாக ஓடவில்லை.

எம்.ஜி.ஆர் 'ராஜகுமாரி'யில் கதாநாயகனாக நடித்த பிறகும் சில படங்களில் அவர் துணை கதாபாத்திரங்களில் நடித்து வந்தார். 1948-ல் பாகவதர் நடித்த 'ராஜமுக்தி'யில் எம்.ஜி.ஆர் தளபதி வேடம் ஏற்றிருந்தார். 1949-ல் பி. யு. சின்னப்பா நடித்து வெளிவந்த ரத்னகுமார் படத்தில் பாலதேவனாக சிறுபாத்திரத்தில் நடித்தார். அந்தப் படங்கள் எதிர்பார்த்த வெற்றியை பாகவதருக்குத் தரவில்லை. அவர் சரிவை சந்தித்தார். அந்தச் சரிவு எம்.ஜி.ஆருக்கு நல்வாய்ப்பாக அமைந்தது. எம்.ஜி.ஆர் 1948-ல் வி.என். ஜானகியுடன் 'மோகினி', 1950-ல் ஜி. சகுந்தலாவுடன் 'மந்திரிகுமாரி', 1951-ல் மாதுரிதேவியுடன் 'மர்மயோகி' அதே ஆண்டில் அஞ்சலி தேவியுடன் 'சர்வாதிகாரி' என தொடந்து நடித்து முன்னேரிக்கொண்டே வந்தார்.

மர்மயோகி பேய்ப் படம் என்பதால் குழந்தைகள் பயப்படுவார்கள் என ஏ முத்திரை பெற்றது. அது நிஜப் பேய் அல்ல என்பதால் மக்களிடையே பெரும்வரவேற்பைப் பெற்றது.

“கரிகாலன் குறிவைத்தால் தவறமாட்டான் தவறும் என்றால் குறி வைக்க மாட்டான்” என்று எம்.ஜி.ஆர் பேசிய வசனம் பட்டி தொட்டி எங்கும் பிரபலமாயிற்று. பலர் தம் ஆண்பிள்ளைகளுக்கு ‘கரிகாலன்’ என்று பெயர் சூட்டினர்.

பி.யு. சின்னப்பா

முதன் முதலில் இரட்டை வேடம் ஏற்று “உத்தமபுத்திரன்” படத்தில் நடித்த பி.யு.சின்னப்பா, ஒரே படத்தில் பத்து வேடம் போட்டார். ‘ஜகதலப் பிரதாபன்’ படத்தில் நான்கு கதாநாயகிகளுடன் நடித்தவர், வாள்வீச்சில் கெட்டிக்காரர்; எம்.ஜி.ஆர் வியந்து போற்றும் மேடைக்கலைஞர். இவர் ராஜபார்ட வேடம் ஏற்ற நாடகங்களில் எம்.ஜி.ஆர் ஸ்திரீபார்ட் வேடம் ஏற்றிருக்கிறார். இத்தகைய சிறந்த கலைஞரின் மரணம் எம்.ஜி.ஆரின் திரைப்பயணத்துக்கு ‘ராஜபாட்டையை’ (நெடுஞ்சாலை) அமைத்துக் கொடுத்தது. 1951-ல் பி.யு. சின்னப்பா திடீரென ஒரு விபத்தில் காலமானார். அதன் பிறகு எம்.ஜி.ஆரின் (1952) படங்களில் ‘என் தங்கை’ இலங்கையில் ஒரு வருடம் ஓடி வெற்றிவாகை சூடியது. கிறிஸ்தவ மன்னராக எம்.ஜி.ஆர் நடித்திருந்த ‘ஜெனோவா’ (1953) நூறு நாட்களைக் கடந்து வெற்றி நடைபோட்டது. இந்தப்படத்தில் எம்.எஸ். விஸ்வநாதனின் இசையை எம்.ஜி.ஆர் முதன்முதலாக அங்கீகரித்தார்.

ஜனாதிபதி பரிசு பெற்ற ‘மலைக்கள்ளன்’

பி.யு.சின்னப்பா 1951-ல் மறைந்த பின்பு தமிழ்த்திரையுலகில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை நிரப்ப வாள்சண்டையில் தேர்ச்சி பெற்றிருந்த எம்.ஜி.ஆருக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. பி.யு. சின்னப்பாவைப் போல எம்.ஜி.ஆரும் இரண்டு கைகளாலும் வாள் சுழற்றுவதில் கெட்டிக்காரர். 1954-ல் வெளிவந்த “மலைக்கள்ளன்” தமிழுக்கு ஜனாதிபதி விருதை பெற்றுத் தந்தது. 150 நாட்கள் வெற்றிநடை போட்ட

இந்தப் படம் எம்.ஜி.ஆரின் வெற்றிப் பாதையில் ஒரு மைல் கல்லாக அமைந்தது.

ரஞ்சன் என்ன ஆனார்?

“சந்திரலேகா” படம் ஜெமினி தயாரிப்பில் ஐந்து கோடி செலவில் உருவான படமாகும். அதில் எம்.ஜி.ஆரின் நாடகத்தந்தை எம்.கந்தசாமி முதலியாரின் மகன் எம்.கே. ராதா கதாநாயகனாகவும் ரஞ்சன் வில்லன் சசாங்கனாகவும் நடித்திருந்தனர். இருவருமே தமிழ்த் திரையுலகின் தன்னிகரற்ற நடிகர்களாக வந்திருக்க வேண்டும். ஆனால் விதி யாரை விட்டது?

1955-ல் வெளிவந்த அலிபாபாவும் 40 திருடர்களும், குலேபகாவலி ஆகியன வெற்றிப் படங்களாக எம்.ஜி.ஆருக்கு அமைந்தன. அடுத்த ஆண்டில் (1956) ‘மதுரை வீரன்’, ‘தாய்க்குப் பின் தாரம்’ ஆகிய படங்கள் எம்.ஜி.ஆருக்கு வெற்றிப் பரிசு அளித்தன. ‘தாய்க்குப் பின் தாரம்’ படப்பிடிப்பில் காளையுடன் சண்டை போடுவதில் எம்.ஜி.ஆர் காட்டிய தயக்கம் தேவருக்கும் அவருக்கும் இடையே மனவருத்தத்தை ஏற்படுத்தியது. இதனால் எம்.ஜி.ஆரின் ‘கால்ஷீட்டுக்காக’ காத்திருக்காமல் தேவர்தனது அடுத்த படமான ‘நீலமலைத் திருடனில்’ ரஞ்சனை கதாநாயகன் ஆக்கினார். படம் எம்.ஜி.ஆர் படம் போலவே இருந்தது. பெரிய வெற்றியும் பெற்றது.

எம்.ஜி.ஆர் ரசிகர்களும் ரஞ்சனின் ரசிகர்களும் தம்முள் மோதிக் கொண்டனர். எம்.ஜி.ஆருக்கு சமமான ஒரு போட்டியாளர் வந்துவிட்டதான சூழ்நிலை உருவானது. எம்.ஜி.ஆர் உடனே தனது ‘நாடோடிமன்னன்’ படத்தை மிகப்பெரிய அளவில் உருவாக்கினார். பாதிப் படத்தை வண்ணப்படமாகவும் எடுத்தார். 1958-ல் வெளிவந்த நாடோடிமன்னனில் எம்.ஜி.ஆரை ரசித்த ரசிகர்கள் அதன்பின்பு ரஞ்சனை ரசிக்கவில்லை. அடுத்த ஆண்டு (1959) வெளிவந்த ராஜாமலையசிம்மனும், மின்னல் வீரனும் ரஞ்சனுக்கு தோல்விப் படங்களாக அமைந்துவிட்டன. 1960-ல் வெளிவந்த ‘கேப்டன்’ ரஞ்சனும் ரசிகர்களின் ஆதரவைப்

பெறவில்லை. படங்கள் ஓடாததால் அவர் தன் மனைவி டாக்டர் கமலாவுடன் அமெரிக்காவில் போய்த் தங்கிவிட்டார். இப்போது தமிழ்த் திரையுலகில் எம்.ஜி.ஆர் தனிச்செல்வாக்கு பெற்ற உச்ச நட்சத்திரம் ஆனார். சிலருடைய மரணமும் சிலருடைய தோல்வியும் கூட எம்.ஜி.ஆருக்கு நல்வாய்ப்பாக அமைந்தன.

கலைவாணரின் ஆளுமை



கலைவாணர் சிறையிலிருந்து 1946-ல் வந்த பின்பு பல படங்களை தயாரித்து நஷ்டப்பட்டார். அந்த துக்கத்திலேயே காலமானார். இவர் மரணத்துக்குப் பின்பு எம்.ஜி.ஆர் அவர் மகன்களை டாக்டர் மற்றும் எஞ்ஜினியர் ஆக்கினார். மகள்களுக்கு முன்னின்று செலவு செய்து ஆடம்பரமாக திருமணம் செய்துவைத்தார்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன் எம்.ஜி.ஆர் 1956-ல் 'மதுரை விரன்', 1957-ல் 'சக்கரவர்த்தி திருமகள்' படங்களில் நடித்தார். ராஜா தேசிங்கு படத்தில் மகமத் கானாக நடிக்க இருந்த என்.டி. ராமராவை மாற்றி எஸ்.எஸ்.ஆருக்கு கலைவாணர் அந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்தார். பின்பு எம்.ஜி.ஆரும் தன் பங்குக்குச் சில மாற்றங்களைச் செய்தார். படம் வெளி வருவதற்குள் என்.எஸ் கே. 1957-ல் காலமாகிவிட்டார். பல ஆண்டுகள் தயாரிப்பில் இருந்த படம் 1960-ல் வெளிவந்தது. எஸ்.எஸ். ஆரின் கதாபாத்திரம் முக்கியத்துவம் பெறாதபடி எம்.ஜி.ஆரின் இரட்டை வேடம் அமைந்தது.

ராஜாதேசிங்கு வெளியாவதற்கு முன்பே எம்.ஜி.ஆரின் 'நாடோடி மன்னன்' வந்து அவரது அதிகாரத்தையும் செல்வாக்கையும் தமிழ்த் திரையுலகில் ஆழமாக வேரூன்றிவிட்டது. அவரின் படங்களில் இனி மாற்றம்

சொல்ல என்.எஸ். கேயும் இல்லை என்ற நிலையும் உருவாகி விட்டது.

எம்.பி. ஆனார் எஸ்.எஸ்.ஆர்

திமுக ஆதரவு நடிகர்களாகப் பலர் தமிழ்த் திரையுலகில் இருந்தாலும் எம்.ஜி.ஆரும், எஸ். எஸ். ஆரும் தொடர்ந்து திரையுலகில் நிலைத்திருந்து வெற்றிவாகை சூடினர். எஸ்.எஸ்.ஆர். எனப்படும் எஸ்.எஸ்.ராஜேந்திரன் சிவாஜி கணேசனுடனும் எம்.ஜி.ஆருடனும் இணைந்தும், தனியாகக் கதாநாயகனாகவும் நடித்துவந்தார். இவர் சிவந்த முகமும் சுருள் முடியும் நல்ல தமிழ் உச்சரிப்பும் புராணப்படங்களில் நடிப்பதில்லை என்ற இலட்சிய வேகமும் கொண்டவர். திமுக கொடியை முதன்முதலாக தனது சொந்தப் படமான 'தங்கரத்தினத்தில்' காட்டியிருந்தார். இந்திய நடிகர்களில் முதலில் சட்டமன்றத் (1962) தேர்தலில் நின்று வெற்றி பெற்ற பெருமை உடையவர். 'சேடப்பட்டி சிங்கக்குட்டி' என்று அவரது சொந்தஊர்ப் பெயரால் அழைக்கப் பெற்றவர்.

கலைஞர் கருணாநிதி முதல்வரானபோது எஸ்.எஸ்.ஆருக்கு பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர் (ராஜ்யசபா எம்.பி) பதவியை வழங்கி அவரை டில்லிக்கு அனுப்பி வைத்தார். எஸ்.எஸ்.ஆர் நடிக்கவில்லை. மேல்சபை உறுப்பினரானதும் சிவாஜி வருத்தப்பட்டார். "திரையுலகில் நல்ல செல்வாக்குடன் இருக்கும்போது நீ ஏன் எம்.பி. பொறுப்பை ஏற்றுக் கொண்டாய்? இதனால் தமிழ்த் திரையுலகுக்கு குறிப்பாக எனக்கு மிகவும் நஷ்டம். இது வயதான பின்பு பெற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்பு" என்று எஸ்.எஸ்.ஆரிடம் கூறினார். 1969க்கு பிறகு திரைப்படங்களில் நடித்து எம்.ஜி.ஆர் அரசியலில் தனிப்பெரும் செல்வாக்கு பெற்றவரானார். (எம்.ஜி.ஆர் அதிமுக தொடங்கிய பின்பு எஸ்.எஸ்.ஆர் அக்கட்சியில் சேர்ந்து எம்.எல்.ஏ ஆகி எம்.ஜி.ஆரிடம் முதலமைச்சர் பதவியைக் கேட்டார்.)

4. வழியப்போய் உதவும் எம்.ஜி.ஆர்



பழந்தமிழ் இலக்கியங்களில், தலையேழு வள்ளல்கள் இடையேழு வள்ளல்கள் மற்றும் கடையேழு வள்ளல்கள் என்று படித்திருக்கிறோம். அவர்களுள், கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரிவள்ளல், கொம்பின்றித் தவித்த முல்லைக்கொடிக்கு வேலையாளிடம் சொல்லி ஒரு பந்தல் போடச் சொல்லாமல், உடனே தன் தேரை அங்கே நிறுத்தி, அந்த முல்லைக்கொடியை அதில் படர விட்டுவிட்டுத்தான் நடந்தே இல்லம் வந்து சேர்ந்தான் என்று படித்திருக்கிறோம். அதுபோல, துன்பப்படுவோரைப் பார்த்தவுடன், அவர்களுக்கு உடனே உதவுவது எம்.ஜி.ஆரின் சிறந்த பண்பாகும். எம்.ஜி.ஆர், தானே வலியப் போய் உதவிகள் செய்வார் என்பதால், திருமுருக கிருபானந்த வாரியார் இவருக்கு பொன்மனச் செம்மல் என்று பட்டம் வழங்கினார். எம். ஜி. ஆர் வலியப் போய் உதவியதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். இந்த ஓர் அத்தியாயம் மட்டுமே ஒரு நூலாக விரிவடையும் என்றாலும், சில சான்றுகளை மட்டும் இங்கு காண்போம்.

வண்டுக்கு வாழ்வளித்த எம்.ஜி.ஆர்

மனிதர்களுக்கு உதவியதைப் பார்ப்பதற்கு முன், வண்டுக்கு உதவிய ஒரு நிகழ்ச்சியை அறிந்துகொள்ளலாம். ஒருநாள் தேவர் படத்தின் ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தபோது,

மேக்கப் அறையிலிருந்து எம்.ஜி.ஆர் வெகு நேரமாக வெளியே வரவில்லை. தேவர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, நேரே எம்.ஜி.ஆரைத் தேடிப்போய்விட்டார். அங்கே, எம்.ஜி.ஆர், பாத்ரூமுக்குள் இருந்தார். வெகு நேரம் காத்திருந்துவிட்டு, பின்பு கதவைத் தட்டிவிட்டார். சிறிது நேரம் கழித்து எம்.ஜி.ஆர் சிரித்தபடி ஏதோ சாதித்துவிட்டதைப்போல வெளியே வந்தார். தேவரைப் பார்த்து, "ஒரு வண்டு தண்ணிக்குள்ள விழுந்துகிடந்தது. எவ்வளவோ முயற்சிபண்ணியும் அதை வெளியே கொண்டுவர முடியல. கடைசியில் கையைவிட்டு எடுத்து வெளியில் விட்டுட்டேன். பாவம்ண்ணே அது. இப்பப் பறந்துபோயிருச்சு என்றார். தேவர் நொந்துகொண்டார். எத்தனை பேர் அங்கே காத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர் வண்டைப் பிடித்து வெளியே விட்டேன் என்கிறார்'' அவர் ஒன்றும் சொல்லவில்லை. போய்விட்டார். இதுதான் மற்றவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் உள்ள வேறுபாடு. எம்.ஜி.ஆருக்கு அந்த வண்டு சாகக் கூடாது என்பது முக்கியமாக இருந்தது.

குதிரைவண்டிக்காரரின் துயர் துடைத்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர், ஒரு நாள் இரவில் காரில் வந்துகொண்டிருந்தபோது, ஓர் இடத்தில் 10 பேர் கூடி நின்றனர். அங்கு, அழுகைச் சத்தமும் கேட்டது. உடனே என்ன நடந்தது என்று போய் பார்த்துவிட்டு வா என தன் உதவியாளரை அனுப்பினார். அவர் வந்து, ஒரு குதிரை செத்துவிட்டது. குதிரைவண்டிக்காரரின் மனைவி அழுதுகொண்டிருக்கிறாள் என்றார். உடனே, எம்.ஜி.ஆர் அந்தக் குதிரைவண்டிக்காரரிடம் புதுக் குதிரை வாங்க எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டு, அதற்குப் பணம் கொடுத்தார். அவர், குதிரை வாங்கி வண்டியில் பூட்டி ஓடவைப்பது வரை அவர்களுக்குச் சாப்பாட்டுக்குப் பணம் வேண்டுமே, அதற்கும் தனியாகப் பணம் கொடுத்தார். குதிரைவண்டிக்காரர் புதுக் குதிரை வாங்கியதும் வண்டியில் பூட்டிக்கொண்டு வந்து, எம்.ஜி.ஆரிடம் காட்டிவிட்டுப் போனார்.

காலில் காயம் பட்ட ஊழியருக்கு உதவி

ஒரு நாள், படப்பிடிப்பு தளத்தில் ஒர் ஊழியர் காலை நொண்டியபடி வேலை பார்த்துக்கொண்டிருந்ததை எம்.ஜி.ஆர் பார்த்துவிட்டார். அவரை அழைத்து, அவருக்கு சிகிச்சைக்குப் பணம் கொடுத்து, 'கால் குணமடையும்வரை வேலைக்கு வரவேண்டாம்' என்று கூறி அனுப்பினார். அப்போது அவர் அருகில் இருந்தவர்களிடம், "எனக்கு வசதி இருந்ததால் என் கால் முறிந்தபோது நல்ல சிகிச்சைபெற்று குணமானேன். பாவம் அவர் வசதி இல்லாத காரணத்தால்தானே இவ்வாறு காலில் கட்டோடு வேலைக்கு வந்துள்ளார். அவருக்கு நாம்தானே உதவ வேண்டும்'' என்றார். ஏழை எளியோருக்கு உதவுவதை எம்.ஜி.ஆர் தன் கடமை என்று நினைத்ததால் மட்டுமே அவருக்கு இப்படி வலியச் சென்று உதவும் மனமும் குணமும் அமைந்தது.

கேமராக்காரருக்குக் கேட்காமல் அளித்த உதவி

தினமும் எம்.ஜி.ஆரின் படப்பிடிப்பு முடிந்ததும், ஸ்டில்ஸ் போட்டோ எடுத்துவந்து கொடுக்க புகைப்படக்காரர்கள் படப்பிடிப்புத் தளத்திலேயே இருப்பார். அந்தப் படங்களைப் பார்த்து விக், மேக்கப், உடை ஆகியன சரியாக இருந்தால் மட்டுமே படப்பிடிப்பைத் தொடர்வார்கள். காலையில் எடுத்த படங்கள் இரண்டு மூன்று மணியளவில் தளத்துக்கு வந்துவிடும். ஒரு நாள், நாகராஜராவின் அக்காள் மகன் சங்கர் ராவ், அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார். திடீரென எம்.ஜி.ஆரின் உதவியாளர் அவரை வந்து தளத்திலிருந்து தனியறைக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கு, எம்.ஜி.ஆரின் மருத்துவர் பி.ஆர்.எஸ் இருந்தார். சங்கருக்கு ஒன்றும் புரியவில்லை. டாக்டர் சங்கரின் உடலைப் பரிசோதித்தார். சங்கருக்கு ஹெர்னியா இருப்பதால், உடனே அறுவைசிகிச்சை செய்ய வேண்டும் என்றார் எம்.ஜி.ஆரிடம். அதற்கு எம்.ஜி.ஆர், சரி ஏற்பாடுசெய்யுங்கள் சிகிச்சைக்குவேண்டிய முழுச்செலவையும் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றார். சங்கர் பயந்துவிட்டார். எம்.ஜி.ஆர், அவர் மாமாவிடமும் விஷயத்தை எடுத்துச்சொன்னார். சிகிச்சை முடிந்து சங்கர் நலம்

பெற்றார். எம்.ஜி.ஆர் மருத்துவமனையில் வந்து சங்கரைப் பார்த்துச்சென்றார்.

சங்கர், செட்டில் நின்றுகொண்டிருந்தபோது, அவரைக் கவனித்த எம்.ஜி.ஆர், அவர் ஏதோ வலியால் அவதிப்படுவதைப் புரிந்துகொண்டார். சங்கரின் முகபாவத்தைவைத்து வலியின் தீவிரத்தை எம்.ஜி.ஆரால் உணர முடிந்தது. இவனிடம் கேட்டால் ஏதாவது காரணம் கூறுவான் என்று அவர் உடனே தன் சொந்த மருத்துவரை வரவழைத்துப் பரிசோதிக்கும்படிக் கூறினார். சங்கருக்கு வலி மற்றும் நோயிலிருந்து நிரந்தர நிவாரணம் கிடைத்தது.

நடன இயக்குநருக்கு பாக்கி கிடைத்தது

எம்.ஜி.ஆர் படப்பிடிப்பில் இருக்கும்போது, சுற்றி நடக்கும் விஷயங்களைக் கவனித்துக்கொண்டே இருப்பார். இதனால்தான் வெளிப்புறப் படப்பிடிப்பின்போது லதா (மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்), சரோஜாதேவி (அன்பே வா), நம்பியார் (ஆயிரத்தில் ஒருவன்), மனோகர் (அடிமைப்பெண்), வீரப்பா (ஜெனோவா) போன்றோருக்கு ஆபத்து ஏற்பட்டபோது, எம்.ஜி.ஆரால் அவர்களைக் காப்பாற்ற முடிந்தது. எம்.ஜி. ஆரின் இந்தப் பண்பு குறித்து டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் ஒரு பேட்டியில் தெரிவித்தார். ஒருநாள், டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் முகம் வாடிப்போய் இருப்பதைப் பார்த்த எம்.ஜி.ஆர், உடனே அவரைத் தனியாக அழைத்து காரணத்தைக் கேட்டார். அவருக்கு மைசூரில் டான்ஸ் ஷூட் செய்ததற்குரிய சம்பள பாக்கி இன்னும் வரவில்லை என்பதை அறிந்ததும், தயாரிப்பாளரிடம் சொல்லி உடனே சம்பளத்தைப் பெற்றுத் தந்தார். 'அப்போதெல்லாம், மாதத்துக்கு ஐந்து பாடல்கள்தான் வரும்'. அதற்கும் சம்பளம் வராமல் இருந்துவிட்டால், குடும்பம் நடத்துவது கஷ்டம். இதை உணர்ந்த எம்.ஜி.ஆர், வாடிய என் முகத்தைப் பார்த்தே உதவிவிட்டார்' என சுந்தரம் தன் பேட்டியில் கூறினார்.

ஸ்டன்ட் மாஸ்டர் குழுவிற்கு வாழ்வளித்தல்

பலராம் என்றொரு ஸ்டன்ட் மாஸ்டர், தன் குழுவினருடன் சினிமாவில் கோலோச்சி வந்தார். அந்தக் குழுவினர், படங்களில் நடனமும் ஆடுவார்கள், சண்டையும் போடுவார்கள். ஒரு நாள், பலராம் மாஸ்டர் காலமாகிவிட்டார். துக்கம் விசாரிக்க வந்த எம்.ஜி.ஆர், தாயிழந்த பிள்ளைகள் போல அங்கு நின்றுகொண்டிருந்த மாஸ்டரின் மாணவர்களைப் பார்த்தார். அவர்களைத் தன்னிடம் வந்து சேர்ந்துவிடுமாறு அழைத்தார். மறுவாழ்வு கிடைத்த அவர்கள், அகமகிழ்ந்தனர். அப்படி வந்தவர்கள், கடைசி வரை எம்.ஜி.ஆருடனேயே இருந்தனர். எம்.ஜி. ஆர் அரசியலுக்கு வந்த பின்பும் அவருடன் மெய்க்காப்பாளர்களாகத் தொடர்ந்தனர். இவர்களில் யாரும் எம்.ஜி.ஆரிடம் வந்து உதவி கேட்கவில்லை. ஆனால், பார்த்த மாத்திரத்திலேயே அவர்களின் அனாதரவான நிலையை உணர்ந்து, அவர்களைத் தன்னுடையவர்களாக எம்.ஜி.ஆர் ஏற்றுக்கொண்டார்.

எம்.ஜி.ஆர், வடபழனியில் ஓர் இடம் வாங்கி, அதை ஸ்டன்ட் மாஸ்டர்கள் பயிற்சிபெறுவதற்காகக் கொடுத்தார். பின்பு அவர் முதல்வரானதும், அவர்களுக்குத் திருமங்கலத்தில் 48 வீடுகள் கட்டிக்கொடுத்து, அவற்றில் 47ஐ குடியிருக்கவும் ஒன்றை மட்டும் அலுவலகமாகப் பயன்படுத்தும்படியும் கூறினார். ஆனால், திருமங்கலம் அவர்களின் பணித்தளமான கோடம்பாக்கத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், வேண்டாம் என்று மறுத்துவிட்டனர். அவர் காலத்தில்தான் ஸ்டன்ட் மாஸ்டர்களுக்கென்று தனிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

வெயிலில் நடந்தவர்களுக்குச் செருப்பு

அண்ணா, ஒரு கட்டுரையில் காலில் செருப்புகூட இல்லாமல் நடந்துபோகும் ஏழை, தன்னருகே காரில் பறந்துபோகின்றவனை நின்று திரும்பிப்பார்த்துச் செல்வான். ஆனால் காரில் போகிறவனோ, அந்த ஏழையைப் பற்றி கனவிலும் நினைக்க மாட்டான் என்பார்.

ஆனால் எம்.ஜி.ஆர், அதற்கு விதிவிலக்கு. அவர், எப்போது காரில் போனாலும் படப்பிடிப்பில் இருந்தாலும் அவர் கண்ணில் படும் கஷ்டங்களைப் பற்றி கவலைப்படுவார். அதற்கு தன்னால் முடிந்த அளவுக்குப் பரிகாரம் தேடவும் முயல்வார். ஒரு நாள் கர்நாடக முதலமைச்சரைச் சந்தித்துவிட்டு, அவர் மைசூரிலிருந்து மனைவி ஜானகி அம்மையார் மற்றும் ஜானகி அம்மையாரின் தம்பி மகளோடும் சென்னை திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது, சாலை ஓரத்தில் ஒரு பாட்டியும் இளம்பெண்ணும் தலையில் விறகுச் சுமையுடன் கால் சூடு பொறுக்காமல் நின்று நின்று நடந்துசென்றனர். உடனே எம்.ஜி.ஆர், தன்னுடன் காரில் பயணித்த இருவரிடமும் உங்கள் செருப்பைக் கழற்றுங்கள் பாவம் அந்தப் பாட்டி வெயிலில் நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார் என்றார். உடனே ஜானகியின் செருப்பு பாட்டிக்கும் ஜானகியின் தம்பி மகள் செருப்பு பாட்டியுடன் வந்த இளம்பெண்ணுக்கும் வழங்கப்பட்டன. அவர்கள், அதன் பின்பு நிம்மதியாக நடந்து சென்றனர். அந்தச் சாலையில் எத்தனை பேர் காரில் போயிருப்பார்கள். யாருக்காவது இந்தச் சிந்தனை வந்ததா?

இளநீர்க்காரருக்கு மருத்துவ உதவி

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த நேரம். அவர் கோட்டைக்குப் போகும்போது, அவ்வழியே தினமும் ஒருவர் கையில் இளநீர் வைத்துக்கொண்டு அதை நீட்டியபடியே நிற்பார். எம்.ஜி.ஆரின் கார் நிற்காது. ஒரு நாள் எம்.ஜி.ஆர், இங்கு ஒருவர் இளநீர் வைத்தபடி நிற்பாரே அவரைச் சில நாள்களாகக் காணோமே, அவருக்கு என்னவாயிற்று என்று பார்த்துச்சொல்லுங்கள் என்றார். அந்த இளநீர்க்காரர் விஷயம் அப்போதுதான் அவர் உதவியாளருக்குத் தெரிந்தது. விசாரித்துப் பார்த்ததில், இளநீர்க்காரருக்கு மஞ்சள் காமாலை வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது தெரிந்தது. எம்.ஜி.ஆர், அவருக்கு நல்ல மருத்துவ சிகிச்சை கிடைக்கும்படிச் செய்து, அவருக்கு மேலும் பல உதவிகள் செய்தார்.

போலீஸ்காரருக்கு லிஃப்ட் கொடுத்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் காரில் வரும்போது, வழியில் ஏதாவது கார் நின்றிருந்தால் உடனே தன் ஆட்களை அனுப்பி என்ன பிரச்னை என்று கேட்டு அவர்களுக்கு உதவுவார். ஒரு நாள், வழியில் ஒரு போலீஸ்காரர் பேருந்துக்காக நிற்பதைப் பார்த்து, அவரைத் தன் காரில் வரும்படி கூறினார். ஆனால், அந்த போலீஸ்காரரோ, தனக்கு அடுத்தவரிடம் தேவையில்லாமல் உதவியோ சலுகையோ பெறுவது பிடிக்காது. தானொரு நேர்மையான போலீஸ்காரர் என்றார். எம்.ஜி.ஆர் திரும்பவும் அவரிடம், இந்த வழியே இனி பஸ் கிடையாது. நீங்கள் காரில் வாருங்கள், அடுத்து வரும் பஸ்ஸ்டாப்பில் இறங்கிக்கொள்ளுங்கள். பஸ் வராவிட்டால், காலையில் டூட்டிக்குப் போக முடியாதே என்றார். போலீஸ்காரருக்கு காரில் வர மனமேயில்லை. இருந்தாலும் இப்போதைக்கு வேறு வழியில்லையே என்று காரில் ஏறி உம்மென்று உட்கார்ந்துகொண்டார்.

எம்.ஜி.ஆருடன் பேச விரும்பாதவர் போல நடந்துகொண்டார். ஆனால் எம்.ஜி.ஆர், தனக்குக் கடமை உணர்ச்சியுள்ள கண்டிப்பான போலீஸ்காரர்களை மிகவும் பிடிக்கும் என்று சொல்லி, அவரது ஸ்டேஷன் மற்றும் டூட்டி விவரங்களை எல்லாம் மெள்ள விசாரித்தார். மன இறுக்கத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்ட போலீஸ்காரர், எம்.ஜி.ஆர் தனக்கு உதவும் நோக்கத்துடன்தான் காரை நிறுத்தி தன்னை ஏற்றிக்கொண்டார் என்பதைப் புரிந்துகொண்டு, பின்பு சகஜமாகப் பேசினார். விரைவில் இருவரும் நல்ல நண்பர்களாகிவிட்டனர். அவர் பின்னர், தன் இரண்டு மகள்களின் திருமணத்துக்கும் எம்.ஜி.ஆரை அழைத்தார். எம்.ஜி.ஆரும் நேரில் சென்று வாழ்த்தினார்.

வேற்று மாநிலங்களில் உதவி

எம்.ஜி.ஆர், 'பணம் படைத்தவன்' படப்பிடிப்புக்கு கொல்கத்தா போயிருந்தபோது அங்கு வாழ்ந்த தமிழர்களுக்கு நிதி உதவி அளித்தார். 'அடிமைப்பெண்' படப்பிடிப்புக்கு ராஜஸ்தான் போயிருந்தபோது, முதல் நாளே அங்கு நடந்த தீவிபத்துக்கு நிவாரணமாக 50,000 உதவினார்.

'அன்பே வா' மற்றும் 'இதய வீணை' படப்பிடிப்புகளுக்கு காஷ்மீர் போனபோது, உடன் வந்த நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு ஸ்வெட்டர், சாக்ஸ் மற்றும் மஃப்ளர் வாங்கிக் கொடுத்தார். இதை, டான்ஸ் மாஸ்டர் புலியூர் சரோஜா தனது பேட்டியில் தெரிவித்தார்.

ரிக்ஷாக்காரருக்கு மழைக்கோட்டு

1964-ம் வருடம். அப்போது காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. நல்ல மழை. எம்.ஜி.ஆரின் கார், கோடம்பாக்கம் ரயில்வே கேட்டில் நிற்கிறது. ஒரு ரிக்ஷா ஓட்டி, வேகமாகத் தன் வண்டி நனையாமல் இருக்க பாடுபடுகிறார். வண்டி சீட் நனைந்துவிட்டால், யாரும் வண்டியில் ஏற மாட்டார்களே என்ற கவலை அவருக்கு. தான் மழையில் நனைந்தாலும் வண்டி நனையக் கூடாது என்று கவலைப்படும் அந்தத் தொழிலாளிக்காக எம்.ஜி.ஆர் கவலைப்பட்டார். அதனால்தான் அவர், 'ஏழைப் பங்காளன் எம்.ஜி.ஆர்' என்று வாழ்த்தப்படுகிறார்.

எம்.ஜி.ஆர், உடனே சென்னையில் எத்தனை ரிக்ஷாக்கார்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் கேட்டறிகிறார். மொத்தம் 3000 என்கின்றனர். இவர், தன் தையல்காரரிடம் சொல்லி ஒரே வாரத்துக்குள் 5000 மழைக்கோட்டுகளைத் தைக்கும்படி உத்தரவிடுகிறார். எத்தனை தையல்காரர் வேண்டும் என்றாலும் வாடகைக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்கிறார். தைத்து முடித்ததும், அறிஞர் அண்ணாவை அழைத்து, அவர் கையால் ரிக்ஷாக்காரர்களுக்கு மழைக்கோட்டுகளை வழங்கும்படிச் செய்தார். மீதி 2000 கோட்டுகள் மதுரை, திருச்சி போன்ற ஊர்களில் வாழ்ந்த ரிக்ஷாக்காரர்களுக்கு வழங்கப்பட்டன.

5. கதாநாயகன் படத்தில் காமெடியனின் அவசியம்..!



சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என்று அறிவுரை கூறிய எம் ஜி ஆர் தன் படங்களில் சிரிப்பை ஒரு குறிக்கோளோடு பயன்படுத்தினார். தன் இமேஜை உயர்த்தவும் தக்க வைக்கவும் ஏற்றபடி நகைச்சுவைக் காட்சிகளையும் நகைச்சுவை நடிகர்களையும் எம்.ஜி.ஆர் தேர்வுசெய்தார். மெயின் கதையோடு சேர்த்து ஒரு துணைக்கதையாகவே நகைச்சுவை நடிகர்களின் காதலும் தொழிலும் இதர செயல்முறைகளும் அமைந்திருக்கும். ஆனால், அவை லட்சிய வாழ்க்கைக்கு ஏற்றதாக இருக்காது. கேலிக்கூத்தாக இருக்கும் அல்லது சாமான்ய மனிதர்களின் இயலாமையை காட்டுவதாக இருக்கும். சில படங்களில் எம்.ஜி.ஆர் வரும் காட்சிகளில் அவர் கூடவே இந்த நகைச்சுவை நடிகர்களும் இடம் பெறுவார்கள். அப்போது எம்.ஜி.ஆரின் செயல் வேகத்தை உயர்த்திக் காட்டும் விளம்பரதாரர்களாக செயல்படுவார்கள். எம்.ஜி.ஆர் வெற்றி ஃபார்முலாவில் நகைச்சுவையின் அவசியம் என்ன, அவர் தன் படங்களில் தானே நகைச்சுவையாக நடித்தது, மற்ற

நடிகர்கள் நகைச்சுவைக்காக நடித்தது, நகைச்சுவை நடிகர்களுடன் அவருக்கு இருந்த தொடர்பு ஆகிய நான்கு விஷயங்களை இந்த கட்டுரையில் ஆராய்வோம்.

காமெடியனின் அவசியம்

எம்.ஜி.ஆரை ஹீரோவாக ஹைலைட் செய்யும் இருவரில் காமெடியன்களின் பங்கு முக்கியமானது. ஒரு ஹீரோ (எம்.ஜி.ஆர்) தன்னை நல்லவன் என்றும் வல்லவன் என்றும் இரண்டு விஷயங்களைக் காட்ட நினைக்கிறார். இதற்கு எதிர்மறையாக கெட்டவன் என்பவனை காட்ட வில்லனும் வலிமையற்றவன் என்பதைக் காட்ட காமெடியனும் தேவைப்படுகிறார்கள். ஹீரோ நல்லவன்; வில்லன் கெட்டவன். இங்கு நன்மை தீமை என்பது ஒரு முரண்பட்ட அமைப்பு. கதாநாயகன் உடல் வலிமையும் அறிவுதிட்பமும் உடையவன். காமெடியன் மெலிந்த உடலும் விவரம் தெரியாமலும் இருப்பவன். இது மற்றொரு முரண் அமைப்பாகும். இவற்றை ஆராய்ச்சியாளர்கள் இருமை எதிர்வுகள் binary oppositions என்பர். ஆக கதாநாயகனின் உடல் வலிமையையும் அறிவு திட்பத்தையும் உயர்த்திக் காட்ட காமெடியன் கதாபாத்திரம் தேவைப்படுகிறது.

எம்.ஜி.ஆரும் ஜானகியும் இணைந்து நடித்த மருத நாட்டு இளவரசியில் எம்.ஜி.ஆர் ஓர் ஏழை கிராமத்தான். அவருக்கு பணக்காரர்களே பிடிக்காது. அவரை வீரனாக்க அவருக்கு ஜானகி வாள் சண்டை கற்றுக்கொடுப்பார். அடிமைப்பெண் படத்திலும் வேங்கையனுக்கு சண்டைப் பயிற்சி அளித்து ஜெயலலிதா வீரனாக்குவார். உழைக்கும் கரங்கள் படத்தில் வரும் தேவதாசி குலத்தைச் சேர்ந்த பவானி எம்.ஜி.ஆரை பார்த்து "ரங்கா நீ நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது வல்லவனாகவும் இருக்க வேண்டும்" என்று அறிவுறுத்தி அவருக்கு உடல்வலிமையின் முக்கியத்துவத்தை உணர்த்துவார். வீரம் என்பது உடல்வலிமையுடன் தொடர்புடையதாகவே எம்.ஜி.ஆர் படங்களில் (பல்லாண்டு வாழ்க தவிர) காட்டப்பட்டுள்ளது.

பலமற்ற காமெடியன்

எம்.ஜி.ஆர் படத்தில் நாகேஷ், தேங்காய் சீனிவாசன் போன்ற காமெடி நடிகர்கள் வலிமையற்றவராகவே சித்திரிக்கப்பட்டனர். பரிசு படத்தில் நாகேஷ் எம்.ஜி.ஆரின் கை "ஆம்சை" அமுக்கி பார்ப்பார். "எனக்கும் உப்புமா" என்று தன் ஒல்லி கையை காட்டுவார். அதற்கு எம்.ஜி.ஆர் சிரித்துக்கொண்டே "ஆமாம் கிண்டினால் ஒனக்கு உப்புமா" என்று சாப்பிடும் உணவை கூறி கேலி செய்வார். மேலும், பல படங்களில் நாகேஷை தூக்கி பொத்தென்று தரையில் போடுவார். தேங்காய் சீனிவாசன் ஒரு படத்தில் ஏதாவது தள்ளுங்க என்று எம்.ஜி.ஆரிடம் டிப்ஸ் கேட்பார். எம்.ஜி.ஆர் "நான் தள்ளினால் தாங்கமாட்ட" என்று பதில் கூறுவார். சும்மா தள்ளுங்க என்று தேங்காய் கூறியதும் எம்.ஜி.ஆர் தள்ளுவார் தேங்காய் பொத்தென்று தரையில் விழுவார். இவ்வாறு காமெடியன்கள் உடல்வலிமையற்றவர்களாகவே சித்திரிக்கப்படுவர்.

காமெடியனும் வில்லனும்

ஒரு முறை எம்.ஆர். ராதாவிடம் அவரை புக் பண்ணும்போது ஏன் கதாபாத்திரத்தைக் கேட்காமல் ஒப்புக்கொள்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர், "என்ன கொடுக்கப் போகிறார்கள் ஒன்று வில்லன் அல்லது காமெடியன்" என்றாராம். எம்.ஜி.ஆர் படங்களில் அவர் இந்த ரோல்களில் நிறைய நடித்திருக்கிறார். வேட்டைக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர் இவரை தூக்கி ஒரு சுற்று சுற்றி இறக்குவார்.

ஒரு பொதுக்கூட்டத்தில் எம்.ஜி.ஆர் காதருகில் வந்து ஒரு பாட்டி 'இந்த நம்பியார் பயகிட்ட ஜாக்கிரதையா இருப்பா' என்று எச்சரித்தார். அந்தளவுக்கு எம்.ஜி.ஆருடன் வில்லத்தனமாக மோதி நடித்த நம்பியார், ஆரம்பத்தில் அவர் படங்களில் காமெடியனாகவே நடித்தார். மந்திரிகுமாரியில் அவர் ராஜகுருவாக மொட்டையடித்து வளைந்த அடர்த்தியான புருவத்துடன் வந்து பயமுறுத்திய பிறகு அவர் முழு நேர வில்லனாகிவிட்டார்.

வில்லத்தனமான காமெடியன்

நம்பியாரைப் போல இல்லாமல் எம்.ஆர்.ராதா காமெடி செய்துகொண்டே வில்லனாக நடிப்பார். ஆங்கிலச் சொற்களை அதிகம் பயன்படுத்துவார். பகுத்தறிவையும் ஆங்கில பழக்க வழக்கங்களையும் உயர்த்தும் வகையில் இங்குள்ள சில மூட நம்பிக்கைகளை நையாண்டி செய்வார். இவருடைய வில்லத்தனமான காமெடியை மக்கள் வெகுவாக ரசித்தனர். எம்.ஆர். ராதா பெரியாரின் தொண்டர் என்பதால் அவர் நாடகங்களுக்கு காங்கிரஸ் ஆட்சியில் பல வகையிலும் தொல்லைகள் கொடுக்கப்பட்டன. ஆனால், அவர் அஞ்சாமல் தன் பகுத்தறிவு பிரசார நாடகங்களை வெற்றிகரமாக நடத்திவிடுவார். எம்.ஆர். ராதாவின் துணிச்சலைக் கண்டு எம்.ஜி.ஆர் அவரை மிகவும் மதித்தார். அவர் முன்னால் உட்காரக்கூட மாட்டார். அண்ணே என்றுதான் அவரை அழைப்பார். எம்.ஆர். ராதாவுக்கும் எம்.ஜி.ஆரை வெகுவாக பிடித்திருந்தது, மற்ற முன்னணி நடிகர்கள் அவர் நடிப்பதை மக்கள் பார்க்க விடாமல் அவர் முகம் மறையும்படி வந்து நின்றுகொள்கின்றனர் என்று எம்.ஆர். ராதா பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். எம்.ஜி. ஆர். படங்களில் அவருக்கு இந்தத் தொல்லை கிடையாது. சுதந்திரமாக பெரியாரின் சிந்தனைகளையும் பரப்பினார்.

சிந்தனை சிரிப்பு வழங்கிய கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்

மதுரை வீரன், ராஜா தேசிங்கு, சக்கரவர்த்தி திருமகள் போன்ற படங்களில் கலைவாணரும் அவர் மனைவி டி.ஏ. மதுரமும் நகைச்சுவை நடிப்பில் ஜொலித்தனர். கலைவாணரிடம் இருந்து எம்.ஜி.ஆர் எளிமையும் கொடைப்பண்பையும் கற்றுக்கொண்டார். அறுந்த செருப்பை உதறிவிட்டு வந்த எம்.ஜி.ஆர் கலைவாணரிடம் தனக்கு புதுச்செருப்பு வாங்கவேண்டும் என்றார். அப்போது கலைவாணர் அவரது அறுந்த செருப்புகளைக் கொண்டுவந்து கொடுத்தார். அறுந்துபோன செருப்பின் வார் தைக்கப்பட்டிருந்தது. கலைவாணர் எம்.ஜி.ஆருக்கு

எளிமையான வாழ்க்கையைச் சொல்லிக்கொடுத்தார். தன் கணவரைத் தவிர வேறு யாருடனும் ஜோடி சேர்ந்து நடிக்காத டி ஏ மதுரம், லட்சுமிகாந்தன் கொலை வழக்கு காரணமாக தன் கணவர் சிறையில் இருந்தபோது வழக்கு செலவுக்காக தயாரிக்கப்பட்ட பைத்தியக்காரன் படத்தில் எம். ஜி.ஆருடன் ஜோடியாக நடித்தார்.

நாயகன் நாயகியரின் தோழர்களாக காமெடியன்கள்

குலதெய்வம் ராஜகோபால் மன்னாதி மன்னன் படத்தில் நகைச்சுவை வேடத்தில் ஜி. சகுந்தலாவுடன் ஜோடியாக நடித்தார். இப்படத்தில் அச்சம் என்பது மடமையடா பாட்டில் எம்.ஜி.ஆர் கூட வரும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இதில் எம்.ஜி.ஆரும் பத்மினியும் நாட்டிய கலா மேதைகள். எம்.ஜி.ஆரின் நண்பனாக வரும் ராஜகோபாலுக்கு நடனம் ஆடத் தெரியாது. இவர் நடனம் கற்றுக்கொண்டால்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று சகுந்தலா நிபந்தனை விதிப்பார். இவர் கை கால்களில் கயிறு கட்டிக்கொண்டு தை தை என்று ஆட்டுவது சிரிப்பாக இருக்கும். இதுவே காமெடியனை கதாநாயகனிடம் இருந்து குறைத்துக் காட்டுவதற்கான பாத்திரப்படைப்பு முறை ஆகும்.

அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில் இளைஞரான டனால் தங்கவேலு செருப்பு தைக்கும் கிழவனாக வருவார். அந்தப் படத்தில் சாரங்கபாணி எம்.என். ராஜத்துடன் சேர்ந்து மெயின் காமெடியனாக நடித்திருப்பார். தங்கவேலு, ராஜா தேசிங்கில் ராகினியுடன் ஜோடியாக நடித்திருப்பார். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு நண்பனாக நாகேஷும் ஜெயலலிதாவுக்கு தோழியாக மாதவியும் நடித்தனர்.

எம்.ஜி.ஆர், சந்திரபாபு

எம்.ஜி.ஆருடன் பிற்காலத்தில் பல சர்ச்சைகளில் சிக்கிய சந்திரபாபு ஆரம்பத்தில் எம்.ஜி.ஆரின் அன்புக்குரியவராக இருந்தார். அவரது நாடோடி மன்னன், குலேபகாவலி போன்ற வெற்றிப் படங்களில் இடம்பெற்றிருந்தார். சிவாஜியைவிட ஒரு படத்தில் அதிக சம்பளம் கேட்டு

வாங்கினார். நாகேஷ் கால்ஷீட்டை சொதப்பியபோது அவருக்குப் பதிலாக சோ பின்பு தேங்காய் சீனிவாசன், ஐசரி வேலன் போன்ற சிரிப்பு நடிகர்களை ஒப்பந்தம் செய்தார். எம்.ஜி.ஆர் தன் படங்கள் வெற்றிபெற மற்ற எவரையும் நம்பி இருக்கவில்லை அடுத்த தகுதியான கலைஞர்களைத் தெரிவு செய்தார். பின்பு தன் தவற்றை உணர்ந்து திரும்பி வந்தபோது அவர்களை மன்னித்து வாய்ப்பு தரும் மனோபாவமும் எம்.ஜி.ஆருக்கு இருந்தது. யாரையும் அவர் தன் ஜென்ம விரோதியாக கருதவில்லை. தன் வெற்றிப் பாதையில் வரும் தடைக்கற்களை மீண்டும் வராமல் அப்புறப்படுத்துவதில் மட்டும் அவர் முனைப்பாக இருந்தார்.

சந்திரபாபுவின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட சோகமும் விரக்தியும் அவமானமும் பொது வாழ்க்கையில் அகராதியாகப் பேசத் தூண்டியது. எம்.ஜி.ஆர். சந்திரபாபுவை ஒதுக்கியதும் திரையுலகமே இவரை ஒதுக்கிவிட்டது. சந்திரபாபு சிவாஜியிடம் போய் வாய்ப்பு கேட்டும் கிடைக்கவில்லை. சந்திரபாபு மிகவும் கஷ்டப்படுவதை அறிந்து பின்பு எம்.ஜி.ஆரே அடிமைப்பெண் படத்தில் வாய்ப்பளித்தார்.

எம்.ஜி.ஆர், நாகேஷ்

நாகேஷ் முதன்முதலில் நாடகத்தில் நடித்தபோது ஐயோ வயிற்று வலி என்ற ஒரே வசனம் மட்டும் பேசி நடித்தார். அந்த நாடகத்துக்கு தலைமை வகித்த எம்.ஜி.ஆர் ஒரே வசனத்தை விதவிதமாக பேசி நடித்த நாகேஷை தன் பாராட்டுரையில் குறிப்பிட்டார். நேரில் அழைத்து பாராட்டினார். நாகேஷ் பல படங்களில் எம்.ஜி.ஆருடன் நடித்தார். குறிப்பாக தேவர் படங்களில் நாகேஷுக்கு ஒரு பாட்டும் வைக்கப்பட்டது. நாகேஷ், மனோரமா ஜோடி மக்களால் பெரிதும் விரும்பப்பட்டது. அதற்கு முன்பு என்.எஸ்.கே – டி ஏ மதுரம், தங்கவேலு - சரோஜா , சி டி ராஜகாந்தம் என்று கணவன் மனைவியர் காமெடி நடிப்பில் கலக்கி வந்தனர்.

நாகேஷின் ஒல்லி உடல்வாகு காமெடி நடிப்புக்கு ஏற்றதாக அமைந்தது. சில வருடங்கள் இவரை தன் படங்களில் இருந்து விலக்கி வைத்த எம் ஜி ஆர், மீண்டும் தன் படங்களில் வாய்ப்பளித்தார். உலகம் சுற்றும் வாலிபன் படத்தின் வெளிநாட்டு படப்பிடிப்புக்குச் சென்ற 25 பேர் அடங்கிய குழுவில் நாகேஷும் இடம்பெற்றிருந்தார். அக்குழு ஹாங்காங் வந்தபோது நாகேஷின் பிறந்தநாள் வந்தது. அன்று எம்.ஜி.ஆர் பெரிய விருந்து ஏற்பாடு செய்து ஒன்பது வைரக்கல் பதித்த மோதிரம் ஒன்றை நாகேஷுக்கு பரிசளித்தார். மீனவ நண்பன், உரிமைக்குரல் போன்ற எம்.ஜி.ஆரின் பிற்கால படங்களிலும் நாகேஷ் இடம்பெற்றார்.



எம்.ஜி.ஆர், தேங்காய் சீனிவாசன்

கும்பகோணம் தேர்தல் கூட்டத்தில் அறிமுகமான தேங்காய் சீனிவாசன், எம்.ஜி.ஆரிடம் மிகுந்த அன்பு உடையவர்.
ரிக்ஷாக்காரன் படத்தில் இயக்குநரிடம் தனக்கு இரு பாடல்காட்சி வைக்கும்படி சீனிவாசன் கூறினார். அதை அவர் அப்படியே எம்.ஜி.ஆரிடம் கூற, எம்.ஜி.ஆர் சிரித்த படியே சாங் வேணுமா வச்சுடலாம் என்றார். எம்.ஜி.ஆர் ஏதோ கேலியாக கூறுவதாக சீனிவாசன் நினைத்தார். ஆனால் அந்தப் படத்தில் ''பம்பை உடுக்கை கட்டி பரிவட்டம் மேலே கட்டி'' என்ற பாடலில் தன்னோடு பாட்டு முழுவதும் சேர்ந்து ஆடும் வாய்ப்பைத் தந்தார். எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகு சீனிவாசன் சிவாஜிகணேசனை வைத்து ஒரு படம் தயாரிக்கப் போவதாக எம்.ஜி.ஆரிடம் கூறினார். எம்.ஜி.ஆர் இப்போது தயாரிப்பு லாபமாக இல்லை வேண்டாம் என்று அறிவுறுத்தினார். சீனிவாசன் அதைக் காதில் வாங்காமல்

சிவாஜியை வைத்து 'கிருஷ்ணன் வந்தான்' என்ற படத்தை எடுத்து கையை சுட்டுக் கொண்டார். இதை சீனிவாசன் எம்.ஜி.ஆரிடம் சொன்னதும் ''உனக்கு பட்டால் தான் புத்தி வரும், போ'' என்று சொல்லிவிட்டார். தேங்காய் சீனிவாசன் போனதும் அவரை நினைத்து எம்.ஜி.ஆர் கவலைப்பட்டார். உடனே தன் பணியாள் ஒருவரிடம் 25 லட்ச ரூபாயைக் கொடுத்து தேங்காய் சீனிவாசனிடம் கொடுக்கும்படி அனுப்பினார்.

ஐசரி வேலன்

எம்.ஜி.ஆர் படங்களில் ஆரம்பம் முதல் அவர் வரும் காட்சிகளில் மட்டும் நடித்துவந்த பழம்பெரும் நடிகரும் அவரது மெய்க்காவலரில் ஒருவருமான திருப்பதிசாமியின் மருமகன் ஐசரி வேலன் ஆவார். இவர் மகன் ஐசரி கணேஷ் தன் தந்தை வேலனின் பெயரால் வேல்ஸ் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளார். எம்.ஜி.ஆர் படப்பிடிப்பில் இருக்கும்போது ஒரு ரிவால்வரை மஞ்சள் பையில் வைத்து கையில் சுற்றி தொங்கவிட்டபடி திருப்பதிசாமி அவருடன் அத்தளத்தில் இருப்பார். எம்.ஜி.ஆர் குண்டடிப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோது அவரை பார்க்க வருபவர்களின் பெயர்ப்பட்டியல் திருப்பதிசாமியிடமே இருந்தது. ரகசிய போலீசு 115 படத்தில் அம்முக்குட்டி புஷ்பமாலாவின் சிங்கப்பூர் மச்சானாகவும் படகோட்டியில் முதல் காட்சியில் எம்.ஜி.ஆருக்கு அப்பாவாகவும் திருப்பதிசாமி நடித்திருப்பார். ஐசரி வேலன் நேற்று இன்று நாளை, இதயக்கனி போன்ற படங்களில் நடித்திருந்தார்.

எம்.ஜி.ஆர், சோ

சோ சட்டத்துறையிலும் நாடகத் துறையிலும் வல்லவர். அரசியல் விமர்சகர். அவர் பார்மகளே பார் படத்தில் காமெடியனாக அறிமுகம் ஆனார். எம்.ஜி.ஆருடன் எங்கள் தங்கம், தேடி வந்த மாப்பிள்ளை, ஒளிவிளக்கு, அடிமைப்பெண், என் அண்ணன் போன்ற வெற்றிப் படங்களில் காமெடியனாக நடித்திருந்தார். எம்.ஜி.ஆரை நேரிலும் தன் துக்ளக் பத்திரிகையிலும் அதிகமாக

விமர்சித்துள்ளார். அதே சமயம் எம்.ஜி.ஆரின் கொடைப்பண்பை அதிகமாகப் பாராட்டி போற்றியவரும் இவரே. இவரது முட்டை விழியும் ஒல்லி உடம்பும் பார்ப்பவருக்கு சிரிப்பை வரவழைத்தன.

நகைச்சுவையும் எம் ஜி ஆரும்

சபாஷ் மாப்பிள்ளை என்ற படம் நடிகை மாலினியின் சொந்தத் தயாரிப்பு. இப்படத்தில் எம்.ஜி.ஆர் காமெடி கதாநாயகனாகவே நடித்தார். இதன் படப்பிடிப்பு பம்பாயில் நடந்தது. அதுபோல அறிஞர் அண்ணா எழுதிய நல்லவன் வாழ்வான் கதையில் கதாநாயகன் எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பான். அந்தப் படத்தில் நடித்த எம்.ஜி.ஆரும் படம் முழுக்க சிரித்துக்கொண்டே இருப்பார். அதன் க்ளைமேக்சில் எம்.ஆர். ராதாவை ஒரு சண்டைக் காட்சியில் தன்னுடன் நடிக்கவைத்தார். தண்ணீரில் எடுக்கப்பட்ட அந்தக் காட்சியில் நடித்ததனால் எம்.ஆர். ராதாவுக்கு சளி, இருமல் தொந்தரவு வந்தது. எம்.ஜி.ஆர் இதைக் கேட்டதும் மிகவும் கவலைப்பட்டார். எம்.ஆர். ராதா சுகமாகும் வரை தினமும் எம்.ஜி.ஆர் அவர் வீட்டுக்குப் போய் அவருடன் உட்கார்ந்திருப்பார். அவர்களின் நட்புகுறித்து விளக்கும்போது ராதாரவி இதனை குறிப்பிட்டார்.

நாடோடியில் எம் ஜி ஆரின் மைமிங்

ஒரு நடிகனுக்கு சவாலாக இருப்பது காமெடி என்பதை அறிந்த எம்.ஜி.ஆர். தான் நடித்த நாடோடி படத்தில் சார்லி சாப்ளின் போல மைமிங் செய்தார். சரோஜாதேவியும் எம்.ஜி.ஆரும் ஒரு மேசை முன் உட்கார்ந்து மேலை நாட்டு உணவு வகைகளை உண்பது போல உடல்மொழியால் மட்டுமே நடித்தனர்.

எம்.ஜி.ஆர் சங்கே முழங்கு படத்தில் தன் தங்கைக்கு பெண் வீட்டாராகவும் மாப்பிள்ளை வீட்டாராகவும் இருந்து திருமணப்பேச்சு நடத்தும் காட்சியில் அவர் ஆணாகவும் பெண்ணாகவும் மாறி மாறிப் பேசி நடித்து நகைச்சுவையை வழங்குவார். வாய்க்குள் வெற்றிலையை அதக்கி வைத்திருப்பதுபோல அவருடைய பேச்சும்

அங்கவஸ்திரத்தை சேலை போல போர்த்திக்கொண்டு நடிக்கும் அவரது உடல்மொழியும் ஆண் பெண் என மாறி வரும் முக பாவனைகளும் கதாபாத்திரங்களுக்கு ஏற்றபடி வெகு பொருத்தமாக அமைந்திருக்கும். அவருடைய நகைச்சுவை நடிப்புத் திறனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

மாறு வேடங்களில் நகைச்சுவை

எம்.ஜி.ஆர் மாறு வேடங்களில் வரும் காட்சிகளைத் தன் இயல்பான கதாநாயகன் நடிப்புக்கு அப்பாற்பட்ட நடிப்புத் திறனைக் காட்ட பயன்படுத்துவார். மலைக்கள்ளன் மற்றும் நீரும் நெருப்பும் படங்களில் அவர் ஒரு சீனாக்காரனாக வரும் காட்சிகளில் அவர் இரண்டு கால்களையும் சேர்த்து வைத்தபடி நடந்து வருவதும் அவரது சீனமொழி பேச்சும் தலையாட்டுவதும் உடல் அசைப்பதும் என அனைத்து பாவனைகளும் சிரிப்பை வரவழைக்கும். குமரிக்கோட்டம் படத்தில் நூறு ரூபாய்க்காக அவர் அசோகனை சிரிக்க வைக்க முயலும் காட்சியில் பஃபூனை போல நடித்திருப்பார். இவ்வாறு மாறு வேடங்களில் பல காட்சிகளில் எம்.ஜி.ஆர். தன் காமெடி நடிப்புத் திறனை ஓரளவு வெளிப்படுத்தி மனநிறைவு பெற்றார்.

6. நடிப்புத் திறனைக் காட்ட மாறு வேடங்கள் புனைந்த எம்.ஜி.ஆர்.!

எம்.ஜி.ஆர் இளைஞனாக நடித்தது அவருக்கு வெற்றியைக் கொடுத்தாலும் அது அவரது கலை ஆர்வம் அல்லது நடிப்பு ஆர்வத்தை நிறைவு செய்யவில்லை. அதனால் அவர் வேறு பல கதாபாத்திரங்களிலும் நடிக்க விரும்பி தன் படங்களில் அவற்றை மாறு வேடக் காட்சிகளாக அமைத்தார். மாறு வேடத்தில் நடிக்கும்போது அதற்கேற்ற உடை, குரல், நடிப்பு என அனைத்தையும் நேர்த்தியாகச் செய்தார். காதல் சண்டை எனக் காட்சிக்குக் காட்சி துள்ளிச் செல்லும் ஹீரோவாக நடிக்கும் எம்.ஜி.ஆர் கிழவனாகவும் பெண்ணாகவும் பல்வேறு தொழில் செய்பவராகவும் நடிப்பதையும் ஆடிப் பாடியதையும் ரசிகர்கள் மிகவும் ரசித்தனர்.

பெண் வேடத்தில் எம்.ஜி.ஆர்

எம்ஜிஆர் புதுமைப்பித்தனில் நடன மங்கையாகவும் காதல் வாகனம் படத்தில் நவீன மங்கையாகவும் சில காட்சிகளில் வருவார். கவுன் போட்ட இளம்பெண்ணாக எம்ஜிஆரின் வேடப் பொருத்தமும் பெண்ணைப் போல அவர் கொஞ்சிப் பேசுவதும் நளினமாக நடப்பதும் ரசிகரகளை வெகுவாக கவர்ந்தன. சங்கே முழங்கு படத்தில் பெண்ணாக வேடம் போடாவிட்டாலும் திருமண சம்பந்தம் பேசும் பெண்ணைப் போல நடித்துக் காட்டியிருப்பார். அதைப் போல மாட்டுக்கார வேலனில், வேலன் எம்ஜிஆர் தன்னை ரகு என நினைத்து காதலிக்கும் ஜெயலலிதாவைப் பற்றி தெரிவிக்கும்போது,

''ஒரு பக்கம் பாக்குறா
ஒரு கண்ணை சாய்க்கிறா
அவ உதட்டை கடிச்சிக்கிட்டு மெதுவா
சிரிக்குறா சிரிக்குறா சிரிக்குறா''

என்று பாடி ஒரு பெண்ணைப் போல ரகு எம்ஜிஆரிடம் நடித்துக் காட்டுவார். அந்தப் பாட்டில் அவர் நடிப்பை ரசிகர்கள் மிகவும் ரசித்தனர். இந்தக் காட்சிக்கு திரையரங்கில் கைதட்டலும் விசில் சத்தமும் காதைப் பிளக்கும்.

சாமியாராக எம்.ஜி.ஆர்

நல்லவன் வாழ்வான், ஆனந்த ஜோதி, இதய வீணை போன்ற படங்களில் சாமியாரைப் போல வருவார். நல்லவன் வாழ்வான் படத்தில் கொலை பழி சுமந்து ஒளிந்து வாழும் நிலையில் உண்மைக் கொலைகாரனை அறிய அதே ஊரில் எம்.ஜி.ஆர் சாமியாராக வந்து தங்கியிருப்பார். அப்போது ''ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் - அவன் அன்பு மனங்களில் சிரிக்கின்றான்'' என்ற பாட்டுப் பாடுவார்.

இதய வீணையில் திருட்டு பழி சுமந்த அண்ணனான எம்.ஜி.ஆர் தன் தங்கை லட்சுமியின் கல்யாணத்துக்கு சாமியார் வேடத்தில் வந்து ''திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி – திருமணம் கொண்டாள் இனிதாக'' என்று பாடி வாழ்த்துவார். இந்தப் படப்பிடிப்பின் போது எம்.ஜி.ஆர் தன்னுடன் பேசிக்கொண்டிருந்த ஜி சகுந்தலாவிடம் என் கடைசிக்காலம் இப்படிதான் (ஆன்மிக வழியில்) இருக்கப் போகிறது என்று தன் சாமியார் கோலத்தைக் காட்டினாராம். அதன் பிறகு அவர் திமுக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். ரசிகர்கள் ஆங்காங்கே தாமரை கொடியை ஏற்றி அவர்களாகவே புது கட்சி தொடங்கினர். பின்பு எம்.ஜி.ஆர் அவர்களை ஒருங்கிணைத்து ஓர் அரசியல் தலைவராகிவிட்டார். அவரை திமுகவிலிருந்து வெளியேற்றாமல் விட்டிருந்தால் ஒரு வேளை அவர் ரஜினியைப் போல ஓர் ஆன்மிகவாதியாகி இருப்பார். திமுக தன் சொந்தக் காசில் சூனியம் வைத்துக்கொண்டது.

முஸ்லிம் வேடத்தில் எம்.ஜி.ஆர்

மலைக்கள்ளன், மகாதேவி, சங்கே முழங்கு, போன்ற படங்களில் எம்.ஜி.ஆர் துப்பு துலக்குவதற்காக பட்டாணி முஸ்லிம் வேடமிட்டு வந்தார். மலைக்கள்ளனில் அப்துல் ரஹீம் என்னும் வடநாட்டு முஸ்லிம் வேடம் ஏற்றிருப்பார். தமிழை அன்றைய வடநாட்டுக்காரர் போல பேசுவார். இன்ஸ்பெக்டர் நடத்தும் விசாரணையில் அவரது திருட்டுப்

பார்வையும் உடல் மொழியும் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுத் தந்தது.



மகாதேவியில் லப்பை முஸ்லிம் போல மாறு வேடமிட்டு வந்து மக்களுக்கு இளவரசன் உயிரோடு இருக்கும் உண்மையை தாயத்து மூலமாக வெளிப்படுத்துவார். தாயத்தை விற்பதற்காக ''தாயத்து தாயத்து – சில சண்டாளர் வேலைகளை சனங்களின் மத்தியிலே தண்டோரா போட வரும் தாயத்து'' எனப் பாடுவார். அப்போது அவர் தலைப்பாகையில் காதோரத்தில் சொருகிய பத்தி புகைந்துகொண்டிருக்கும். கண் இழந்தவர் போல வருவதால் கண்களைச் சுற்றி கறுப்பாகத் தோன்றும். உடையும் வெகு பொருத்தமாக இருக்கும். கழுத்தில் தாயத்து அணிந்திருப்பார். கையில் டேப் வைத்து அடித்துக்கொண்டு வருவார். கைலியை உயர்த்திக் கட்டியிருப்பார். தோளில் ஒரு துணி மூட்டை தொங்கும்.

சங்கே முழங்கு படத்தில் வீண் கொலைப் பழியேற்று ஊரை விட்டு முஸ்லிம் பாய் வேஷத்தில் ரயிலேறிவிடுவார். அப்போது தன் காதலி லக்ஷ்மியை அதே வேஷத்தில் சந்தித்து அவருடன் பேசுகின்ற காட்சிகளில் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் வசனங்கள் உருக்கமானவை. வசதியான முஸ்லிமாக வருவதால் தலையில் குஞ்சம் தொங்கும் உயரமான குல்லா, கையில் ஒரு ப்ரீஃப் கேஸ் மற்றும் சிறு கைத்தடி வைத்திருப்பார், கண்ணில் கூலிங் கிளாஸ் அணிந்திருப்பார். கதாபாத்திரத்துக்கு ஏற்றபடி மேக்கப், உடை, உடல் மொழி

ஆகியவற்றில் சின்னச் சின்ன விஷயங்களில் கூட எம்.ஜி.ஆர் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பார்.

பஞ்சாப் சிங்காக எம்.ஜி.ஆர்

சங்கே முழங்கு படத்தில் எம்.ஜி.ஆர் கொலைப்பழியிலிருந்து தப்பிக்கவும் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவும் பஞ்சாப் சென்று கிருபால் சிங் எனத் தன் பெயரையும் உருவத்தையும் மாற்றிக்கொள்வார். அங்கேயே ஐ.பி.எஸ் முடித்து தமிழகம் வந்து காவல்துறை அதிகாரியாகி உண்மையான கொலையாளியைக் கண்டு பிடிப்பார்... (சிம்பு நடித்த அச்சம் என்பது மடமையடா கதையும் இது போன்றதுதான்) எம்.ஜி.ஆருக்கு சிங் வேஷம் மிகவும் பொருத்தமாக இருக்கும். சிங்குகளைப் போல அவரும் தலையில் டர்பன், முகத்தில் சிறிய குருந்தாடி என வருவார். இவ்வேடம் அவருக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்.

குடியிருந்த கோயிலில் ஆனந்த் எம்.ஜி.ஆர், திருடன் பாபுவாக கொள்ளைக்கூட்டத்தில் சேர்ந்தபோது ஒரு முறை மட்டும் சிங் வேடம் போடுவார். இந்த வேஷத்துடன்தான் எல்.விஜயலட்சுமியுடன் இணைந்து 'ஆடலுடன் பாடலை கேட்டு ரசிப்பதில் தான் சுகம் சுகம் சுகம்' என்ற பாட்டுக்கு பங்க்ரா நடனம் ஆடியிருப்பார். அதிலும் வேஷப் பொருத்தும் மிகச் சரியாக இருக்கும்.

பூட்டுக்காரராக எம்.ஜி.ஆர்

ஆனந்த ஜோதியில் படத்தில் எம்.ஜி.ஆர் கள்ள நோட்டு அடிக்கும் கும்பலைத் தேடும் காவல்துறை அதிகாரி மாறனாக நடித்தார். இதில் பூட்டு விற்பவரை போல மாறு வேடம் போட்டு கள்ளநோட்டு மாற்றும் கும்பலைக் கண்டுபிடிக்க ஊரைச் சுற்றி வருவார். அவரது பம்பை க்ராப், முறுக்கு மீசை, ஏற்றிக்கட்டிய கைலி, கையில்லாத ஓவர் கோட், தோளில் தொங்கும் இரும்புப்பெட்டி, ஒரு கையில் பெரிய இரும்பு வலையத்தில் கோக்கப்பட்ட பல தினுசு சாவிகள் இத்துடன் காலை அகட்டி வைத்து நடக்கும் நடை எனப் பொருத்தமாக மாறு வேடம் போட்டிருப்பார். பூட்டுச் சாவி ரிப்பேர் என்று தொடங்கும் ஒரு பாட்டைப் பாடுவார்.

அதில் பூட்டும் சாவியும் என்ற சொற்கள் சமூக சிந்தனையோடு இடம்பெற்றன. காங்கிரஸ்காரர்களின் வெற்றுப்பேச்சுக்கு வாய்ப்பூட்டு போட வேண்டும் என்றும் பாடுவார்.

வளையல்காரராக எம்.ஜி.ஆர்

படகோட்டி நம்பியாரால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் சரோஜா தேவியைச் சந்திக்க எம்.ஜி.ஆர் வளையல்காரராக வருவார். அந்த வீட்டில் நம்பியார் – சரோஜாதேவி திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கும் அப்போது எம்.ஜி.ஆர் கறுப்பு மேக்கப்பில் தலையில் வட்டக் குடுமி, பெரிய வயிறு, மேலே கனத்த கோட், முகத்தில் ஒரு கறுப்பு மரு, பெரிய உருண்ட மீசை, தோளில் வளையல் பெட்டி கையில் வளையல் சரம் எனத் தன் குண்டு உடம்பைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து ஒரு சோபாவில் பொத் என விழுவார். அந்தத் தோற்றத்தில் அவரைப் படம் பார்க்கும் புதியவர்களால் அடையாளம் கண்டுகொள்ள இயலாது.

"கல்யாணப் பொண்ணு கண்ணான கண்ணு - கொண்டாடி வரும் வளையல் – அம்மா பூவோடு வருமே பொட்டோடு வருமே - சிங்காரத் தங்க வளையல்'' என்ற பாட்டும் பாடி வளையல்களை அந்த வீட்டில் இருக்கும் பெண்களுக்கு விற்பார். இந்தக் காட்சியில் வயதான ஒரு தம்பதியர் வரும்போது 'மாமனாரை மாமியாரை சாமியாரா மாத்திவிட மந்திரிச்சு தந்த வளையல்' மற்றும் 'இளங்காளையர்கள் கெஞ்சிவர கன்னியர்கள் கொஞ்சி வர தூதாக வந்த வளையல்' என்ற வரிகள் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன.

மின்சாரத்துறை ஊழியர்

இரகசியப் போலிஸ் 115 படத்தில் மின் பயன்பாட்டைப் பதிவுசெய்யும் மின்சாரத் துறை ஊழியராக வயதான தோற்றத்தில் வருவார். தலையில் தொப்பி, கண்ணில் ஒரு காந்தி கண்ணாடி, கையில் ஒரு பதிவேடு, குடு குடு நடையுடன் அவரது நடிப்பும் தோற்றமும் பாராட்டும்படியாக

இருக்கும். துப்பறியும் நோக்கில் எம்.ஜி.ஆர் மாறுவேடத்தில் வரும் இக்காட்சி நகைச்சுவைக் காட்சியாக அமைந்திருக்கும்.

வெஸ்டெர்ன் டான்ஸ் மாஸ்டராக எம்.ஜி.ஆர்




'என் கடமை' படத்தில் எம்.ஜி.ஆர் ஒரு கடமை தவறாத போலீஸ் அதிகாரி. அவருக்கு எம்.ஆர்.ராதாமீது சந்தேகம் இருப்பதால் அவர் வீட்டுக்குள் போய் வந்து துப்பு கண்டுபிடிக்க வழி தேடுவார். அப்போது சரோஜாதேவிக்கு வெஸ்டெர்ன் டான்ஸ் கற்றுத்தர ஒரு மாஸ்டர் வேண்டும் என்ற விளம்பரத்தைப் பார்த்ததும் எம்.ஜி.ஆர் அவர் வீட்டுக்குப் போய் பணியில் சேர்ந்து விடுவார். அவரை அடையாளம் கண்டு கொண்ட சரோஜாதேவியிடம் உனக்காகத்தான் இந்த வேடத்தில் வந்தேன் என்று சொல்லிவிடுவார். கடைசியில் குற்றவாளி எம்.ஆர்.ராதா அல்ல அவருக்கு வைத்தியம் பார்க்க வரும் டாக்டர் என்பதை கண்டுபிடிப்பார். டாக்டர் வேடத்தில் பாலாஜி நடித்தார். அவர் எம்.ஜி.ஆருடன் நடித்த ஒரே படம் இதுதான். யாரது யாரது தங்கமா என்ற பாடலுக்கு எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் வெஸ்டெர்ன் டான்ஸ் ஆடுவார்கள். படிக்கட்டில் சுற்றி வந்து ஸ்டெப் போட்டு இருவரும் ஆடுவது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. எம்.ஜி.ஆர் கறுப்புத் தாடி கறுப்புக் கண்ணாடி என வித்தியாசமான கெட்டப்பில் வருவார். அடிக்கடி தாடியைத் தடவிக்கொள்வார். ஹீல்ஸ் ஷூ போட்டு தன்னை நல்ல உயரமாகக் காட்டியிருப்பார்.

கதா காலட்சேபம் செய்பவராக எம்.ஜி.ஆர்

எங்கள் தங்கம் படத்தில் எம்.ஜி.ஆர் போலீஸுக்கு பயந்து ஒரு காலட்சேபம் நடத்தும் இடத்துக்கு வந்து அங்கு சந்தர்ப்பச் சூழ்நிலையால் அவரே காலட்சேபம் செய்வார். இந்து சமயத்தின் பார்ப்பனியக் கருத்துகளுக்கு எதிரான இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதால் இவரது காலட்சேபன் வழக்கத்துக்கு மாறானதாக இருக்கும். 1967-ல் வெளிவந்த படம் என்பதால் அப்போது அமெரிக்கா விண்வெளி வீரரான நீல் ஆம்ஸ்ட்ராங்க் சந்திர மண்டலத்தில் கால் வைத்த நிகழ்ச்சி பிரபலமாகியிருந்தது. எனவே அதையே தம் காலட்சேபப் பாடுபொருளாக்கி மூட நம்பிக்கைகளைக் கேலி செய்து ஒரு கலகலப்பான நிகழ்ச்சியை நடத்துவார். முழுக்க முழுக்க பின்னணி குரல் கொடுக்கப்பட்டிருக்கும். இருப்பினும் இவரது நடிப்பும் முக பாவனைகளும் காண்போர் மனதைக் கவரும். மேலும் இவரது வேடப் பொருத்தம் வியக்க வைப்பதாக அமையும். மொட்டைத் தலை அதில் பட்டை விபூதி, சிவந்த நிறம், மேல் அங்கவஸ்திரம், கைகளில் தப்பளா கட்டை, கழுத்தில் மாலை என வெகு நேர்த்தியாக அவரது மேக்கப் அமையும். அவர் தலையைத் திருப்பி இரு பக்கம் இருப்பவரையும் பார்த்துப் பேசுவதும் கைகளை வீசி வீசி பாடுவதும் அவரது முக பாவமும் நொடிக்கு நொடி மாறும் முக பாவங்களும் அந்நிகழ்ச்சியை ரசிக்க வைக்கும் அவரது நடிப்புத் திறனுக்கு இக்காட்சி ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும்.

7. எம்.ஜி.ஆரின் கேமரா தொழில்நுட்பம்



எம்.ஜி.ஆரும் கேமராவும்

எம்.ஜி.ஆரின் வெற்றியில் சினிமா தொழில்நுட்பம் பற்றிய அவரது அறிவு முக்கியப் பங்கு வகித்தது. அவர் தன் படங்களில் கேமரா கோணம், உடை, ஒப்பனை, படத்தொகுப்பு, படம் வெளியிடும் நாள், வெளியிடும் திரையரங்கு, பட விநியோகம், ரசிகர் மன்ற செயல்பாடுகள் என அனைத்து விஷயங்களும் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும்படி கவனித்தார்.

எம்.ஜி.ஆர் திரையில் தன்னை அழகாகக் காட்ட வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். அதற்காக டிஃப்யூஸ் போன்ற சில விசேஷ தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தினார். வித விதமான தொப்பிகள் வைத்து நடிக்கும் எம்.ஜி.ஆர் ஒரு காட்சியில் கூட தன் முகத்தில் தொப்பியின் நிழல் விழாதபடி கவனமாக இருப்பார். லைட்டிங் சரியாக இருக்கும்படி அவர் கவனித்ததால் இன்றும் அவரது படங்களைச் சின்னத்திரையிலும் வெள்ளித் திரையிலும் தெளிவாக உள்ளன. இவ்வாறு மற்ற பழைய

படங்கள் இருப்பதில்லை அவை ஒரே இருட்டும் வெளிச்சமுமாக இருக்கிறதே தவிர நடிப்பவரின் முகபாவனை சரியாகத் தெரிவதில்லை.

டிரான்சிஸ்டரை பிரித்து சேர்த்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆரின் தொழில் நுட்ப அறிவு சினிமாவோடு மட்டும் நின்றுவிடவில்லை மற்ற விஷயங்களிலும் அவருக்கு இதே அறிவும் ஆர்வமும் இருந்தது. முன்னாள் சபாநாயகர் பி.ஹெச் பாண்டியன் ஒரு பேட்டியில் எம்.ஜி.ஆரை பற்றி பேசும்போது. அவர் ஒரு டிரான்சிஸ்டரை பிரித்து திரும்பவும் அசெம்பிள் செய்ததை நான் பார்த்தேன் என்றார். ஒரு கேமரா புதிதாக அறிமுகமானவுடன் எம்.ஜி.ஆர் அதை வாங்கி அது எப்படிச் செயல்படுகிறது அதன் விசேஷ அமைப்புகள் என்னென்ன என்பதை அவர் அறிந்துகொள்வார். பின்பு ஒரு புகைப்படக்காரரை அழைத்து அவரிடம் காண்பித்து மற்ற விஷயங்களைக் கேட்டறிவார். அவரிடம் இந்த இடத்தில் நின்று இந்தக் கோணத்தில் என்னைப் படம் எடு என்பார் அந்தப் படங்கள் அற்புதமாக வந்திருக்கும்.

கேமராக்காரர்கள் எழுதிய நூல்கள்

புகைப்படக்காரர் எஸ்.எஸ் ராமகிருஷ்ணன் எம்.ஜி.ஆர் பற்றி எழுதிய நூலில் எம்.ஜி.ஆரின் கேமரா அறிவு குறித்து விரிவாகத் தெரிவித்துள்ளார். சங்கர் ராவ் என்ற ஸ்டில் போட்டோகிராபரும் எம்.ஜி.ஆரின் குணம், மனம் பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார். ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் அவரைப் பற்றி விரிவாகத் தெரிவித்துள்ளார்.

மூத்தவர் ஆர் என் நாகராஜ ராவ்

எம்.ஜி.ஆர் முதல்வர் ஆனதும் அவரது அழைப்பைப் பெற்று தலைமைச் செயலகத்தில் வைத்து அவரை முதல் படம் எடுத்தவர் சீனியர் போட்டோகிராபர் ஆர்.என் நாகராஜ ராவ். இவர் நாடோடி மன்னன் காலம் முதல் எம்.ஜி.ஆரின் ஸ்டில் போட்டோகிராபராக இருந்து வந்தார். இவர் ஒரு பேட்டியில் “நான் எம்.ஜி.ஆருக்கு எந்த யோசனையும் சொன்னதில்லை.

அவருக்கே போட்டோவுக்கு எந்த கலர் சரியாக இருக்கும் என்பது தெரியும். அவர் அதன்படி செய்வார். அவரை வைத்து போட்டோ எடுப்பதில் எனக்குச் சிரமமேயில்லை'' என்று கூறியிருப்பது எம்.ஜி.ஆரின் கேமரா ஞானத்தைக் காட்டுகிறது.

எம்.ஜி.ஆர் தன் படங்களில் அறிமுகமாகும் மணிமாலா, பாரதி போன்ற புதுமுகங்களை போட்டோ எடுத்து டெஸ்ட் பார்ப்பதற்காக ஆர். என் நாகராஜ ராவின் ஸ்டுடியோவுக்கு அழைத்து வருவார். அப்போது டெஸ்ட் முடிய நான்கு மணி நேரமானாலும் எம்.ஜி.ஆர் பொறுமையாக வெளியே அமர்ந்திருப்பார். தன்னுடன் நடிக்கும் நடிகையரும் திரையில் சரியாகத் தெரிய வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

எம்.ஜி.ஆரின் நினைவாற்றல்

வெற்றியாளருக்குரிய முக்கியத் தகுதிகளுள் ஒன்று நினைவாற்றல் ஆகும். எம்.ஜி.ஆரின் நினைவாற்றல் சிறப்பு குறித்து தனியாக ஒரு கட்டுரை எழுதலாம். எம்.ஜி.ஆர் தன்னை எடுக்கும் படங்களையும் காட்சிகளையும் மறக்கவே மாட்டார். அவர் முதல்வராகி பத்து நாள்கள் கழித்து "1947இல் செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி எடுத்த போட்டாவில் பத்து காப்பி எம்.ஜி.ஆர் வாங்கிவரச் சொன்னார்'' என்று ஆர்.என் நாகராஜ ராவிடம் அவர் அனுப்பிவைத்த ஆள் ஒருவர் வந்து கேட்டார். இவருக்கு வியப்பாக இருந்தது. முப்பது வருடங்களுக்கு முன்பு எடுத்த படத்தை எம்.ஜி.ஆர் தன் நினைவில் வைத்திருந்து இப்போது கேட்டு அனுப்புகிறார்.

ஒரு முறை ஒரு படத்தின் எடிட்டிங்கின் போது ''நான் கையை மடக்கி குத்துவது போன்ற ஒரு காட்சி இருக்கும் அதைக் கொண்டு வா. இந்த இடத்தில் சேர்க்க வேண்டும்'' என்றார். எடிட்டர் அப்படி ஒரு காட்சி எதுவும் ஃபிலிமில் இல்லையே என்றார். ''படத்தில் நடித்த எனக்குத் தெரியாதா, போய் நன்றாகத் தேடிப் பார்'' என்று கேட்டு எம்.ஜி.ஆர். வாங்கினார்.

எம்.ஜி.ஆரின் முடிவே இறுதியானது

எல்லாப் படத்துக்கும் இயக்குநர் ஒளிப்பதிவாளர் என்று ஆட்கள் தனித்தனியாக இருந்தாலும் எம்.ஜி.ஆர் தன் படங்களின் ஒவ்வொரு பதிவையும் குறிப்பாகத் தன் காட்சிகளை தானே முடிவு செய்வார். கேமரா வழியாக தான் பார்த்து திருப்தியான பின்பு தனது காட்சிகளை எடுக்க அனுமதிப்பார். ஒரு முறை அவர் தனிப்பிறவி படப்பிடிப்பில் கேமரா கோணம் பார்த்துக்கொண்டிருந்த போது கேமராவுக்கு முன்னால் ஓடியபடி ஒத்திகையில் ஈடுபட்டிருந்த ஜெயலலிதா விளையாட்டாக வசனத்தைச் சொல்லவும் எம்.ஜி.ஆருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கோபத்தைப் பார்த்து செட் அமைதியாகிவிட்டது. ஓடிக்கொண்டிருந்த ஜெயலலிதா சட்டென்று திரும்பிப்பார்த்தார். இறுகிய முகத்துடன் இருந்த எம்.ஜி.ஆர் "விளையாட்டு முடிந்துவிட்டதா வேலை பார்ப்போமா" என்றார். ஜெயலலிதாவுக்கு முகம் வாடிவிட்டது. சிறிது நேரம் கழித்து எம்.ஜி.ஆர் அவரை அழைத்து "பாவம் நீ என்ன செய்வாய் கல்லூரியில் படிக்க வேண்டிய பெண் நீ. இப்போது இங்கு வந்து நடிக்கிறாய்" என்று கூறி தேற்றினார். அத்துடன் "செய்யும் தொழிலை சிரத்தையுடன் செய்ய வேண்டும். வேலை செய்யுமிடத்தில் விளையாடக் கூடாது" என்று புத்திமதி கூறினார்.

லோ ஆங்கில்

எம்.ஜி.ஆர் தன் படங்களில் லோ ஆங்கிளை பயன்படுத்துவதை தவிர்ப்பார். ஆனால், ஸ்ரீதர் படத்தில் கேமரா கோணம் அவ்வாறு அமைக்கப்பட்டிருப்பதை பார்த்து ஒளிப்பதிவாளரிடம் அது குறித்து விசாரித்தார். அதனால் அவர் எம்.ஜி.ஆரிடம் "நீங்கள் பாருங்கள் இக்காட்சி அருமையாக இருக்கும்" எனறு விளக்கிக் கூறினார். அவர் லோ ஆங்கிள் அமைப்பதில் கை தேர்ந்தவர் என்பதால் எம்.ஜி.ஆர் அவர் விளக்கத்தை ஒப்புக்கொண்டார். அந்தப் படம்தான் எம்.ஜி.ஆர் உரிமைக்குரல் படத்தில் ரேக்ளா வண்டியிலிருந்து குதிப்பது போன்ற படம். இந்த ஸ்டில் எம்.ஜி.ஆர் ரசிகர்களிடையே மிகவும் புகழ் பெற்ற ஸ்டில்

ஆகும். படத்தில் அக் காட்சியைப் பார்க்கும்போது ரசிகர்களின் விசிலடித்து கைதட்டி ஆரவாரம் செய்து ரசித்தனர்.

சென்னை ஸ்ரீதரின் கண்காட்சி

எம்.ஜி.ஆர் வித விதமான கேமராக்களை வாங்கி அவற்றை கொண்டு படம் பிடிப்பதை ஸ்டில் போட்டோக்காரர்கள் அவ்வப்போது படம் எடுப்பது வழக்கம். அந்தப் படங்களைச் சேகரித்து சென்னை ஸ்ரீதர் ஒரு எம்.ஜி.ஆரும் கேமராவும் என்ற படக் கண்காட்சியை நடத்தினார். அந்தக் கண்காட்சியில் அந்தக் காலத்து கேமரா வரலாறும் இணைந்திருந்தது. ரகசிய போலீஸ் படத்தில் சிறிய அளவிலான ஒரு கேமரா கொண்டு எம்.ஜி.ஆர் படம் பிடிப்பார். அந்த ஸ்டில் படத்தின் போஸ்டரிலும் இடம்பெற்றது. ஆனால் அதற்கு பல ஆண்டுகளுக்குப் பின் வந்த இதயக்கனி படத்தில் டப்பா கேமரா எனப்படும் பழைய கேமராவை வைத்து ராதா சலூஜாவை வித விதமாகப் படம் பிடிக்கும் காட்சியும் “ஒன்றும் அறியாத பெண்ணோ, உண்மை மறைக்காத பெண்ணோ” என்ற பாட்டும் இடம்பெற்றது.

தொண்டர் மத்தியிலும் கேமரா மீது கவனம்



தேர்தல் கூட்டங்களில் பல தொண்டர்கள் வந்து எம்.ஜி.ஆருடன் படம் எடுப்பர். அவர் முதல்வரான பின்பு சில வேளைகளில் தனது காரிலேயே புகைப்படக்காரர்களை அழைத்துப் போவதும் உண்டு. நல்ல படங்கள் எடுத்தால் அவர்களுக்குப் பரிசளித்துப் பாராட்டுவார். அவர் திமுகவில் இருந்தபோது தேர்தல் நிதிக்காக தொண்டர்கள் ஐந்து

ரூபாய் பத்து ரூபாய் எனப் பணம் கொடுத்து எம்.ஜி.ஆரோடு படம் எடுக்கும் முறையும் இருந்தது, தொண்டர்கள் அதிகம் பேர் இருப்பதால் அப்போது கேமராக்காரர் அவசரமாகப் படம் எடுப்பார். ஆனால், அந்த அவசரத்திலும் எம்.ஜி.ஆர் கேமரா சரியாக இயக்கப்படுகிறதா என்பதை கவனிப்பார். ஒரு நாள் ஒருமுறை போட்டோ எடுத்த பிறகு இன்னொரு முறை எடு என்றார். போட்டோகிராபருக்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பவும் எடுக்கப் போனார் எதற்கும் ஒரு முறை கேமராவை சரி பார்த்துக்கொள்வோம் என்று சரிபார்த்தார். அதன் முன்பகுதியில் அப்பெர்ச்சர் மூடியிருந்தது. எம்.ஜி.ஆர் லென்ஸ் மூடியிருப்பதை கவனித்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டார். இரண்டாவது எடுத்த படம்தான் சரியாக வந்திருந்தது.

படப்பிடிப்பின் போதும் அரசியல் கூட்டங்களிலும் எத்தனை பேர் சுற்றி இருந்தாலும் எம்.ஜி.ஆர் தான் இருக்கும் சுற்றுப்புறத்தின் மீது ஒரு கண் வைத்தபடி கவனமாக இருப்பார். இந்த alertness அவரது வெற்றி ரகசியங்களில் ஒன்றாகும்.

ஒருவருக்கே மூன்று கேமரா பரிசு

ஆர்.என் நாகராஜ ராவின் மருமகனான சங்கர் ராவுக்கு எம்.ஜி.ஆர் இரண்டு புதுவகையான கேமராக்களை வாங்கிக் கொடுத்தார். இவர் திறமையின் மீது எம்.ஜி.ஆருக்கு நம்பிக்கை இருந்ததால் இவர் எம்.ஜி.ஆரோடு பல படங்களில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். இளைஞரான இவர் மீது எம்.ஜி.ஆருக்கு மிகுந்த பாசமும் அக்கறையும் இருந்தது. ஒரு முறை இவர் சட்டை கிழிந்திருந்ததை பார்த்த எம்.ஜி.ஆர் இவருக்கே தெரியாமல் உடனே ஆறு செட் டிரஸ் எடுத்து பரிசளித்தார். சங்கர் தயங்கியதை பார்த்த எம்.ஜி.ஆர் “நானும் உன் அண்ணன் தானே” என்று கூறி அவரை மறுக்காமல் பெற்றுக் கொள்ளும்படி செய்தார். எம்.ஜி.ஆர் மூன்றாவது முறை முதல்வரானதும் புதிதாக அறிமுகமான நவீன கேமரா பற்றி எம்.ஜி.ஆரிடம் சங்கர் தெரிவித்தார். அதன் விலையைக்

கேட்ட எம்.ஜி.ஆர் அதனை சங்கர் வாங்குவதற்கு 15,000 ரூபாய் கொடுத்தார்.

ஹாங்காங்கில் கேமரா பரிசளித்த எம்.ஜி.ஆர்

உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்புக்குத் தன் குழுவினருடன் ஹாங்காங் போன எம்.ஜி.ஆர் அங்கு ஐந்து கேமராக்களை வாங்கினார். அசோகனுக்கும் சங்கர் ராவுக்கும் இயக்குநர் ப. நீலகண்டனுக்கும் ஆளுக்கொன்றாக வழங்கினார் மற்ற இரண்டையும் “எனக்கு ஒன்று என் அண்ணனுக்கு ஒன்று” என்றார். அப்போது தன்னருகில் நின்றுகொண்டிருந்த ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தியைப் பார்த்ததும் “இவரும் என் அண்ணன்தான்” என்று அவருக்கு ஒரு கேமராவைக் கொடுத்துவிட்டார். அந்த இடத்தில் ராமமூர்த்தி இருக்கும்போது அவருக்குக் கொடுக்காமல் இருக்க எம்.ஜி.ஆருக்கு மனமில்லை. எனவே பெருந்தன்மையுடன் எம்.ஜி.ஆர் கொடுத்துவிட்டார்.

வெளியூர் படப்பிடிப்பில் பல கேமரா

ஜெய்ப்பூரில் அடிமைப்பெண் படப்பிடிப்பு நடந்த போது ஆர்.எஸ் மனோகர் நிறைய ஒட்டகங்களோடு வந்து வேங்கையனைப் பிடிக்கும் பாலைவனக்காட்சியில் எம்.ஜி.ஆர் ஒரே சமயம் ஆறு கேமராவைப் பயன்படுத்தினார். ஒரு கேமரா அடுத்த கேமரா எடுக்கும் காட்சியில் தெரியாத வகையில் இக்காட்சியைப் படமாக்கினார். அதன் பிறகு பலர் இவ்வாறு பல கேமராக்களைப் பயன்படுத்தினாலும் அதற்கு முன்னோடியாக இருந்தவர் எம்.ஜி.ஆர் தான்.

மைசூரில் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்துக்காக எடுக்கப்பட்ட போர்க்களக் காட்சியிலும் எம்.ஜி.ஆர் பல கேமராக்களைப் பயன்படுத்தினார். இரண்டு படங்களுக்கும் அவரே இயக்குநர். அவர் இயக்கிய படங்களில் ஒளிப்பதிவாளர் யாராக இருந்தாலும் கேமராவை இயக்குவதில் அவருக்குக் கூடுதல் சுதந்திரம் இருந்தது.

அரச கட்டளை படத்தை எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணி இயக்கினார். அவர் பகல் முழுக்க படம் எடுத்துவிட்டுப் போன பிறகு மாலையில் எம்.ஜி.ஆர் அனைத்தையும் மாற்றி திரும்ப எடுப்பார். அவருக்குத் திருப்தி ஏற்படும்வரை அண்ணன் எடுத்த காட்சியாகவே இருந்தாலும் மாற்றி எடுக்காமல் விடமாட்டார்.

செட் அமைப்பும் கேமராவும்

எம்.ஜி.ஆர் படத்துக்குக் கலை இயக்குநராகப் பல படங்களில் பணியாற்றியவர் அங்கமுத்து. எம்.ஜி.ஆர் முதல்வரானதும் இவரை குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் ஆக்கி கௌரவித்தர். இவர் எம்.ஜி.ஆரின் கனவுக் காட்சிகள் மற்றும் தத்துவப் பாட்டு காட்சிகளுக்குப் பெரிய அளவில் செட் அமைப்பார். அதற்கு செட் வரைபடத்தை (ஸ்கெட்ச்) எம்.ஜி.ஆரிடம் காட்டி அவரது அனுமதியைப் பெறுவார். அப்போது தரைக்கான திட்டத்தைம்.(கிரவுண்ட் ப்ளான்) சேர்த்துக் கொண்டு போய் காட்ட வேண்டும். இந்த ஸ்கெட்சை பார்த்ததுமே அதைச் சரி செய்து கொடுக்கும் எம்.ஜி.ஆர் எங்கெங்கு கேமரா வைக்க வேண்டும் தான் எங்கு நிற்க வேண்டும் என்பதையும் அப்போதே முடிவு செய்துவிடுவார். செட் தயாரானதும் ஒரு முறை வந்து பார்த்து உறுதி செய்வார்.

நினைத்ததை முடிப்பவன் படத்தில் “கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும் நீ காணும் தோற்றம்” பாட்டுக்கான செட் தயாரானதும் எம்.ஜி.ஆர் வந்து பார்த்தார். பாட்டு வரிகள் மற்றும் தன் காஸ்டியூம் பற்றி கேட்டறிந்தார். சிவப்பு நிற பேண்ட் மாஸ்டர் உடை என்று தெரிந்ததும் செட்டின் சுவர்ப்பகுதியை நோக்கினார் அதுவும் சிவப்பு நிறத்தில் இருந்தது. உடையும் பின்னணி நிறமும் ஒன்றாக இருக்க வேண்டாம் என்பதால் தனது காஸ்டியூம் பளிச் என்று தெரியும் வகையில் சுவரின் நிறத்தை வேறு லைட் கலருக்கு மாற்றிவிடும்படி கூறினார். இப்போது அந்தப் பாட்டில் சுவரின் வெளிறிய நிறம் நீல நிறமாக இருக்கும்.

எம்.ஜி.ஆர் பெரிய செட்கள் அமைக்கும்போது அதன் அழகு முழுமையாகத் தெரியும்படி ஒளிப்பதிவாளரிடம் லாங் ஷாட் வைக்கும்படி நினைவுறுத்துவார். லாங் ஷாட்டில் செட்டின் அழகை காணும் ரசிகர்கள் கலை இயக்குநரின் திறமையையும் கலைஉணர்வையும் ரசித்துப் பாராட்டுவர். அவருக்கும் தன் படம் மூலமாக திரையுலகில் உரிய அங்கீகாரம் கிடைக்கச் செய்வார்.

மற்றவரின் திறமையை மதிக்கும் எம்.ஜி.ஆர்.

8. எம்.ஜி.ஆர் கடைப்பிடித்த பழக்க வழக்கங்கள்..!



எம்.ஜி.ஆர் தன் படங்களிலும் நிஜ வாழ்விலும் சில பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வந்தார். அவர் சிகரெட், மது, காபி, டீ குடிக்கமாட்டார் என்பதெல்லாம் தவிர வேறு பல குறிப்பிடத்தக்க பழக்க வழக்கங்களும் அவரிடம் இருந்தன.

உடை

எம்.ஜி.ஆர் சினிமாவிலும் நிஜ வாழ்விலும் வேட்டி கட்டும்போது வலது புறம் கரைவைத்துக் கட்டுவார். இதை அவரது அமைச்சரவை படங்களில் காணலாம். பாதம் மறையும்படி கட்டாமல் சற்று உயரே தூக்கிக் கட்டுவார். தரை பெருக்க கட்டினால் தரித்திரம் என்று அவர் அம்மா சொன்னதால் தாய் சொல்லைத் தட்டாமல் அப்படிக் கட்டினார்.

ராமாவரம் தோட்டத்தில் எம்.ஜி.ஆரின் உடைகளைத் துவைக்க ஒரு தனிச் சலவைக்காரர் இருந்தார். ஒரு நாளுக்கு நான்கு முறைகூட வேட்டி சட்டை மாற்றுவார். ஒரு முறை கட்டி கழற்றியதை அவர் அந்த நாளில் மறுமுறை கட்டுவதில்லை. தினமும் துவைத்த ஆடைகளையே உடுத்தினார்.

காங்கிரஸ் ஆதரவாளராக இருந்தபோது கதர் கட்டினார். கதர் உடுத்திதான் தன் முதல் மனைவி பார்கவியைத் திருமணம் செய்தார். தி.மு.க-வுக்கு மாறிய பின்பு கதர்

உடுத்துவதை நிறுத்திவிட்டார். பட்டு உடுத்தத் தொடங்கினார்.

வேட்டியை மடித்துக் கட்டும் பழக்கம் எம்.ஜி.ஆருக்குக் கிடையாது. வெள்ள சேதத்தைப் பார்வையிடும்போது வேட்டியை மடித்துக் கட்டியிருப்பார். என் அண்ணன் படத்தில் காலின் காயம் தெரிய வேண்டிய காட்சியில் மட்டும் வேட்டியை மடித்துக் கட்டியிருப்பார். சண்டை காட்சிகளில் வேட்டியை தார் பாய்ச்சிக் கட்டுவார். வீட்டில் ஓய்வாக இருக்கும் வேளையில் சில்க் கைலி கட்டுவார்.

எம்.ஜி.ஆருக்குப் படங்களில் ஆடை அலங்கார நிபுணராக இருந்த எம்.ஜி.நாயுடு பின்னாளில் நாயுடு ஹால் என்ற கடையைத் தொடங்கியதாகக் கூறுவர். அவருக்குப் பல படங்களில் ஆடை அலங்கார நிபுணராக இருந்த எம்.ஏ.முத்து, தான் தைத்து தந்த சட்டையைதான் எம்.ஜி.ஆர் கடைசி வரை போட்டிருந்தார் என்று கூறும்போது எம்.ஜி.ஆர் இறந்த பிறகும் அவருக்கு அணிவித்திருந்த சட்டை எம்.ஏ.முத்து தைத்ததுதான் என்று சொல்லி மனம் நெகிழ்கிறார்.

நகை

எம்.ஜி.ஆர் வெளியே வரும்போது நகை அணியும் கையில் ஒரு வாட்ச் மட்டுமே கட்டியிருப்பார். வீட்டில் இருக்கும்போது தன் சங்கிலி மோதிரங்களை எடுத்து அணிந்துகொள்வாராம். ஆனால், படத்திலும் நிஜத்திலும் அவர் நடு விரலில் மோதிரம் அணிய மாட்டார். மற்ற நடிகர் நடிகையர் அவர் ஜோடி நடிகைகள்கூட நடு விரலில் மோதிரம் அணிவர். ஆனால், அவர் சனிவிரல் எனப்படும் அந்த நடு விரலில் நகை அணியக் கூடாது என்ற பெரியவர்கள் வாக்கை மீறுவது கிடையாது. அவர் சங்கிலியில் அவர் தாயார் படம் உள்ள பென்டண்ட் தொங்கும்.

ஏன் இவ்வளவு கனமான பெரிய வாட்ச் கட்டியிருக்கிறீர்கள் என்று ஒருவர் எம்.ஜி.ஆரிடம் கேட்டபோது, கூட்டம் அதிகமாக இருக்கும்போது கூட்டத்தை விலக்க இது ஒரு

மென்மையான ஆயுதமாகப் பயன்படும் என்றார் எம்.ஜி.ஆர். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் அல்லவா?

எம்.ஜி.ஆர் இரண்டு கையையும் முகத்துக்கு நேரே கூப்பி வணக்கம் சொல்வார். பெரியவர்கள் வந்தால் எழுந்து நின்று வணங்குவார். நடிகை பானுமதிதான் அவரைச் சந்திக்க போனபோது எம்.ஜி.ஆர் எழுந்து நின்று வணங்கியதாக ஒரு பேட்டியில் குறிப்பிட்டார். பானுமதி ஓர் அஷ்டாவதானி என்பதாலும் திரையுலகில் நடிப்பு, இசை, நடனம் பாட்டு இயக்கம் எனப் பல துறைகளிலும் திறமை பெற்றவர் என்பதால் எம்.ஜி.ஆர் அவரை எழுந்து நின்று வணங்கியிருக்கலாம்.

கறுப்புக் கண்ணாடி போட்ட காரில் பயணித்தாலும் வெளியே யாராவது இது எம்.ஜி.ஆர் கார் என்பதை அடையாளம் கண்டு வணங்கினால் இவர் உள்ளே இருந்து வணங்குவார். பொதுக்கூட்டத்தில் மேடையின் இரு புறமும் நடந்து வந்து கையை தலைக்கு மேலே உயர்த்தி சிரித்த முகத்தோடு வணங்குவார். உடனே கூட்டம் ஆரவாரிக்கும்.

கல்யாணத்துக்கு வெள்ளி டம்ளர்

பொதுவாக எம்.ஜி.ஆர் தான் செல்லும் திருமணங்களுக்கு ஆறு வெள்ளி டம்ளர் பரிசாக வழங்குவார். கணவன் மனைவி மாமியார் மாமனார் மகன் மகள் என்ற அழகான குடும்பத்துக்கு அவர் அளிக்கும் பரிசு ஆறு வெள்ளி டம்ளர்கள் ஆகும்.

கலை நிகழ்ச்சிக்குத் தங்கச் சங்கிலி

எம்.ஜி.ஆர் மேடை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினால் பெரும்பாலும் தங்கச்சங்கிலி பரிசளிப்பது வழக்கம். கங்கை அமரனின் மகன் மிருதங்க அரங்கேற்றத்துக்குப் பத்து பவுன் சங்கிலி பரிசளித்தார். ஒரு முறை பத்மா சுப்பிரமணியம் தன் மாணவியின் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆரை தலைமை தாங்கும்படி அழைத்திருந்தார். அப்போது மேடையில் வைத்து அந்தப் பெண்ணுக்குக் கொடுக்கவிருந்த பேழையை எம்.ஜி.ஆர்

திறந்து பார்க்க முயன்றார். பத்மா எம்.ஜி.ஆரை நெருங்கி அவரது காதில் அதற்குள் ஒன்றுமில்லை என்றார். உடனே எம்.ஜி.ஆர் சரி நிகழ்ச்சி தொடரட்டும் என்று சொல்லிவிட்டு தன் ஆட்களை அழைத்து ஐந்து பவுன் சங்கிலி வாங்கிவரச் சொல்லி நடனமாடிய பெண்ணுக்கு பரிசளித்தார்.

உட்காரும் ஸ்டைல்

எம்.ஜி.ஆர் எப்போதும் நேராக உட்கார்வார். ஆனால், கால் மேல் கால் போட்டு உட்காரமாட்டார். அதனால் அவர் முன்பு மற்றவர்களும் அப்படி உட்கார்வதில்லை. சிலர் தமது பழக்கம் காரணமாக அப்படி உட்கார்ந்தால் எம்.ஜி.ஆர் அதற்கு கோபிக்க மாட்டார்.

மதுரையில் உலக தமிழ்ச் சங்க அறிவிப்பு கூட்டத்தின் போது தமிழண்ணல் போன்ற தமிழறிஞர்கள் மேடையில் எம்.ஜி.ஆரோடு இருந்தனர். அப்போது மேடையில் இருந்த திருமதி ராதா தியாகராஜன் சாய்ந்தபடி கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தார்.


எம்.ஜி.ஆர் முன்பு நாஞ்சில் மனோகரன் கால் மேல் கால் போட்டு உட்கார்வது குறித்து கட்சியினர் எம்.ஜி.ஆரிடம் குறைபட்டுக்கொண்ட போது "அவர் பழக்கம் அப்படி இருந்துவிட்டுப் போகட்டும்" என்றார்.

ஒரு முறை ரசிகர்கள் பணம் கொடுத்து எம்.ஜி.ஆருடன் போட்டோ எடுத்த போது ஒருவர் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து எம்.ஜி.ஆரின் தோள் மீது கை போட்டபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். மெய்க்காப்பாளர் ராமகிருஷ்ணன் அவரது காலை கீழே எடுத்துவிட்டபோது எம்.ஜி.ஆர் "வேண்டாம் அவர் காசு கொடுத்திருக்கிறார் அவர் இஷ்டப்படி உட்காரட்டும்" என்று கூறிவிட்டார்.

சாப்பாடு

எம்.ஜி.ஆரின் விருந்தோம்பல் மற்றும் சாப்பிடும் முறை குறித்து நிறைய பேர் எழுதிவிட்டனர். விருந்தினரைப் பார்த்துப் பார்த்து சாப்பிட வைப்பதில் எம்.ஜி.ஆருக்கு நிகர் அவர்

மட்டுமே. தான் சாப்பிடும்போதே யார் எந்தப் பொருளை விரும்பிச் சாப்பிடுகின்றனர் என்பதை பார்த்து அவருக்கு அந்த பதார்த்தத்தை வைக்கச் சொல்வார்.



'தாயினும் சாலப் பரிந்து' உபசரிப்பவர் எம்.ஜி.ஆர் என்பதற்கு ஓர் உதாரணம். ஒருமுறை புகைப்படக்காரரர் சங்கரிடம் எம்.ஜி.ஆர் பொறித்த முழுக்கோழியைக் கொடுத்து சாப்பிடச் சொல்லியிருக்கிறார். சங்கர் தன்னால் இவ்வளவும் சாப்பிட இயலாது என்றார். நீ இளைஞன் சாப்பிட முடியும் சாப்பிடு என்று ஊக்கப்படுத்தி சாப்பிட வைத்துவிட்டார். அதன்பிறகு சங்கருக்குத் தன்னால் முழுக்கோழி சாப்பிட முடியும் என்ற நம்பிக்கை வந்து விட்டது. பிறகு முழுக்கோழி சாப்பிட ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர் சுவையான உணவுகளை யார் சமைத்துக் கொடுத்தாலும் அவரிடம் திரும்பவும் அதை தனக்குச் சமைத்துத் தரும்படி கேட்டு வாங்கிச் சாப்பிடுவார். தன் வக்கீல் என்.சி. ராகவாச்சாரியாரிடம் சொல்லி அவர் வீட்டிலிருந்து ரசம் சாதம் புளியோதரைச் சமைத்துத்தரச் சொல்லி வாங்கிச் சாப்பிடுவார். லதாவின் அம்மாவிடம் சொல்லி கருவாட்டுக் குழம்பு வாங்கிச் சாப்பிடுவார்.

எம்.ஜி.ஆர் சாப்பிடும்போது உணவை மிச்சம் வைக்க மாட்டார். அன்னத்தை மிச்சம் வைப்பவன் வாழ்க்கை பின்னப்படும் என்று அவர் அம்மா சொன்ன புத்திமதியைக் கடைசி வரை பின்பற்றினார். அவர் அசைவம் சாப்பிடும்போது எலும்பைக் கடித்து துப்ப ஒரு தனித் தட்டு வைக்கச் சொல்வார். கீழே தரையில் துப்பி அசுத்தப்படுத்த மாட்டார். தரையைச் சுத்தப்படுத்துவோர் தன் எச்சிலை கையால் வாரி எடுக்கும் கொடுமைக்கும் அவரைத் தள்ளமாட்டார்.

தரையில் அமர்ந்து சாப்பிடுவதையே விரும்புவார். விருந்தினர் வரும்போது மேசையில் அமர்ந்து உண்பார். என்.டி.ஆர் முதல்வர் பதவியேற்பதற்கு முன்பு எம்.ஜி.ஆரை தன் அமைச்சர் குழுவினருடன் வந்து சந்தித்து ஆசிபெற்றார். அன்று அவர்கள் அனைவருக்கும் எம்.ஜி.ஆர் காலை விருந்தளித்தார். ஐ.ஏ.எஸ் அதிகாரி வெங்கட்ராமன் காலையில் பெரும்பாலும் எம்.ஜி.ஆரோடுதான் உணவருந்துவார்.

பிறந்த நாள் கொண்டாட்டம்



எம்.ஜி.ஆர் வீட்டில் ஆரம்பத்தில் அவர் அண்ணனின் ஒன்பது குழந்தைகளுக்கும் அடிக்கடி பிறந்த நாள் பெயர் சூட்டல் திருமண நாள் என்று விசேஷங்கள் வந்துகொண்டேயிருக்கும். அவர் பிறந்த நாளுக்கு கேக் வெட்டுவதை விரும்ப மாட்டார். அன்றைக்குப் பாயசத்துடன் நல்ல சாப்பாடு செய்யச் சொல்வார். ஜி.சகுந்தலா எம்.ஜி.ஆர் வீட்டுக்குப் போய் வரும்போது அடிக்கடி விசேஷம் வருவதால் அங்கு வைக்கும் பாயசத்தை எனக்குத்

திருகுச்செம்பில் (கூஜா) எம்.ஜி.ஆரின் அண்ணி கொடுத்து விடுவார்கள் என்பார். அதன்பிறகு ஜானகி அம்மையாரின் அண்ணன் பிள்ளைகள் ராமாவரத்திலிருந்து வளர்ந்த போதும் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடும் பழக்கம் இல்லை. அதை அவர் ஆடம்பரம் என்று நினைத்தார்.

பேசா மொழி

எம்.ஜி.ஆர் படப்பிடிப்புக்கு வரும்போதும் அரசியல் பொதுக் கூட்டங்களுக்கு வரும்போதும் பேசாமலேயே தன்னுடன் இருப்பவர்களுக்கு தன் கருத்தைப் புரிய வைத்துவிடுவார்.

மதுரை அருகே வைகை அணைக்கட்டில் மாட்டுக்கார வேலன் ஷூட்டிங் நடந்த போது அவரைப் பார்க்க வந்த மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. அனைவருக்கும் எம்.ஜி.ஆர் தண்ணீர் கொடுக்கம்படி கட்டளையிட்டார். காவல் துறையினரால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த இயலவில்லை. சுமார் இரண்டு லட்சம் பேர் கூடிவிட்டனர். அப்போது எம்.ஜி.ஆர் கேமரா வைக்கும் இடத்துக்கு ஏற்ப கூட்டத்தைப் பார்த்து கையை நேரே நீட்டி இருபுறமும் விலகும்படி அசைப்பார். கூட்டம் மெள்ள விலகும். அவர் போதும் என்று கையசைத்த பிறகு அப்படியே நின்றுவிடும். பின்னால் போங்கள் என்றாலும் அதே மாதிரி கையசைப்பார். மொத்தக் கூட்டமும் பின்னால் நகர்ந்து கொண்டேயிருக்கும். மெகாஃபோன் பயன்படுத்தாமல் அவர் இவ்வாறு கை அசைத்தாலே போதும். கூட்டம் கட்டுப்படும்.

பொதுக் கூட்டங்களில் எம்.ஜி.ஆரின் தலை அசைவையும் பார்வை போகும் திசையையும் மெய்க்காப்பாளர்கள் கவனித்துச் செயல்படுவர். ஒரு கூட்டத்தில் ஒருவன் பெண்களிடம் சில்மிஷம் செய்வதை எம்.ஜி.ஆர் மேடையிலிருந்து பார்த்துவிட்டார். அவர் ஒரே இடத்தை உற்று நோக்குவதை அறிந்த மெய்க்காப்பாளர் விரைந்து போய் அவனை கூட்டத்தில் இருந்து வெளியேற்றினர். இன்னொரு கூட்டத்தில் கண் தெரியாத இருவர் முன்னால் வரமுடியாமல் சிரமப்படுவதை பார்த்த எம்.ஜி.ஆர் தன் மெய்க்காப்பாளரைப் பார்க்கவும் அவர்கள் அவர் பார்த்த

திசையில் கூர்ந்து பார்த்தனர். அந்தக் கண் தெரியாதவர்களைப் பாதுகாப்புடன் அழைத்து வந்து எம்.ஜி.ஆரைப் பார்க்க வைத்தனர். எம்.ஜி.ஆர் ஓர் இடத்தை உற்றுப் பார்ப்பதும் ஒருவரை கூர்மையாகப் பார்ப்பதும் கூட அவர் பயன்படுத்திய கருத்துப் புலப்பாட்டு உத்திகள் ஆகும்.

முத்தம்

எம்.ஜி.ஆர் சிலரை பாராட்ட நினைக்கும்போது அவருக்கு முத்தம் கொடுப்பது வழக்கம். படத்திலும் சரி நிஜத்திலும் சரி எம்.ஜி.ஆர் இவ்வாறு முத்தம் கொடுப்பது உண்டு. நம் நாடு படத்தில் தன் அண்ணன் மகனாக நடித்த ஸ்ரீதேவிக்கு கன்னத்திலும் அவனுக்கு அக்காவாக நடித்த குட்டி பத்மினிக்கு நெற்றியிலும் முத்தம் கொடுப்பார். சித்தப்பாக இருந்தாலும் ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு கன்னத்தில் முத்தம் கொடுக்க கூடாது என்ற கருத்து இக்காட்சியில் உணர்த்தப்படும். நேற்று இன்று நாளை படத்தில் தன் கணவன் என தவறாக நினைத்து ராஜஸ்ரீ எம்.ஜி.ஆரிடம் முத்தம் கேட்கும்போது அவரை கண்ணை மூடிக் கொள்ள செய்துவிட்டு ஒரு சிறுமியை அழைத்து அவரது கன்னத்தில் முத்தம் தர செய்வார். இந்தக் காட்சியும் கருத்துள்ள காட்சி ஆகும். பெண்களிடம் எம்.ஜி.ஆர் மிகுந்த செல்வாக்கு பெற இத்தகைய காட்சிகள் உதவின.

எம்.ஜி.ஆர் காரில் பொதுக்கூட்டங்களுக்கு வரும்போது ரசிகர்கள் அவர் கார் ஜன்னலை தொற்றிக்கொண்டு ஓடிப்போய் அவர் கையில் முத்தம் கொடுப்பது சகஜம். அவர் டாட்டா காட்டும்போது அவர் கையை பிடித்து முத்தம் வைப்பர். சிலசமயம் ரசிகர்கள் எம்.ஜி.ஆரை கன்னத்தில் கிள்ளியும் கொஞ்சுவார்கள்.

எம்.ஜி.ஆருக்கு 1985க்கு பிறகு பேச்சு திறன் பாதிக்கப்பட்டிருந்த போது அவர் தனக்கு பிரியமானவர்கள் சந்திக்க வந்தபோது அவர்களின் கையில் முத்தம் கொடுத்து தன் அன்பை தெரிவித்தார். வேதம் புதிது படம் எம்.ஜி.ஆருக்கு போட்டுக் காட்டிய போது சத்யராஜ்

அருமையாக நடித்திருந்த காட்சிகளில் எல்லாம் எம்.ஜி.ஆர் அவர் கையை பிடித்து முத்தம் கொடுத்துக் கொண்டேயிருந்தார். சுமார் பத்து முத்தமாவது கொடுத்திருப்பார் என்று மனம் நெகிழ்கிறார் சத்யராஜ். அதுவே அவர் பார்த்த கடைசி படமும் ஆகும்.

திரையுலகம் எம்.ஜி.ஆருக்கு நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர் சிவாஜிக்கு மேடையில் வைத்து முத்தம் கொடுத்தார். அப்போது நம்பியாரும் எம்.ஜி.ஆரிடம் முத்தம் கேட்டார். எம்.ஜி.ஆர் உன் முகத்தில் தாடி இருக்கிறது அது குத்தும் என்றார். இருந்தாலும் நம்பியார் எம்.ஜி.ஆரிடம் முத்தத்தை கேட்டுபெற்றுக் கொண்டார். இதை பார்த்த மொத்த கூட்டமும் ஆரவரித்து மகிழ்ந்தது. சினிமாவில் எதிரிகளாக தோன்றும் இவர்கள் நிஜத்தில் இத்தனை அன்பும் பாசமும் உடையவர்களா என்று நினைத்தனர்.

ராஜீவ் காந்தி சென்னைக்கு வந்து தன் தாத்தா நேருஜியின் சிலையை திறந்து வைத்துவிட்டு கிளம்பியபோது ஏர்போர்ட்டில் எம்.ஜி.ஆரிடம் உடம்பை பார்த்துக்கொள்ளுங்கள் என்றார். அவரது அன்பை கண்ட எம்.ஜி.ஆர் மனம் நெகிழ்ந்து புன்னகைத்தபடி அவர் கையை பிடித்து முத்தம் கொடுத்தார். அதன்பிறகு அவர்கள் சந்திக்கவேயில்லை. இருவரும் காலமாகிவிட்டனர்.

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படப்பிடிப்புக்கு கண்ணன் வரவழைக்கப்பட்டார். ஆனால் அவருக்கு வேலையே இல்லை ஐந்தாம் நாள் எம்.ஜி.ஆர் அவரை அழைத்து பல பக்கங்கள் கொண்ட நீண்ட வசனத்தைக் கொடுத்து பாடம் செய்துகொள் என்றார். செட்டுக்குக் கண்ணன் வந்ததும் அவரிடம் எம்.ஜி.ஆர் ஒரே டேக் என்று சொல்லிவிட்டு சுற்றிலும் ஐந்து கேமராக்களை வைத்து லதாவும் கண்ணனும் இடம்பெறும் அந்தக் காட்சியைப் படமாக்கினார். ஷாட் முடிந்ததும் கண்ணனைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து என் நம்பிக்கையைக் காப்பாத்திட்ட கண்ணா என்று பாராட்டினார்.

மரியாதை

எம்.ஜி.ஆர் சினிமாவிலும் அரசியலிலும் தெரியாதவர்களை, புதியவர்களை, மேலும் வயதில் சிறியவர் என்பதால் வாடா போடா என்று பேச மாட்டார். தம்பி என்றுதான் அழைப்பார். வயதானவர்களை பெரியவர் என்றும் வயதான அம்மா என்றுமே குறிப்பிடுவார். ஆதவன் ஷூட்டிங்கில் சரோஜாதேவியை யாரோ கிழவி என்று ரெஃபெர் செய்தபோது அவர் வருத்தத்துடன் இந்தத் தகவலை தெரிவித்தார். தன் வீட்டுப் பிள்ளைகளும் அவ்வாறே மரியாதையுடன் அழைக்க வேண்டும் என்ற நல்லொழுக்கத்தை வலியுறுத்துவார்.

ஒரு முறை தன் வீட்டுப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப்போகும் ரிக்ஷாக்காரரை ஆறுமுகம் வா என்று தன் வீட்டுச் சிறுமி அழைத்தபோது இது தப்பு நீ அவரை அண்ணே என்றுதான் அவரை அழைக்க வேண்டும் என்று திருத்தினார். காலையில் குட்மார்னிங் என்று வீட்டில் பிள்ளைகள் சொன்னால் எதற்கு குட்மார்னிங் வணக்கம் என்று சொல் எனத் திருத்துவார். வீட்டிலும் நாட்டிலும் தமிழ் மீது பற்றுக்கொண்டவராகவே அவர் வாழ்ந்திருக்கிறார்.

கலைஞரை ஒரு முறை பத்திரிகையாளர் சோலை தன் கட்டுரையில் கருணாநிதி என்று குறிப்பிட்டிருந்தார். எம்.ஜி.ஆர் சோலையிடம் அவர் பெரியவர் அவரை பெயர் சொல்லி குறிப்பிடக் கூடாது அவரை கலைஞர் என்றோ கலைஞர் கருணாநிதி என்றோதான் குறிப்பிட வேண்டும் என்றார். ஆனால் இன்று இரு மாபெரும் இயக்கங்களின் தலைவரான அறிஞர் அண்ணாவின் இயற்பெயரில் அண்ணாதுரை என்று ஒரு படம் வருகிறது. திராவிட இயக்கங்கள் குறிப்பாக எம்.ஜி.ஆர் தோற்றுவித்த அவர் வழியைப் பின்பற்ற கடமைப்பட்டுள்ள அதிமுக கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. பெரியவர்களை பெயர் சொல்லி குறிப்பிடக் கூடாது என்பது தமிழ் மரபு அதுவும் குறிப்பாக அறிஞர் பெருமக்களை சங்க காலம் தொட்டு நாம் அவர் என்றுதான் குறிப்பிட்டு வருகிறோம்.

இயற்பெயரோடு ஆர் எனும் மரியாதைப் பன்மை விகுதி [honorific suffix] சேர்த்தே குறிப்பிட வேண்டும் என்பது தமிழ் இலக்கண மரபு.

பண்டிகை

எம்.ஜி.ஆர் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதாலும் ஆரம்பம் முதலே அவர் அம்மா தீபாவளியைக் கொண்டாடததாலும் அவர் தீபாவளி கொண்டாடுவதில்லை. பொதுவாக மலையாளிகள் தீபாவளி கொண்டாடமாட்டார்கள். இந்தியாவில் தீபாவளிக்கு விடுமுறை விடாத மாநிலமாகவே கேரளா சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தது. இப்போது ஊடகங்களின் செல்வக்கால் குறிப்பாக விளம்பரத்தின் ஆளுகையால் அங்கும் தீபாவளி கொண்டாடப்படுகிறது.

வேட்டைக்காரன் படத்தின் வெளிப்புற படப்பிடிப்பு ஊட்டியில் நடந்த போது தீபாவளிக்குச் சென்னை திரும்பிவிடலாம் என்று மற்றவர்கள் நினைத்தபோது எம்.ஜி.ஆர் ஷூட்டிங்கை தொடர்ந்து நடத்தலாம் என்று சொல்லிவிட்டார். அனைவருக்கும் வீட்டுக்கு அனுப்பப் பணம் தருமாறு இயக்குநர் திருமாறனிடம் சொல்லிய எம்.ஜி.ஆர் இங்கிருப்பவர்களுக்குப் புதுத்துணி எடுத்துத் தருவதும் உங்கள் செலவே என்றார். திருமாறன் தன் அண்ணன் தேவரை விட சிக்கனக்காரரர் என்பதால் திணறிவிட்டார். இதுவும் முக்கியஸ்தர் பேர்களை சீட்டு எழுதி குலுக்கி போட்டதில் இவர் பெயர் வந்ததால் திருமாறனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை எடுத்த சீட்டில் எம்.ஜி.ஆர் பெயர் இருந்திருந்தால் எம்.ஜி.ஆர் செலவு செய்திருக்க வேண்டும். ஆனால் திருமாறன் பெயர் வந்ததால் அவர் சிக்கிக்கொண்டார். இந்தத் தகவல் அறிந்ததும் ஜெமினி சாவித்திரியுடன் தீபாவளி கொண்டாட அங்கேயே வந்துவிட்டார்.

எம்.ஜி.ஆர் பொங்கல் பண்டிகையை மட்டுமே சிறப்பாகக் கொண்டாடுவார். அன்று அனைவருக்கும் கை நிறைய ரூபாய் நோட்டுகளை வழங்குவார். அவரை வைத்து படம்


எடுக்க மாட்டேன் என்று சிவாஜியிடம் சத்தியம் செய்து கொடுத்த பாலாஜி கூட எம்.ஜி.ஆரிடம் அன்று வந்து எம்.ஜி.ஆர் கையால் பணம் வாங்கிச் செல்வார்.

எம்.ஜி.ஆர் நாடக மன்றம் இருந்த போது மன்றத்தைச் சேர்ந்த அனைவருக்கும் ஒரே மாதிரி வேட்டி சேலை எடுத்து வழங்கி அன்று தன் அலுவலகத்துக்கு வரச் செய்து பல விளையாட்டுகள் நடத்தி கொண்டாடி மகிழ்வதுண்டு. பொங்கல் செலவுக்குப் பணம் வேண்டும் என்பதற்காகவே அவர் விவசாயி படத்தை ஒப்புக்கொண்டு தேவரிடம் பணம் பெற்றார் என்றும் தகவல் உண்டு. அந்தளவுக்கு அவர் பொங்கல் கொண்டாட பணம் செலவழிப்பதுண்டு.

திருமணம்

எம்.ஜி.ஆர் தன் அண்ணனுடன் வாழ்ந்தபோது யாராவது திருமணம் என்று அழைப்பு வைத்தால் அவர் தன் அண்ணனிடம் பணத்தைக் கொடுத்து அவர் கையால் பெற்றுக்கொள்ளுங்கள் என்பார். அவர் உள்ளேயே இருந்துவிடுவார். அண்ணன் சக்ரபாணி வந்து பணம் கொடுப்பார். நடிகர் சந்திர பாபு துணை இயக்குநர் இடிச்ச புளி செல்வராஜ் வசனகர்த்தா ரவீந்தர் போன்றோர் எம்.ஜி.ஆர் கையால் பெற முடியவில்லையே என்று வருந்தியதுண்டு. அதற்கு எம்.ஜி.ஆர் எனக்குப் பிள்ளையில்லை. என் அண்ணன் பிள்ளைகுட்டிக்காரரர் அதனால் அவர் கையால் உனக்குத் தருகிறேன் என்று சமாதானம் சொல்வார். தனக்குப் பிள்ளையில்லாவிட்டாலும் தன்னைத் திருமணத்துக்கு அழைப்பவர்கள் பிள்ளை பாக்கியம் பெற்று சிறப்பாக வாழவேண்டும் என்ற நல்லெண்ணம் அவருக்கு இருந்தது.

9. எம்.ஜி.ஆரின் படங்களில் பலவகையான சண்டை கருவிகள்



எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சிகள்

'நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் இறைவன் அவதாரம் எடுப்பான்' என்கிற கருத்து காலங்காலமாக தெய்வ நம்பிக்கை உள்ளவர்களிடம் இருந்து வருகிறது. ஆனால், எம்.ஜி.ஆர் படங்களில் அதைவிட ஒரு படி மேலான மனித நேயத்துடன் தீயவன் அழிக்கப்படாமல் அவனது தீய பண்புகள் மட்டும் அழிக்கப்பட்டு அவன் மனம் திருந்தி மன்னிப்பு கேட்டு நல்லவன் ஆவான். தீயவன் திருத்தப்படுவான், மனமாற்றம் அடைவான், இந்நோக்கில் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் அவரை வாத்தியார் என்று அழைத்தது மிகவும் பொருத்தமானது.

வாத்தியார் எம்.ஜி.ஆர்

ஆங்கிலேயர் வந்து பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கும் முன்பு, வாத்தியார் என்ற சொல் குஸ்தி வாத்தியார், சிலம்பு வாத்தியார் என்று வீர விளையாட்டுகளைக் கற்றுத் தரும் வாத்தியாரையே குறித்தது. இதற்கென்று ஊர்தோறும் திடல்கள் இருந்தன. இங்கு வந்து ஊர் இளைஞர்கள் வீரப் பயிற்சி பெறுவர். எம்.ஜி.ஆரும் இது போன்ற பயிற்சிகளைக் கோவையிலும் சென்னையிலும் பெற்றிருக்கிறார். கோவையில் சாண்டோ சின்னப்பா தேவர் நம்பியார் ஆகியோருடன் எம்.ஜி.ஆர் இந்த வீர பயிற்சிகளில் ஈடுபடும்போது பெரும்பாலும் எம்.ஜி.ஆரே முதலிடத்தில் இருப்பார். அங்கு சின்னப்பா தேவர் மாருதி தேகப் பயிற்சி

சாலை என்று ஓர் உடற்பயிற்சி கூடம் வைத்திருந்தார். எம்.ஜி.ஆர் பெரிய நடிகர் ஆனதும் சென்னையில் வட பழனியில் ஓர் இடம் வாங்கி அதில் ஸ்டண்ட் நடிகர்களைப் பயிற்சி பெறும்படி ஊக்கமளித்தார். இன்று அந்த இடம் ஜானகி ராமச்சந்திரா கலாலயம் என்ற பெயரில் ஜே.ஆர்.கே பள்ளிக்கூடமாக உள்ளது.

உளவியல் கருத்து

ஏழை ரசிகர் தன் கொடுமைக்கார முதலாளியை அடித்து உதைக்க வேண்டும் என்ற உள்மன ஆசை எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சிகளை காண்பதன் மூலம் நிறைவேறுகிறது. உளவியல் அணுகுமுறையில் ஆராய்ந்தால் ஒருவர் கனவில் எலி, பூனையைத் துரத்தினால் அவர் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கிறார். அதிலிருந்து விடுபட அவர் உள்மனம் விரும்புகிறது. எனவே, அவர் கனவில் வலிமை குறைந்த எலி, வலிமையான பூனையைத் துரத்துகிறது. இது அவரது ஒடுக்கப்பட்ட ஆசையின் [oppressed wishes] வெளிப்பாடு ஆகும். இதுபோன்ற ஆசை இருப்பவர் எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சியைப் பார்க்கும்போது மன அமைதி பெறுகிறார். ஒடுக்குதலிலிருந்து விடுபட்ட உணர்வைப் பெறுகிறார். இதை [vicarious suffering] என்பர். அதாவது படம் பார்ப்பவர் தன் துக்கத்தையும் ஆற்றாமையையும் படத்தில் வரும் நடிகர்களின் இன்ப துன்பங்களோடு இணைத்து பார்த்து இன்பமோ துன்பமோ அடைவதாகும்.

ரசிகர் வகைகள்

சண்டைக் காட்சிகளை ரசிப்பவரில் இரண்டு வகையினர் உண்டு. ஒருவர் நேரடியாக மனதளவில் சண்டைப் போட்டு மகிழ்வார். இன்னொருவர் அவ்வாறு சண்டையிடாமல் முதல் பிரிவினரை வேடிக்கை பார்த்து மகிழ்வார். முதல் பிரிவைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட ஏழை தொழிலாளி ஒருவர் எம்.ஜி.ஆர் படத்தில் சண்டைக் காட்சியைப் பார்க்கும்போது எம்.ஜி.ஆருக்குள் மனதளவில் கூடு விட்டு கூடு பாய்கிறார். அவரே கெட்டவனை அடித்து உதைக்கும் உணர்வைப் பெற்று அமைதியடைகிறார். இரண்டாவது பிரிவைச்

சேர்ந்தவர்கள், நமக்காகவே எம்.ஜி.ஆர் கெட்டவனை அடித்துத் திருத்துகிறார் என்று நம்பி அமைதி பெறுகின்றனர். இவர்கள் எந்தச் சமூக மாற்றத்துக்கும் ஒத்துழைக்க மாட்டார்கள். எந்தப் போராட்டத்திலும் கலந்துகொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு யாராவது ஒருவர் தானாக வந்து நல்லது செய்ய வேண்டும். அதன் பலனை மட்டும் இவர்கள் அடைய வேண்டும். எம்.ஜி.ஆர் படம் பார்த்துவிட்டு வரும் கூட்டத்தினரில் முதல் வகையினர் வழியில் இருக்கும் தட்டி போர்டுகளை உதைத்து கீழே தட்டிவிட்டு அழிச்சாட்டியம் செய்த படி வருவர். இந்த இரண்டாவது பிரிவினர் அவர்களை ஊக்கப்படுத்தி ரசித்துச் சிரித்தபடி நடந்துவருவர்.

சண்டையின் பாரம்பர்யம்

ராமாயணம், மகாபாரதம், கந்த புராணம் என நம் பாரம்பர்ய நூல்கள் அனைத்தும் இறுதியில் பெரிய சண்டையின் மூலமாகவே நீதியை, நன்மையை நிலைநாட்டுகின்றன. அதன் வழியில் திரைப்படத்திலும் பெண், நிலம், பொருள் எனப் பல்வேறு காரணங்களுக்காகக் கடைசியில் ஒரு க்ளைமாக்ஸ் சண்டைக் காட்சியும் இடையில் சிறு சிறு சண்டைக் காட்சிகளும் இடம்பெறுகின்றன. வெளிநாட்டு இலக்கியங்களிலும் திரைப்படங்களிலும் இது போன்ற சண்டைகள் இடம்பெறுகின்றன. ஆக மனித சமுதாயம் தோன்றிய காலம் தொட்டு தன் தேவை அதிகரிக்கும்போது போட்டிகளும் பொறாமையும் பேராசையும் உருவாகி சண்டைகள் வருகின்றன. இது நபர் அளவில் வந்தால் வாய்ச்சண்டை என்றால் தகராறு என்றும் கைகலப்பு ஏற்பட்டால் சண்டை என்றும் நாடு அல்லது சமூகம் என்றளவில் ஏற்படும்போது அதைப் போர் என்றும் அழைக்கிறோம்.

எம்.ஜி.ஆர் படத்தில் சண்டைக் காட்சி அமைப்பு

தர்ம யுத்த முறைகளின் அடிப்படையில் எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சிகள் அமைக்கப்படும்.

1. எம்.ஜி.ஆர் யாரிடமும் வம்புச் சண்டைக்குப் போவதோ தன் பலத்தைக் காட்டுவதற்காக யாரையும் முதலில் அடிப்பதோ கிடையாது.
2. கெட்டவனின் தீய செயலைத் தடுக்கவே அவர் அவனைத் தாக்குகிறார்.
3. கெட்டவன் தன்னைத் தாக்க வரும்போது தற்காப்புக்காக அவனை அவர் எதிர்க்கிறார்.
4. ஏழை, மூதியவர் பெண்கள் குழந்தைகள் என உடல் பலமற்றவர், கெட்டவனை எதிர்க்க வலுவற்றவர் அவனின் பிடியில் சிக்கித் தவிக்கும்போது அவர்களை அவனிடமிருந்து மீட்க அவனுடன் சண்டைப் போடுகிறார்.

சண்டைப் போடும்போது

எம்.ஜி.ஆர் சண்டையிடும் போது வில்லனை முதுகில் குத்துவதோ அல்லது அவன் ஆயுதம் இல்லாமல் நிராயுதபாணியாக இருக்கும்போது தாக்குவதோ கிடையாது. ஆயிரத்தில் ஒருவன் படத்தில் நம்பியார் எம்.ஜி.ஆரின் குத்துவாளை அவர் இடுப்பிலிருந்து பிடுங்கிக்கொண்டு சண்டை செய்யும் போது எம்.ஜி.ஆர் அதை நம்பியாரிடமிருந்து தன் நீண்ட வாளால் தட்டிப் பறித்துவிட்டு 'நீ உன் குத்துவாளை எடுத்துக்கொள் இது என்னுடையது' என்பார். அதன் பின்பு அச்சண்டை ஒரு பெரிய வாள் ஒரு குத்து வாள் எனச் சம பலத்துடன் தொடரும். படகில் மனோகருடன் எம்.ஜி.ஆர் சண்டையிடும்போது நம்பியார் விஷம் தோய்ந்த கத்தியை மனோகரின் முதுகில் விடுவார். அப்போது முதுகில் தாக்குகிறாயே நீயெல்லாம் ஓர் ஆண்மகனா என்று நம்பியாரைக் கண்டிப்பார்.

வில்லிகளுடன் சண்டை

எம்.ஜி.ஆர் படங்களில் பெண்கள் வில்லன் கூட்டத்திலிருந்து தொல்லை கொடுத்தாலும் அவர்களுடன் அவர் நேரடியாக மோதுவது இல்லை. மகாபாரதத்தில் சிகண்டி பீஷ்மர் கதையின் சாராம்சமே இதுதானே. பெண்ணை அடிப்பது

தவறு என்பதால் நவரத்தினம் படத்தில் குமாரி பத்மினி எம்.ஜி.ஆருடன் மோதும் போது அவர் விலகிக் கொள்வார் குமாரி பத்மினி பொத் பொத்தென்று கீழே விழுந்து அடிபட்டு சோர்வடைவார். பிறகு எம்.ஜி.ஆர் அவரைக் கட்டிப்போட்டுவிடுவார். அது போல இதயக்கனியில் மெயின் வில்லி ராஜசுலோசனாவிடம் இருந்து உண்மைகளை வரவழைக்க பெண் போலீஸ்களைப் பயன்படுத்துவார். எம்.ஜி.ஆர் வில்லியின் அடியாட்களுடன் நேருக்கு நேர் மோத சிதம்பரம் அருகே உள்ள ஒரு மண் திட்டையில் கப்பல் போல செட் அமைத்து சண்டைக் காட்சிகளை எடுத்தார். அந்த மேடு இன்றும் எம்.ஜி.ஆர் மேடு என்று அழைக்கப்படுகிறது.

சண்டைக்குப் பின்

எம்.ஜி.ஆர் தன் படங்களில் வில்லன் நடிகருடன் சண்டை முடிந்த பிறகு ஓரிரு படங்கள் தவிர மற்றவற்றில் அவர் அவனைக் கொல்வது கிடையாது. அவனை ஊனப்படுத்துவதும் இல்லை. அவன் செயல்பாட்டை மட்டும் முடக்குவார். பல படங்களில் கட்டிப்போட்டு விட்டு போலீஸூக்குத் தகவல் கொடுப்பார் அல்லது அந்த நேரத்தில் போலீஸே வந்துவிடும். புத்திமதி கூறுவதாகவும் வில்லன் திருந்தி மன்னிப்புக் கேட்பதாகவும் சண்டையின் முடிவு அமையும். பல படங்களில் வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற சொல்லுக்கேற்ப வில்லன் அவன் செய்த தீய செயல்களுக்கு அவனே பலியாகிவிடுவான்.

வில்லனும் இதர ஸ்டண்ட் நடிகர்களும்

எம்.ஜி.ஆருடன் அதிகப் படங்களில் வில்லனாக நடித்தவர் அசோகன். ஆனால், எம்.ஜி.ஆர் என்றாலே அவரது பரம விரோதி என்று கருதுவது நம்பியாரை மட்டுமே. பி. எஸ் வீரப்பா மஹாதேவி, சக்கரவர்த்தி திருமகள் ஆனந்த ஜோதி போன்ற படங்களில் வில்லனாக நடித்தார். இவர்களுடன் துணை வில்லனாக ஆர்.எஸ். மனோகர் நடிப்பதுண்டு. இந்த வில்லன்களின் அடியாட்களாக எம்.ஜி.ஆரின் ஸ்டண்ட் குழுவைச் சேர்ந்த ஜஸ்டின், ராமகிருஷ்ணன், நடராஜன்,

காமாட்சி, தர்மலிங்கம் போன்றோர் இடம்பெறுவர். இதயக்கனி, அடிமைப்பெண் போன்ற படங்களில் ஜஸ்டினுடன் தனிச் சண்டையும் இருந்தது. ஆனால், அவர் முக்கிய வில்லன் கிடையாது. புத்தூர் நடராஜன் சியாம் சுந்தர் ஆர்.என்.நம்பியார் சங்கர் போன்றோர் எம்.ஜி.ஆரின் சண்டைக் காட்சிகளை வடிவமைப்பர்.



வாள் சண்டை

வாள் சண்டையில் எம்.ஜி.ஆர் வல்லவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் அந்த வாள் வித்தையை மேடை நாடகங்களில் கூட நடித்துக்காட்டினார். பி.யு.சின்னப்பாவைப் போல வாள் சுழற்றத் தெரிந்திருக்க வேண்டும் என்று அசுரப் பயிற்சி பெற்றார். அவர் நாடக மன்றத்தின் முதல் நாடகமான இடிந்த கோபுரம் நாடக மேடையில் குண்டுக் கருப்பையாவுடன் சண்டைக் காட்சியில் நடித்தபோது எம்.ஜி.ஆரின் கால் முறிந்தது. வாள் மட்டும் அல்லாது குறுவாள் அல்லது குத்துவாள், பிச்சுவா போன்றவற்றையும் வைத்து சண்டைப் போடுவதையும் நாம் வாள் சண்டை என்ற பிரிவிலேயே சேர்த்துவிடுவோம்

எம்.ஜி.ஆருக்குச் சமமாக வாள் சண்டைப் போடுவதில் நம்பியார் கெட்டிக்காரர். அரச கட்டளையில் சரோஜா தேவியின் காதல் பரிசுக்காக இவர்களின் சண்டை சுவாரஸ்யமாக இருக்கும். வசனமும் இடம்பெறும். முதலில் எம்.ஜி.ஆர் சிரித்தபடி சண்டைப் போடுவார். தன் கையில் இருந்த மாலையை நம்பியார் பறித்துவிடவும் அதைத் திரும்பப் பெறுவதற்காக பின்பு கோபமாகச் சண்டை போடுவார். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் மதம் கொண்ட

யானை என்ன செய்யும் தெரியுமா என்று நம்பியார் கேட்க சினம் கொண்ட சிங்கத்திடம் தோற்று ஓடும் என்று எம்.ஜி.ஆர் பதிலளிக்க ஒரு விவாதத்துடன் தொடங்கிய பிரச்னை இறுதியில் வாள் சண்டையில் முடியும். அதன் பின்பு கடற்கரையில் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவிடம் "இரு பூங்கொடி சற்று விளையாடி விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நம்பியாருடன் சரிவுப் பாறையிலும் கடல் தண்ணீரிலும் வாள் சண்டை இடுவது இன்றும் ரசிக்கப்படுகின்றது. அதனால்தான் இன்றும் இப்படம் கோவாவில் நடைபெறும் சர்வதேச விழாவில் இடம்பெற்றுள்ளது. எம்.ஜி.ஆர் மகாதேவி, அரசக் கட்டளை போன்ற படங்களில் பி.எஸ். வீரப்பாவுடன் போடும் வாள் சண்டைகளும் சிறப்பாக இருக்கும்.

எம்.ஜி.ஆர் இரண்டு கையாலும் வாள் சுழற்றத் தெரிந்தவர். மாயா மச்சீந்திரா படத்தில் இரண்டு கையாலும் வாள் சுழற்றி சண்டைப் போட்டார். மருத நாட்டு இளவரசி முதலான சில படங்களில் எம்.ஜி.ஆர் பத்துப் பேர் வந்து சுற்றி நின்று சண்டைப் போட்டாலும் தன் கை வாளை கொண்டு சுழன்று சுழன்று உட்கார்ந்து எழுந்து குதித்து தாவிச் சண்டைப் போடும் காட்சிகள் ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்டிருக்கும். இதைப் போல கம்புச் சண்டையும் பல பேருடன் மோதுவதாக அமையும்.

எம்.ஜி.ஆர் மணிமாறன், கரிகாலன் என இரண்டு வேடங்களில் நடித்த நீரும் நெருப்பும் படத்தில் வாள் சண்டையில் ஒருவர் வலது கை பயிற்சி உள்ளவர்; அடுத்தவர் இடது கை பயிற்சி உள்ளவர். இருவரும் மோதும் காட்சியில் டூப் போட்டு எடுத்திருந்தாலும் எம்.ஜி.ஆர் முகம் தெரியும் காட்சிகளில் கதாபாத்திரத்துக்கு ஏற்ப இரண்டு கைகளிலும் வாளை மாற்றி அனாயசமாக சண்டையிடுவார். இதே படத்தில் பிச்சுவா சண்டை ஷூட்டிங் நடக்கும்போது வந்த தர்மேந்திராவும் ஹேமாமாலினியும் இவர் நிஜ பிச்சுவா வைத்து சண்டைப் போடுவதை பார்த்து வியந்தனர்.

ஒரு படத்தில் நம்பியார் வீசிய கத்தி எம்.ஜி.ஆரின் கண் புருவத்தை வெட்டிவிட்டது. அதன் தழும்பு கடைசி வரை மாறவில்லை. புருவம் வரையப்படாத அவர் படங்களில் இந்தத் தழும்பைக் காணலாம். எம்.ஜி.ஆர் வால் வீசிய வேகத்தில் எதிரே சண்டையிட்ட ஸ்டன்ட் நடிகரின் வாள் நுனி உடைந்து பறந்தது. அதை எம்.ஜி.ஆர் தன் கையால் லாகவமாகப் பிடித்து 'இந்தா இதை என் நினைவாக வைத்துக்கொள்' என்றார்.

மீனவநண்பன் படத்தில் வாள் சண்டையில் வெற்றி பெற்றவருக்கே தன் மகள் லதா சொந்தம் என்று வி.ஆர்.ராமசாமி சொன்னதால் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் வாள் சண்டைப் போடுவார்கள். இது காலத்துக்கும் கதைக்கும் பொருந்தவில்லை என்றாலும் சண்டை ரசிக்கும்படியாக இருந்ததால் ரசிகர்கள் ஏற்றுக்கொண்டனர். இச்சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆர் பெல்பாட்டம்ஸ் போட்டு நடித்திருப்பார். மற்ற காட்சிகளில் கட்டம் போட்ட சங்கு மார்க் லுங்கி கட்டி வருவார். இந்தப் படப்பிடிப்பின்போது எம்.ஜி.ஆருக்கு மூச்சு வாங்குவதை யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக அவர் ஒரு பக்கமாகப் போய் சில நிமிடங்கள் யாருடனும் பேசாமல் நிற்பார் என்று ஸ்ரீதர் தன் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

எம்.ஜி.ஆரும் நம்பியாரும் ஒரு கையில் பெரிய வாள் மறு கையில் சிறு குத்துவாள் வைத்து சண்டைப் போடுவதாகவும் காட்சிகள் உண்டு. அடிமைப்பெண் படத்தில் அப்பா எம்.ஜி.ஆர் சூரக்காட்டின் தலைவனான அசோகனுடன் வலை கட்டி அதில் சண்டையிடும் காட்சியில் அசோகனுக்கு ஒரு காள் ஊனம் என்பதால் எம்.ஜி.ஆரும் ஒரு காலை மடித்துக்கட்டி அவருடன் மோதுவார். இது ஒரு புதுமையான சண்டைக் காட்சி. எதிரி தனக்குச் சம பலம் உள்ளவனாக இருக்க வேண்டுமே தவிர நம்மை விட குறைந்த பலம் உள்ளவனுடன் மோதுவது ஆண்மை ஆகாது அது வீரம் எனப் போற்றப்பட மாட்டாது என்பதால் சவால் விட்டு ஒற்றைக் காலுடன் மோதினார். இதில் அசோகனுக்கு டூப் போட்டவர் சங்கர்.

எம்.ஜி.ஆர் சட்டமன்ற தேர்தலில் ஜெயித்து முதல்வராகும் நாள் நெருங்கிவிட்டதால் அவசரம் அவசரமாக மைசூரில் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படப்பிடிப்பு நடந்தது. அதில் எம்.ஜி.ஆருடன் சண்டைக் காட்சியில் நடித்த கடைசி ஆள் இந்த சங்கர். இவர் நம்பியாருக்கு டூப் போட்டு இருந்தார்.

சண்டைக் கருவிகள்

வாள் சண்டை என்பது அரச குடும்பம் மற்றும் படை வீரர்களுக்கு உரியது. அது தவிர சாமான்ய மக்களுக்குத் தெரிந்த கிராமங்களில் அதிகமாகப் புழங்குகின்ற சிலம்பம், சுருள் வாள், செடிக் குச்சி, மான் கொம்பு போன்ற கருவிகளைக் கொண்டும் சண்டைக் காட்சிகளை எம்.ஜி.ஆர் தன் படங்களில் வைத்தார்.

சிலம்பு

சிலம்பாட்டம் பல படங்களில் இடம்பெற்றாலும் பெரிய இடத்துப் பெண் படத்தில் வரும் சிலம்புச் சண்டை மறக்க முடியாதது. மயக்க மருந்து கலந்த சோடாவைக் குடித்ததால் எம்.ஜி.ஆர் போட்டியில் தோற்றுப் போய் ஊரை விட்டே வெளியேறிவிடுவார். தான் கல்யாணம் செய்ய ஆசைப்பட்ட பெண்ணையும் இப்போட்டியின் தோல்வியால் இழந்துவிடுவார். ஆனால், ரிக்ஷாக்காரன் படத்தில் சுற்றி நின்று தன்னைத் தாக்கும் மூன்று பேருடன் ரிக்ஷா சீட்டில் உட்கார்ந்தபடியே கையில் சிலம்பு வைத்து எம்.ஜி.ஆர் சண்டைப் போட்டு மஞ்சுளாவைக் காப்பற்றுவார். இக்காட்சியில் சர்க்கஸில் வருவது போல ரிக்ஷாவை வட்டப் பாதையில் சுற்றிச் சுற்றி வரும்படி அமைத்திருந்தனர். தாயைக் காத்த தனயன் படத்தில் எம்.ஜி.ஆர் கம்பு சுற்றி வெற்றி பெற்றதைப் பாராட்டும் எம்.ஆர்.ராதா தன் கந்த விலாஸ் டீக்கடையில் வந்து ஒரு கப் டீ குடிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்வார்.

எங்க வீட்டு பிள்ளை படத்தில் வரும் நான் ஆணையிட்டல் பாட்டில் எம்.ஜி.ஆர் சவுக்கை சுழற்றியபடி படிக்கட்டுகளில்

ஓடி ஆடிப் பாடும் காட்சிகளில் அவர் சிலம்பு சுற்றுவதில் பின்பற்றும் காலடி வைப்பு முறைகளையே பயன்படுத்தியிருப்பார்.

செடிக்குச்சி

செடிக்குச்சி என்பது சிலம்புக் குச்சியைப் போலவே அளவில் சிறியது. எம்.ஜி.ஆர் ஒருவருக்கே திரையுலகில் இந்தச் செடிக்குச்சி சுற்றத் தெரியும். மாட்டுக்கார வேலன் படத்தில் எம்.ஜி.ஆர் சிறிய பைப்புகளை வைத்து செடிக்குச்சி விளையாட்டை நிகழ்த்துவார். திரையரங்கில் இந்தக் காட்சியை நம் ரசிகர்கள் ரசித்தது போல அமெரிக்க மாணவர்களும் ரசித்தனர்.

கோபுடா

கோபுடா என்பது கையில் மாட்டும் ஒரு முள் கவசம் அகும். அரசிளங்குமரி ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட சூழ்நிலையில் அதில் க்ளைமாக்ஸ் சண்டையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர கருதிய எம்.ஜி.ஆர் இந்தக் கோபுடா சண்டையை வைத்தார். இதில் கெட்டிக்காரரான சின்னப்பா தேவரை ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்து அரை மணி நேரத்தில் சமாதானமாகி செட்டுக்கு அழைத்து வந்தார். ஆக்ரோஷமான இந்தக் கோபுடா சண்டைக் காட்சி ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

மான் கொம்பு

மான் கொம்பு சண்டையை உழைக்கும் கரங்கள் படத்தில் சங்கர் அருமையாக வடிவமைத்திருப்பார். கால் சவடு [ஸ்டெப்] வைத்து எம்.ஜி.ஆர் இந்தச் சண்டையைப் போடும்போது ஒரு நேர்த்தியான கலை வடிவத்தைக் காணலாம்.

மல்யுத்தம்

எம்.ஜி.ஆர் பளு தூக்கும் போட்டியில் நம்பியார் சின்னப்பா தேவர் தோற்கடித்து விடுவார். மல் யுத்தம் குஸ்தி போன்றவற்றையும் முறைப்படி கற்றிருந்தார். காஞ்சித்

தலைவன் படத்தில் அவர் மல்யுத்தத்தில் வல்லவனான மாமல்லன் நரசிம்ம பல்லவன் வேடத்தில் நடித்ததால் ஒரு தனி மல்யுத்தக் காட்சி வைக்க திட்டமிட்டனர். அப்போது ஆந்திராவில் காவல் துறையில் பணியாற்றிய பஜ்ஜையா என்பவர் மல்யுத்தப் போட்டிகளில் பதக்கங்களையும் பரிசுகளையும் பெற்றிருந்தார். நல்ல உயரமும் கம்பீரமான தோற்றமும் கொண்டிருந்தார். அவரை அழைத்து காட்சியை விளக்கி நடிக்கவைத்தனர். எம்.ஜி.ஆரை அவர் சரியாக மதிப்பிடாததால் சொன்ன படி கேட்காமல் நடித்துவந்தார். மறுநாள் படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர் அவரை தலைக்கு மேலே தூக்கிக் கீழே போட்டார். பஜ்ஜையா எழுந்து வந்து எம்.ஜி.ஆர் காலைப் பிடித்து அழுதுவிட்டார். இதுவரை யாரும் அவரை அப்படித் தூக்கி எறிந்ததில்லை அது ஒரு மல்யுத்த வீரனுக்குப் பெருத்த அவமானம். எம்.ஜி.ஆருக்கு மல்யுத்தம் தெரியும் என்பதை நம்பாமல் அலட்சியமாக நடந்துகொண்டதற்கு மன்னிப்பு கேட்டு கண்ணீர் விட்டார்.

காவல்காரன் படத்தில் எம்.ஜி.ஆரும் ஆர்.எஸ்.மனோகரும் மல்யுத்தம் செய்வர். ஆர்.எஸ்.மனோகர் மல்யுத்தம் கற்றவர். பட்டிக்காட்டு பொன்னையா படத்திலும் மல்யுத்தக் காட்சிகள் இடம்பெறும். அன்பே வா படத்தில் வரும் சிட்டிங் புல் கர்நாடகக் காவல் துறையில் பணியாற்றி வந்தார். அவருக்கு எம்.ஜி.ஆருடன் ஒரு படத்திலாவது ஃபைட் சீனில் நடிக்க ஆசை. இவர் அன்பே வா படத்தில் இரண்டு சண்டைக் காட்சிகளில் எம்.ஜி.ஆருடன் மோதினார். அவரையும் எம்.ஜி.ஆர் அப்படத்தில் தோளுக்கு மேலே தூக்கி வைத்திருந்து கீழே போடுவார்.

10. சண்டை காட்சிகளில் சுவாரஸ்யம்

எம்.ஜி.ஆரின் வெற்றிக்கு உதவிய சண்டைக் காட்சிகள்



எம்.ஜி.ஆர் தன் சண்டைக் காட்சிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காக சம வலிமையுள்ள வில்லன், அவனது அடியாட்களாக வரும் ஸ்டன்ட் பார்ட்டி, சண்டைக் கருவிகள், சண்டையின் தீவிரத்தை அதிகரிக்கும் மழை, பாறை, மின்சாரம், பெண்களின் ஆர்வத்தை தூண்டக்கூடிய வகையில் சண்டைக்கு இடையே மாட்டிக்கொள்ளும் கதாநாயகி, குழந்தைகள் போன்ற எமோஷனல் விஷயங்கள் என ஒவ்வொரு படத்துக்கும் வித்தியாசமாக அமைப்பார். இவற்றுடன் புலி சிங்கம் பாம்பு போன்றவையும் இவரது சண்டைக் காட்சிகளில் இடம்பெறுவதுண்டு.

குலேபகாவலியில் புலியோடு மோதும் சண்டை

1955ம் ஆண்டில் பொங்கல் அன்று கேவா கலரில் வெளிவந்து வெற்றி விழா கொண்டாடிய அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தை தொடர்ந்து ஜூலை 24இல் வெளிவந்த வெற்றிப் படம் குலேபகாவலி. இப்படத்தை தயாரித்து இயக்கியவர் ஆர்.ஆர் பிக்சர்சின் ராமண்ணா. இவர் டி.ஆர் ராஜகுமாரியின் தம்பி. இப்படத்தில் எம்.ஜி.ஆர் குலேபகாவலி என்ற மலரைத் தேடி வருவார். அந்த மலர்ச்செடிக்கு ஒரு புலி பாதுகாப்பாக இருக்கும். அந்த மலரைப் பெற எம்.ஜி.ஆர் புலியுடன் சண்டை போட்டுக் கொல்ல வேண்டும். அந்தக்காலத்தில் புலிக்குட்டி கோவிந்தன் என்பவர் புலி,பாம்பு,சிறுத்தை இவற்றை வளர்த்து படப்பிடிப்புக்குத் தருவார். அவரே சண்டைக்காட்சியில் டூப்பாகவும் நடிப்பார். ஆறடி பள்ளம்

வெட்டி அதற்குள் கூண்டு அமைத்து புலியை வெளியே வர விடாமல் வைத்து சண்டைக் காட்சியைப் படமெடுக்க திட்டமிட்டனர்.

எம்.ஜி.ஆர் ஷூட்டிங்குக்கு வந்தார். வெளியே கிரேனில் இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் இருந்தனர். கோவிந்தன், புலியைக் கூண்டை விட்டு வெளியே வா என்று அழைத்ததும் புலி விருட்டென்று வெளியே வந்து ஆறடி பள்ளத்தை தாவி மேலே ஸ்டுடியோவுக்குள் புகுந்து விட்டது. கோவிந்தன் ஐயோ ஐயோ என் புலி புலி என்று ஓடுகிறார். கிரேன் சட்டென்று மேலே போனது. அதனால் இயக்குநரும் ஒளிப்பதிவாளரும் உயரே இருக்கின்றனர். ஆனால் எம்.ஜி.ஆர் எங்கும் ஓடவில்லை, பதற்றப்படவில்லை. தன் கையில் துப்பாக்கியுடன் கேமராவின் ஸ்டாண்ட் அருகே புலியைக் குறி பார்த்தபடி நிற்கிறார். அந்த ராஜ உடைக்குள் எங்கே துப்பாக்கியை மறைத்து வைத்திருந்தாரோ?. ஆனால், சமயம் வந்ததும் சட்டென்று துப்பாகியால் குறி பார்த்தபடி அங்கேயே நின்றுவிட்டார். இதுதான் எம்.ஜி.ஆரின் சமயோசித புத்தி, துணிச்சல், நிதானம். பிறகு மறுநாள் முதல் ஒரு வாரம் வரை சண்டைக் காட்சி எடுக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர் படங்களில் சிங்கம்

வேட்டைக்காரன் படத்தில் சிங்கம் ஒரு கதாபாத்திரமாகவே வரும். ஒரு காட்சியில் சிங்கம் வலியுடன் படுத்திருக்கும். அப்போது எம்.ஜி.ஆர் அதன் காலில் குத்தியிருந்த முள்ளை எடுத்துவிடுவார். அது பிறிதொரு சமயம் நன்றிக்கடனுக்காக எம்.ஜி.ஆரின் மகனை சிறுத்தையிடம் சண்டை போட்டு காப்பாற்றும். Androcles and the Lion கதை நினைவுக்கு வருகிறதா..!

ராமாவரம் தோட்டத்தில் வளர்க்கப்பட்ட சிங்கம்

அடிமைப்பெண் படத்தின் சண்டைக் காட்சியில் பயன்படுத்துவதற்காக எம்.ஜி.ஆர் இரண்டு சிங்கங்களை வாங்கிவந்தார். அதில் ராஜா என்ற ஆண் சிங்கத்தை மட்டும் சண்டைக்காகப் பழக்கினார். சிங்கத்தை வைத்துக்கொள்ள

மாநகராட்சியிடம் அனுமதி பெற்றார். அதற்கு நல்ல சாப்பாடு போட்டார். சிங்கத்தை சர்க்கஸில் பார்த்துக்கொண்டவர், ‘சர்க்கஸில் கூட நாங்க இப்படி சாப்பாடு போட்டதில்லை’ என்றார். அவ்வளவு கவனிப்பு. தினமும் எம்.ஜி.ஆர் சிங்கத்திடம் போய் அதற்கு உணவளிப்பார்.

அடிமைப்பெண் ஷூட்டிங்கில்

சிங்கத்துக்குச் சண்டைக் காட்சியில் நடிக்க மயக்க மருந்து கொடுத்த போதும் அது உர் உர் என்று உறுமிக்கொண்டே இருந்தது அதனால் செட்டில் இருந்தவர்கள் பயந்தபடியே இருந்தனர். முதல் நாள் சிங்கம் எம்.ஜி.ஆரை சட்டென்று அறைந்துவிட்டது. அங்கிருந்த ஒருவர் ஐயோ அண்ணனை சிங்கம் அடிச்சுடுச்சு என்று கத்தியதும் எம்.ஜி.ஆர் அவரை ஒரு அறைவிட்டார். ஏன் பீதியைக் கிளப்புகிறாய் என்று அதட்டினார். அதன்பின்பு அங்கிருந்த வசனகர்த்தா சொர்ணம் முதற்கொண்டு சண்டைக்காட்சிக்குத் தேவையில்லாதவர்களை வெளியேற்றினார். பிறகு படப்பிடிப்பு தொடர்ந்து நடந்தது. காலையில் அடி கொடுத்தவருக்கு மாலையில் ஆயிரம் ரூபாய் அன்பளிப்பு கொடுத்து இனி அவர் அப்படி உணர்ச்சிவசப்பட்டு எங்கேயும் கத்தக் கூடாது என்று அறிவுரை கூறினார்.

அடிமைப்பெண் படத்துக்குத் தொடர்ந்து பத்து நாட்கள் சிங்கத்துடனான சண்டைக் காட்சிகள் எடுக்கப்பட்டன. சிங்கம் எம்.ஜி.ஆரின் தோள் மீது முன்னங்கால் இரண்டையும் போட்டு நிற்கும்போது அதன் முழு எடையைத் தாங்கக்கூடிய வலிமை எம்.ஜி.ஆருக்கு இருந்தது. சிங்கத்துடன் உருளும்போது அதன் முழு எடையை எம்ஜி ஆர் தாங்கிகொண்டு உருண்டார். எம்.ஜி.ஆரின் உடல்வலிமையும் மனத்துணிவும் அந்தக் சண்டைக் காட்சியை வெற்றி பெறச் செய்தது. அந்தக் காட்சியில் ஜெயலலிதா, பண்டரிபாய் போன்ற பெண்களும் இடம்பெற்றது, படப்பிடிப்பை மிகவும் ரிஸ்க் உடையதாக்கியது.

எம்.ஜி.ஆர் நினைவில்லத்தில் அதே சிங்கம்

அடிமைப்பெண் படப்பிடிப்பு முடிந்ததும் இந்தச் சிங்கம் சர்க்கஸுக்குத் திருப்பித் தரப்பட்டது. சிங்கம் அங்கே இறந்ததும் அதன் உடலை எம்.ஜி.ஆர் பம்பாய்க்கு அனுப்பி பாடம் செய்து வாங்கினார். இப்போது அது எம்.ஜி.ஆர் நினைவில்லத்தில் கண்ணாடிக் கூண்டுக்குள் கம்பீரமாக நிற்கிறது. எம்.ஜி.ஆர் ரசிகர்கள் இந்தச் சிங்கத்தின் அருகே நின்று படம் எடுத்துக்கொள்கின்றனர்.

கதைக்கு ஏற்ற சண்டைக் காட்சி வடிவமைப்பு

படத்தில் எம்.ஜி.ஆர் என்ன தொழில் செய்கின்றாரோ அதற்கேற்ப சண்டைக் காட்சி அமைக்கப்படுவதும் உண்டு, கதை நடக்கும் இடத்துக்கேற்ப சண்டைக்காட்சிகள் அமைக்கப்படுவதும் உண்டு. அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

விவசாயி படத்தில் கடைசிக் காட்சியில் அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்கதிர்கள் மீது நம்பியார் முகமூடி அணிந்து பூச்சி மருந்து அடித்ததால் எம்.ஜி.ஆர் அவருடன் சண்டையிடுவார். இந்த முகமூடிச் சண்டை ரசிகர்களை மிகவும் கவர்ந்தது.

மாட்டுக்காரவேலன் படத்தில் எம்.ஜி.ஆர் தன் குடிசைக்குள் தோசை சுட்டுக்கொண்டிருப்பார். அப்போது வெளியே அசோகனின் ஆட்கள் வந்து அவரை சண்டைக்கு இழுக்கும்போது எம்.ஜி.ஆர் மாட்டுக்குக் கழுத்தில் அணிவிக்கும் சலங்கை கோத்த கழுத்துப்பட்டியை வைத்து சண்டை போடுவார். அதன் வீச்சால் எதிரிகளின் முகத்தில் விழும் கீறல்கள் ஆங்கில எழுத்துகளைப் போல தோன்றும். இதுவும் ரசிகர்கள் ஆரவாரம் செய்து பார்க்கும் காட்சி ஆகும்.

உரிமைக்குரல் படத்தில் நம்பியாரின் ஆட்கள் எம்.ஜி.ஆரின் ரேக்ளா வண்டி வரக் கூடாது என்பதற்காக அவர் வரும்

பாலத்துக்கு தீ வைத்து விடுவர். ஆனால், எம்.ஜி.ஆர் சரியாக டைமிங் பார்த்து ரேக்ளாவுடன் அந்தப் பாலத்தை கடந்துவிடுவர். இந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர் டூப் போடாமல் செய்திருப்பார். அவர் படம் முழுக்க ரேக்ளாவில் வருவதால் ரேக்ளாவைச் சண்டைக்காட்சியிலும் சேர்த்திருப்பார்.

ரிக்ஷாக்காரன் படத்தில் ரிக்ஷாவில் இருந்தபடியே எதிரிகளைக் கம்பு சுற்றி விரட்டியடிப்பார். படகோட்டியில் எம்.ஜி.ஆர் வயதான தாத்தாவாக மாறு வேடத்தில் வந்து தன் படகில் இருந்தபடி அடுத்த படகில் இருந்த அசோகனின் கம்பை அடித்துத் தூக்கி கடலில் எறிவார். கலங்கரை விளக்கம் படம் மாமல்லன் ஒரு கதாபாத்திரமாகவும் அவன் எழுப்பிய மகாபலிபுரமே கதைக்களமாகவும் கொண்டிருந்ததால் அந்த மலைப் பாறைகளில் சண்டைக் காட்சிளை அமைத்திருப்பார்.

கடைசி சண்டையில் இயற்கையோடு போராட்டம்

படத்தின் கடைசி சண்டைக்காட்சி வரும் போது வாழ்வா சாவா போராட்டம் போல தோன்றும். இதில் எம்.ஜி.ஆர் வென்றால் அது நீதியின் வெற்றி வில்லன் வென்றால் அது அநீதியின் வெற்றி என்ற இக்கட்டான நிலையில் எம்.ஜி.ஆர் சில இயற்கை சீற்றங்களையும் இரக்க உணர்வுகளையும் இடம்பெறச் செய்வார். இயற்கை சீற்றம், படம் பார்க்கும் ஆண்களை கவர்வதற்கான உத்திமுறை ஆகும்.

அடுத்ததாக வெள்ளமும் நெருப்பும் சூழ்ந்து ஆபத்தை விளைவிக்கும் சண்டைக் காட்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகளையும் எம்.ஜி.ஆர் இடம்பெறச் செய்வார். இரக்க உணர்வை மிகுவிக்கும் இச்சூழ்நிலையில் இயற்கையோடு போராடும் நிலையும் எம்.ஜி.ஆருக்கு ஏற்படும். இது பெண் ரசிகைகளை கவர்வதற்கான உத்திமுறை ஆகும். இவற்றிற்கு இரண்டு மூன்று உதாரணங்களை மட்டும் இங்குக் காண்போம்.

நாடோடி மன்னன் படத்தில் கடைசி காட்சிகளில் கழுகுக்குகை சிதைந்து வெள்ளமாக நீர் வெளியேறும். அந்த

வெள்ளத்தில் மன்னன் மார்த்தாண்டனைக் காப்பாற்றும் முயற்சியில் நாடோடி போராடுவதை பார்க்கும் ரசிகர்கள் இருக்கையின் நுனிக்கே வந்திருப்பர்.

என் கடமை படத்தின் கடைசிக் காட்சியில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் சிக்கியிருக்கும் இடத்தில் தண்ணீர் மேலே மேலே ஏறி அவர்களை மூழ்கடிக்கும். மேலும் கடைசியில் எம்.ஜி.ஆரின் ஷூவும் மாட்டிக்கொண்டு படம் பார்ப்பவர்களுக்கு டென்ஷனை அதிகப்படுத்தும். தண்ணீரின் மட்டம் உயர்வதும் சரோஜாதேவி மயங்கிக் கிடப்பதும் படம் பார்க்கும் ஆண்களையும் பெண்களையும் டென்ஷனோடு படம் பார்க்க வைக்கும்.

அரசகட்டளை படத்தில் சரோஜாதேவியைக் காப்பாற்றும் முயற்சியில் எம்.ஜி.ஆர் மணல் மேடாகிவரும் வெற்றி மண்டபத்தை விட்டு வெளியேற முயல்வார். அப்போது ஒவ்வொரு வாயில் வழியாக வெளியேற முயலும் போது அங்கு பாதியில் மணல் கொட்டி வழியை அடைத்துவிடும். அடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடியும்போது படம் பார்க்கும் பெண்கள் பரிதவித்துப் போவார்கள். நாடோடி மன்னனில் அம்பு பட்டு இறந்து கிடக்கும் மானை காட்டி பானுமதியின் மறைவை குறிப்பாக உணர்த்தியது போல அரச கட்டளையில் நரம்பு அறுந்த வீணையை காட்டி சரோஜாதேவியின் மறைவை உணர்த்துவார்கள் எம்.ஜி.ஆரின் ஜோடி அவரது அத்தை மகள் ஜெயலலிதாதான் என்பதை உணர்த்த அவர் கனவில் பாடிய ஒரு டூயட் பாட்டைக் காட்டுவார்கள். உரிமைக்குரல் படத்திலும் என் அண்ணன் படத்திலும் கடைசி சண்டைக் காட்சிகளில் நெருப்பு முக்கிய இடத்தை பெறும்.

கடைசிக் காட்சியில் விரட்டுதல் [சேசிங்]

ஆங்கிலப் படங்களில் கார் சேஸிங், பைக் சேஸிங் என்பன ரசிகர்களால் மிகவும் விரும்பப்படுவன. அது போல தமிழ்ப் படத்தில் வைக்க இயலாவிட்டாலும் தேவையும் இல்லை என்பதாலும் எம்.ஜி.ஆர் தனது படங்களில் தனக்கு

முக்கியத்துவம் கிடைக்கும் வகையில் சில சேஸிங் காட்சிகளை வைத்திருப்பார்.

என் அண்ணன் படத்தில் தன் குதிரை வண்டியைக் கொண்டு காரை விரட்டிச் சென்று பிடிப்பார். தாயின் மடியில் படத்தில் இருவரும் சகோதர முறை என்று தெரிந்தவுடன் ஜீப்பில் படு வேகமாக மலை உயர்த்துக்குப் போய் விழுந்து செத்துப்போக எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் முயல்வர். அப்போது சகோதரர்கள் கிடையாது என்பதைச் சொல்ல நாகேஷ் இன்னொரு வண்டியில் படுவேகமாக இவர்களைத் துரத்தி வருவார். மீனவ நண்பன் படத்தில் கடைசியில் மின்சாரப் படகில் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டு வருவர். இதில் பொம்மை படகுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கும். ஸ்டுடியோவுக்குள் வைத்து அதிக காட்சிகள் எடுக்கப்பட்டிருக்கும்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் எம்.ஜி.ஆர் ஸ்கேட்டிங் செய்தபடியே பலருடன் வாள் சண்டை போடுவார். அடுத்து விஷ ஊசியுடன் ஒருவர் தாக்க வரும்போது அவருடனும் மோதுவார். இந்தக் காட்சி சிறப்பாக வரவேண்டும் என்பதற்காக முதலில் நீச்சல் குளத்திலும் பிறகு தன் வீட்டு மொட்டை மாடியிலும் எம்.ஜி.ஆர் 55ஆவது வயதில் ஸ்கேட்டிங் பயிற்சி பெற்றார். பறக்கும் பாவை படத்தில் நடிக்கும் போது பார் விளையாட்டு பயின்றார். டூப் இல்லாமல் அவர் டிரபீஸ் விளையாடியிருப்பதை காணலாம். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் சண்டையும், பாட்டும் மாறி மாறி வந்து ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

இன்றைக்கும் சிறு நகரங்களில் திரையரங்க உரிமையாளர்கள் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்றால் எம்.ஜி.ஆர் படம் போட்டால் போதும் என்கின்றனர். அதுவும் உலகம் சுற்றும் வாலிபன் படத்தை போட்டால் வசூல் அள்ளி விடலாம் என்று நம்பும் அளவுக்கு இப்படம் இலாபம் தருகிறது.

நடிகைகளின் சண்டைக்காட்சி

எம்.ஜி.ஆர் படத்தில் பெண்களுக்கு முக்கிய ரோல் இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டு வருவதுண்டு. அது சரியல்ல. கதைக்கு ஏற்ப அவர் முக்கியப் பங்கை வழங்கியுள்ளார். அதிமுக ஆரம்பித்த பின்பு எம்.ஜி.ஆர் படத்தில் லதாவின் விழிப்புஉணர்வு வசனங்களும் காட்சிகளும் ஏராளமாக இடம்பிடித்தன. அதற்கு முன்பு சாவித்திரி மகாதேவி படத்திலும் பி பானுமதி ராஜா தேசிங்குப் படத்திலும் வாள் சண்டை போட்டு தங்களைக் காத்துக்கொள்ள முனைவார்கள். மருத நாட்டு இளவரசியிலும் அடிமைப்பெண்ணிலும் எம்.ஜி.ஆருக்கே கதாநாயகிகள்தான் சண்டை சொல்லிகொடுப்பர். முகராசி படத்தில் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவுக்குச் சிலம்பு சுற்ற கற்றுக்கொடுப்பார். இதுவும் பெண்கள் ஏதேனும் ஒரு தற்காப்பு கலையைக் கற்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தவே எம்.ஜி.ஆர் இக்காட்சியை அமைத்திருப்பார்.

சண்டைக்காட்சிகளில் பாட்டும் ஆட்டமும்

தமிழ் பாரம்பர்யத்தில் ஒயிலாட்டம், சிலம்பாட்டம், வில்லுப்பாட்டு போன்ற வீர விளையாட்டுகளை ஆட்டம் பாட்டம் என்றே அழைக்கின்றனர். அவற்றிற்கென்று தனி தாளக்கட்டில் பாடல்களும் உள்ளன. அதனை பின்பற்றி எம்.ஜி.ஆர் தன் படங்களில் சில சண்டை காட்சிகளில் ஆடல்பாடலையும் புகுத்தியுள்ளார்.

நீரும் நெருப்பும் படத்தில் ‘கடவுள் வாழ்த்து பாடும் இளங்காலை நேரக் காற்று’ என்ற பாடல் காட்சி சிறுவர்கள் சண்டைப் பயிற்சி பெறுவதை காட்டும். இதில் எம்.ஜி.ஆர் கையில் இரண்டு வாள்களை ஏந்தி வீசி அபிநயித்தபடி பாட்டுப் பாடிக்கொண்டு வருவார். அப்போது மிகவும் லாகவமாக இரண்டு பக்கமும் வரிசையாக வந்து எட்டு போடும் சிறுவர்கள் மீது படாமல் ஆடிவருவார். ஒரு சிறுவனுடன் மிகவும் மென்மையாக தன் வாளால் அவன் வாளை தட்டிச் சண்டையிடுவார். அவரது வாளின் அசைவில்

காணப்படும் மென்மை அவரது நடிப்புக்கு ஓர் உதாரணம் ஆகும்.

அரச கட்டளை படத்தில் சரோஜாதேவியை ஆட விடாமல் தடுப்போரை விரட்டி அடிக்கச் சண்டையிடும் காட்சியில் ‘ஆடி வா ஆடி வா ஆடி வா --ஆடப்பிறந்தவளே ஆடி வா -புகழ் தேடப் பிறந்தவளே பாடி வா -- ஆடி வா ஆடி வா ஆடி வா’ என்று பாடவும் செய்வார்.

தெய்வத்தாய் படத்தில் தன்னைச் சிறைப்பிடித்திருக்கும் மூவரை விட்டு தப்பியோடுவதற்கு பார்க்கும் ஒத்திகையாகப் பாட்டோடு கலந்த ஒரு சண்டைக் காட்சி இடம்பெறும். ‘மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் –அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும் --உள்ளம் என்றொரு ஊரிருக்கும் அந்த ஊருக்குள் எனக்கொரு பேரிருக்கும்’ என்று பாடியபடி சண்டையிடுவார். பாட்டு முடியும் தருவாயில் வெளியேறிவிடுவார்.

கலைஞரின் எங்கள் தங்கம் படத்தில் திமுகவின் கட்சி நிகழ்வுகளை விளக்கும் ‘நான் செத்து பொழச்சவன்டா – எமனை பார்த்து சிரிச்சவன்டா’ என்ற பாடல் காட்சியில் சண்டைக் காட்சியும் இணைந்திருக்கும். பாட்டு முடியும்போது அனைவரையும் அடித்து போட்டிருப்பார்.

சண்டை காட்சியில் நகைச்சுவை


சண்டை காட்சியில் காமெடி நடிகர்கள் எம்.ஜி.ஆருடன் இருந்தால் நகைச்சுவையும் சேர்ந்திருக்கும். இது போன்ற காட்சிகள் கதையின் பிரச்னை தீவிரமடையாத வேளையில் அதாவது படத்தின் தொடக்கத்தில் இடம்பெறும். ஆயிரத்தில் ஒருவன் படத்தில் இதுபோன்ற நகைச்சுவை காட்சி முதல் சண்டைக் காட்சியில் இருக்கும்.

காவல்காரன் படத்தில் எம்.ஜி.ஆர் ஓங்கி ஒரு பீரோவை குத்துவார் பீரோ உடைந்துவிடும் உள்ளே போன தன் கை வெளியே வந்ததும் அந்தக் கையில்கட்டியிருக்கும் கை கடிகாரத்தை காதில் வைத்து ஓடுதா என்று பார்ப்பார். சண்டையின் தீவிரத்தில் மூழ்கியிருக்கும் ரசிகர்கள் இந்தக்

காட்சியைக் கண்டதும் சிரித்துவிடுவர். எதிரியை மடக்கி துப்பாக்கியைப் பறித்து திரும்பவும் அவரிடமே எறிந்துவிடும் காட்சிகளில் எம்.ஜி.ஆர் துப்பாக்கியின் குண்டுகளை எடுத்துவிட்டு சத்தமில்லாமல் எதிரியின் வீரத்தைச் செல்லா காசாக்கும் போது ரசிகர்கள் சிரித்து மகிழ்கின்றனர்.

தொடர்ந்து 24 மணி நேர படப்பிடிப்பு

11. மதம், மொழி, இன வேறுபாடுகள் அற்றவர் எம்.ஜி.ஆர்



பாரத ரத்னா விருது இந்திய இலங்கையின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டதால் நம் நாட்டின் தேசியத் தலைவர்களுள் ஒருவரான எம்.ஜி.ஆருக்குக் கிடைத்தது. தென்னிந்திய மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் வடக்கே டில்லி பம்பாய் கொல்கத்தா ஆகிய நகரங்களிலும் அ.தி.மு.க கட்சி செயல்பட்டதால் எம்.ஜி.ஆர் தேசியக் கட்சி தலைவர் அந்தஸ்தை பெற்றார். இந்த அந்தஸ்துக்குரிய அஸ்திவாரம் எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றங்களால் 1953 முதல் அமைக்கப்பட்டது. பாரதப் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரி இருந்த போது அவர் அந்தமான் தீவில் பணத்தோட்டம் எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றத்தை திறந்துவைத்தார். இன்றும் உலகில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எம்.ஜி.ஆர் பற்றிய நினைவுகள் பசுமையாக உள்ளன. வெளிநாடுகளில் குறிப்பாக ஃபிரான்ஸ், சிங்கப்பூர் மலேசியா போன்றவற்றில் எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் விழா வருடந்தோறும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. கர்நாடகாவின் தலைநகரான பெங்களூரிலும் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. மகாராஷ்ட்டிராவின் எம்.ஜி.ஆர் மன்ற தலைவர் இதயக்கனி இதழுக்கு விளம்பரமும் நூற்றாண்டு விழா வாழ்த்தும் அனுப்புகிறார்.

நாடெங்கும் கட்சிஅலுவலகமாக மாறிய ரசிகர் மன்றம்

அவசர நிலையைப் பிரகடனம் செய்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மாநிலக் கட்சிகளின் வளர்ச்சியை

விரும்பவில்லை. அவற்றை ஒடுக்கிவிடுவார் என்ற தகவல் வந்தபோது எம்.ஜி.ஆர் தனது அண்ணா தி.மு.கவை அனைத்திந்திய அண்ணா தி மு க என்ற பெயரில் தேசியக் கட்சியாக மாற்றினார். இதற்காக மற்ற மாநிலங்களில் கட்சி அலுவலகங்கள் திறக்கப்பட்டன. உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. அ.தி.மு.க சார்பில் தேர்தலில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டனர். அவர்கள் சட்டமன்றத்தில் அந்த மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்காக குரல் கொடுத்தனர். இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தவை மற்ற மாநிலங்களில் இயங்கி வந்த எம்.ஜி.ஆர் ரசிகர்மன்றங்கள் ஆகும்.

மற்ற மாநிலங்களுக்குச் செய்த உதவிகள்

எம்.ஜி.ஆர் நடித்து வந்த காலத்திலும் அரசியலுக்கு வந்த பிறகும் பிறருக்கு உதவுவதில் அவர் நம்மவர், வேற்றவர் என்று வேறுபாடு கண்டதில்லை. எந்த மாநிலமாக இருந்தாலும் எந்த மொழி பேசும் மக்களாக இருந்தாலும் அவர் உதவி செய்யத் தயங்கியதே இல்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அவர் செய்த உதவிகளில் சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே போர் வந்த போது உடனே எம்.ஜி.ஆர் போர் நிதியாக ரூ. 75,000 தருவதாக அறிவித்து முதல் தவணையாக காமராஜரிடம் 25,000க்கான காசோலையை தந்தார். அதற்கு பாரத பிரதமர் நேருஜி அவர்கள் நன்றி தெரிவித்து கடிதமும் அனுப்பினார்.

ஒரிசாவுக்கு நிவாரண நிதி திரட்டும் முயற்சியில் சென்னையில் ஒரு இந்தி படத்தைப் போட்டு அதன் வசூலை அனுப்ப சிலர் முயன்ற போது அதற்கான அழைப்பு எம்.ஜி.ஆருக்கு வந்தது. அந்தப் படத்தின் வசூல் தொகைக்குச் சமமான அளவு தொகையை எம்.ஜி.ஆர் தனிப்பட்ட முறையில் வழங்கினார்.

ராஜஸ்தானுக்கு அவர் அடிமைப்பெண் படப்பிடிப்புக்குச் சென்றபோது அண்மையில் அங்கு ஏற்பட்ட தீ விபத்துக்கு

ஐம்பதாயிரம் நிதி உதவி அளித்தார். மறுநாள் செய்தித்தாள்களின் தலைப்புச் செய்தியாக இச்செய்தியே இடம்பெற்றது.

கர்நாடகாவில் ஒரு விழாவில் கலந்துகொள்ள எம்.ஜி.ஆர் சென்றிருந்த போது அங்கு பார்வையற்றோருக்கும் பேசும் திறனற்றோருக்குமாக ஐம்பதாயிரம் ரூபாய் உதவியளித்தார். எம்.ஜி.ஆர் அமெரிக்கா போய் சிகிச்சை பெற்று வந்த பிறகு அவருக்குப் பேசும் திறன் குறைந்தபோது அவர் அந்தக் கஷ்டத்தை உணர்ந்து தன் ராமாவரம் தோட்டத்தில் இக்குறைபாடு உடைய சிறுவர்களுக்குப் பள்ளி அமைக்கும்படி தன் உயிலில் எழுதிவைத்திருந்தார் என்று நம்மில் பலர் கருதுகிறார்கள். ஆனால், அவர் நன்றாகப் பேசி வந்த காலத்திலேயே அவருக்கு மாற்று திறனாளிகள் மீது அன்பும் அக்கறையும் இருந்தது. அவர், அவர்களுக்கு பல உதவிகள் செய்திருக்கிறார். தமிழ்நாட்டிலும் அவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நிறைய உதவியிருக்கிறார்.

கொல்கத்தாவுக்குப் பணம் படைத்தவன் படப்பிடிப்புக்குச் சென்றிருந்த போதும் அவர் அங்கு கொல்கத்தா தமிழ்ச் சங்கத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார். அச்சங்கத்தின் வளர்ச்சிக்கு நிதி அளித்தார். பின்பு அவர் முதல்வரான பிறகு அங்கு சென்றிருந்த போது அவரை அங்குள்ள ஆளுநர் மாளிகையில் தங்கச் செய்தனர். ஆனால், அங்கிருந்த கெடுபிடிகளைப் பார்த்துவிட்டு என்னைப் பார்க்க வரும் பொது மக்களுக்கு இந்த இடம் வசதிப்படாது என்று சொல்லிவிட்டு ஓர் ஓட்டலில் வந்து தங்கினார். அங்கு எம்.ஜி.ஆரைப் பார்க்க வந்த தமிழர்களின் கையில் அவர் தனிச்செயலர் ரூபாய் நோட்டுக் கட்டிலிருந்து பிரித்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துக்கொண்டே இருந்தார்.

அமெரிக்காவுக்கு எம்.ஜி.ஆர் போயிருந்தபோது ஒரு பெண் அங்கு வந்து எம்.ஜி.ஆரிடம் உதவி கேட்டார். எம்.ஜி.ஆர் அவர்

கேட்டதுக்கும் அதிகமான டாலர் நோட்டுக்களை அவருக்குக் கொடுத்து உதவினார்.

முதல்வரான பிறகும் வெளி மாநிலங்களுடன் இணக்கமான உறவு

தமிழ்நாடு தன் விவசாயத்தின் தண்ணீர் தேவைக்காக கேரளா மற்றும் கர்நாடகத்தை எதிர்பார்த்து இருப்பதால் எம்.ஜி.ஆர் இம்மாநில முதல்வர்களுடன் இணக்கமாகப் பேசி தன் மாநிலத் தேவையை நிறைவேற்றினார். கோர்ட் வழக்கு என்று தானும் அலையவில்லை பிறரையும் சிரமப்படுத்தவில்லை. குடிநீர் தேவையையும் இவ்வாறு அன்போடு கேட்டு பெற்றுக்கொண்டார்.

எம்.ஜி.ஆர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது கேரளாவில் ஏ.கே அந்தோணி, இ.கே நயினார் மற்றும் கருணாகரன் ஆகியோர் முதல்வர்களாக இருந்தனர். ஒரு முறை எம்.ஜி.ஆர் அங்கு ஒரு கூட்டத்தில் பேசிய போது அவர் தமிழில் பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரை மலையாளத்தில் பேசும்படி கூறினர். ஆனால் அவர் மறுத்துவிட்டார் அவருக்கு ஓரளவு மலையாளம் பேச தெரிந்திருந்தும் கேரளாவில் இரண்டு வார்த்தை கூட பேச மறுத்துவிட்டார். “நான் விவரம் தெரிந்து பேசிய மொழி தமிழ்; படித்த மொழி தமிழ்; என்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் நாடு தமிழ்நாடு; எனவே நான் தமிழில்தான் பேசுவேன். விருப்பம் இல்லாதவர்கள் எழுந்துபோய்விடுங்கள்'' என்றார். அவ்வாறு அவர் மலையாளம் பேச மறுத்தும் அவரால் அம்மாநிலத்துடன் இணக்கமான உறவு வைத்திருக்க முடிந்தது.

கேரளாவில் பிறந்த தன் உறவினர் இருவரும் தமிழ்நாட்டில் முதல்வர்களாக இருந்ததனால் அங்கு எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மையார் பிறந்த ஊரான வைக்கத்தில் இருவரும் சேர்ந்து நிற்பது போல ஒரு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. ஜானகி அம்மையாரின் சகோதரன் நாராயணன் என்பவர் இச்சிலையை நிறுவி அன்றைய முதல்வரைக் கொண்டு திறப்பு விழா நடத்தினார்.

எம்.ஜி.ஆர் என்ற எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழ்நாட்டுக்கு முதலமைச்சராக இருந்த போது கர்நாடகத்தில் ராமகிருஷ்ண ஹெக்டேயும் ஆந்திராவில் என்.டி.ராமாராவும் (புதுச்சேரியில்
1974-ல் ராமசாமி என்பவரும் கூட சிலகாலம் முதல்வராக இருந்தார்) இருந்ததை பத்திரிகைகள் குறிப்பிட்டுக் காட்டி தென்னிந்தியாவில் 'ராம' ராஜ்யம் நடப்பதாக எழுதின.

கர்நாடகாவில் குண்டு ராவ் முதலமைச்சராக இருந்தபோது ஒரு நாள் எம்.ஜி.ஆர் அவர் வீட்டுக்குச் சென்றார். அங்கு காலை உணவு சாப்பிட்டார். தண்ணீர் குடிக்காமல் இருந்தார். குண்டு ராவ் தன் பெயர் எம் குண்டு ராவ் என்பதை சுருக்கி எம்.ஜி.ஆர் என்று தன்னை நண்பர்களிடம் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எம்.ஜி.ஆர் மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார். அவரது தாயார் எம்.ஜி.ஆரிடம் சாப்பிட்ட பிறகு ஏன் தண்ணீர் குடிக்கவில்லை. தண்ணீர் குடிக்க வேண்டாமா? குடியுங்கள் என்றார். அதற்கு எம்.ஜி.ஆர் என் மக்கள் தண்ணீர் இல்லாமல் அங்கு வாடுகிறார்கள் உங்கள் மகன் எங்களுக்குத் தண்ணீர் தர மறுக்கிறாரே என்றார். அம்மா தன் மகனைப் பார்த்தார். அவரது கருணைப் பார்வை எம்.ஜி.ஆரின் கோரிக்கையை நிறைவேற்றியது. குண்டுராவ் தண்ணீர் திறக்க உத்தரவிட்டார். அண்டை மாநிலங்களுக்கு இடையே தாய் பிள்ளை போல பேசித்தான் தண்ணீர் பெற வேண்டுமே அல்லாது வம்பு வழக்கு என்று போனால் தீர்ப்பு கிடைக்கலாம் ஆனால் அது தீர்வு ஆகாது என்பதை எம்.ஜி.ஆர் நன்கு உணர்ந்திருந்தார்.

சென்னைக்குத் தெலுங்கு கங்கை திட்டம்

சென்னையில் மக்கள் தொகை பெருகிய அளவுக்கு உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்க இயலவில்லை. அதனால்தான் இன்று மழை பெய்தவுடன் வீடுகள் தண்ணீரில் மிதக்கின்றன. இதற்கு ஒரு தீர்வாக எம்.ஜி.ஆர் தலைநகரை மாநிலத்துக்கு நடுவில் உள்ள திருச்சிக்கு மாற்றலாம் என்றார். அதற்கு மிகப்பெரிய எதிர்ப்பு வந்தது.

சென்னை மக்கள் குடிநீரின்றி தவித்தபோது எம்.ஜி.ஆர் ஆந்திர முதல்வர் என்.டி.ஆரிடம் பேசி தெலுங்கு கங்கை திட்டத்தைக்கொண்டு வந்து தண்ணீர் பிரச்னையைத் தீர்த்து வைத்தார். கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்து தாகத்தை தணித்தது. இது தென்னிந்தியாவின் முதல் நதி நீர் இணைப்பு திட்டம் எனலாம். திட்டங்களைப் பற்றி பேசிக்கொண்டே இருக்காமல் தன்னாலான ஒரு முயற்சியை செய்து காட்டியவர் எம்.ஜி.ஆர்.

இந்தியப் போராட்ட வீரர் பால கங்காதர திலகருக்கு ஒரு சிலை எழுப்ப வேண்டும் என்று அவரது பேரன் தெரிந்தவர்களிடம் நிதி திரட்டினார். அப்போது அவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சியைச் சந்தித்தார். ம.பொ.சி அவர்கள் அவரை முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் அழைத்துவந்தார். எம்.ஜி.ஆர் தன் சொந்தப்பணம் ஐம்பதாயிரத்தை வழங்கினார். அரசாங்கப் பணத்தை தருவதாக இருந்தால் அந்தக் கோப்பு பலரிடம் போய் கையெழுத்து பெற்று வர வேண்டும். அதற்குக் கால தாமதம் ஆகும் அதனால் நல்ல காரியத்துக்கு நானே தருகிறேன் என்றார்.

தென்னிந்தியாவின் முப்பெரும் ஹீரோக்கள்

தென்னிந்தியத் திரையுலகில் தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர் கர்நாடகத்தில் ராஜ்குமார் மற்றும் ஆந்திராவில் என்.டி.ஆர் ஆகியோர் பிரபலமான ஹீரோக்களாக இருந்தனர். அவர்களுக்குள் நல்ல நட்பும் உறவும் இருந்தது. எம்.ஜி.ஆர் ஆந்திராவின் மக்களால் தேவுடா என்றழைக்கப்பட்ட என்.டி.ராமாராவிடம் மிகுந்த அன்புடன் இருந்தார். என். டி. ஆர். அரசியலுக்கு வரும் முடிவை எடுத்ததும் எம்.ஜி.ஆரிடம் வந்து வாழ்த்துப் பெற்றார். தன் கட்சிக்குத் தெலுங்கு ராஜ்யம் என்று பெயர் வைக்கப் போவதாகச் சொன்னதும் எம்.ஜி.ஆர் ராஜ்யம் வேண்டாம் தேசம் என்று வையுங்கள் என திருத்திக் கொடுத்தார். என்.டி.ஆரும் சம்மதித்தார். தெலுங்கு தேசம் உதயமாயிற்று. எம்.ஜி.ஆர் இறந்ததும் என்.டி.ஆர் என் மூத்த அண்ணன் இறந்துவிட்டார் என்று

சொல்லி அழுதார். எம்.ஜி.ஆரின் உடல் அடக்கம் செய்யப்படும்வரை உடன் இருந்தார்.

கர்நாடகத் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த ராஜ்குமார் எம்.ஜி.ஆர் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். ராஜ்குமார் படத்தின் பாட்டுக்கள் ஒளிபரப்பாகும்போது அதை எம்.ஜி.ஆர் மிகவும் ரசித்துப் பார்ப்பாராம். அவர் பேச இயலாத நாட்களிலும் கூட ராஜ்குமார் பாட்டு ஒளிபரப்பானால் நம்ம ராஜ்குமார் என்று தன் நெஞ்சைத் தொட்டுக்காட்டி மகிழ்ச்சியடைவாராம்.

எம்.ஜி.ஆரின் மதம் சார்ந்த வெளிப்பாடுகள்

மொழி எல்லைகளைக் கடந்து நின்ற எம்.ஜி.ஆர் மத எல்லைகளையும் கடந்து நின்றார். அவர் திமுகவில் இருந்த வரை இந்துச் சமயப் பழக்க வழக்கங்களை ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை. அண்ணா அவர்கள் சொன்ன 'நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம் பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்' என்ற கொள்கையைப் பின்பற்றினார். அதுபோல கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்களைத் தன் படங்களில் காட்டினாலும் அவற்றின் கொள்கைகளைப் பெரிதாக ஆதரிக்கவும் இல்லை. எதிர்க்கவும் இல்லை.

எம்.ஜி.ஆர்கிறிஸ்தவ மதமும் மக்களும்

எம்.ஜி.ஆர் தன் படங்களில் சிலுவையில் அறைந்த இயேசு கிறிஸ்துவைப் பல காட்சிகளில் காட்டியிருக்கிறார். எங்கள் தங்கம் படத்தில் அவர் ஒரு கம்பை குறுக்கே பிடித்துக்கொண்டு நிற்பது கூட நிழல் காட்சியாக சிலுவை இயேசு போல காட்டப்படும். ரிக்ஷாக்காரன் படத்தில் அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு என்ற பாட்டில் அவர் சிலுவை இயேசு சிலையைக் கட்டிப் பிடித்து நிற்கும் காட்சி வரும்.

எம்.ஜி.ஆர் தான் நடித்த ஜெனோவா படத்தில் சிப்ரஸ் நாடு மன்னனாக நடித்திருப்பார். அந்தப் படத்தில் மட்டும் அவர் முழங்காலிட்டு பைபிள் வாசிப்பது போன்ற காட்சி உண்டு.

பரமபிதா என்ற பெயரில் அவரை இயேசுவாக நடிக்கவைத்து ஒரு படம் எடுக்க திட்டமிட்டனர். ஆனால், அவரை சவுக்கால் அடித்து அவர் தலையில் முள்கிரீடம் வைத்து அழுத்துவதை ரசிகர்கள் காணப் பொறுக்க மாட்டார்கள். திரையைக் கிழித்து விடுவர் என்று திரையரங்க உரிமையாளர்கள் தெரிவித்ததால் படம் எடுக்கும் முயற்சி கைவிடப்பட்டது. போட்டோ ஷூட்டில் எடுக்கப்பட்ட எம்.ஜி.ஆர் இயேசுவாக தோற்றம் தரும் படம் கேரளாவில் பலர் வீடுகளில் மாட்டப்பட்டிருந்தது. இதைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர் 'என்னப்பா உயிரோடு இருக்கும்போதே என் படத்துக்கு பத்தி கொளுத்துகிறார்களா' என்று சிரித்தாராம்.

எம்.ஜி.ஆர் சினிமாவில் ஏழ்மையான சூழ்நிலையில் இருக்கும் தன் வீட்டை காட்டும்போது அந்த வீட்டில் திருவள்ளுவர் பாரதியார் அறிஞர் அண்ணா ஆகியோர் படங்களோடு இயேசு கிறிஸ்து படத்தையும் மாட்டியிருப்பார். இதனால் கிறிஸ்தவர்கள் அவரை சீக்ரெட் கிறிஸ்ட்டியன் என்றே சொல்ல ஆரம்பித்துவிட்டனர். அவர் தனிக் கட்சி ஆரம்பித்ததும் கிறிஸ்தவர்கள் பலரும் அவரது ஆதரவாளர்கள் ஆகிவிட்டனர்.

எம்.ஜி.ஆர் முதல்வரானதும் அமெரிக்கன் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் நோவா அவரைப் பார்த்து சிறைகளில் ஊழியம் செய்ய அனுமதி கேட்டார். எம்.ஜி.ஆரும் சம்மதித்தார். அப்போது நோவா அவர்கள் சிறைகளில் கழிப்பறை வசதி தேவை என்று கேட்டதும் எம்.ஜி.ஆர் உடனே செய்து தருவதாக ஒப்புக்கொண்டார். எம்.ஜி.ஆர் காலத்தில்தான் சிறை கைதிகளின் அறைகளுக்குக் கழிப்பறை வசதி கிடைத்தது. அதுவரை அறையில் வைக்கப்பட்ட சட்டிகளில்தான் அவர்கள் இரவில் சிறுநீர் மலம் கழித்தனர். மறுநாள் அதை கொண்டு போய் கொட்டிவிட்டு சுத்தம் செய்து கொண்டு வந்து வைத்துக்கொண்டனர். எம்.ஜி.ஆர் டிசம்பர் 24 நாளன்று இரவில் ஒரு மணி வரை உயிரோடு இருந்ததாக சில செய்திகள் வந்த போது கிறிஸ்தவர்கள் பலர் அவர்

கிறிஸ்துமஸ் அன்று மறைந்ததாகவே கருதினர். எம்.ஜி.ஆர் மீதிருந்த நன்மதிப்பு காரணமாக அவர் கிறிஸ்தவர் அதிகமாக வாழும் சாத்தான் குளம் தொகுதியில் நீலமேகம் என்ற இந்துவை நிறுத்தியபோதும் அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இரட்டை இலைக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்தனர்.

இஸ்லாமியர்களைக் கவர்ந்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆருக்கு 1953-ல் முதன் முதலாக ரசிகர் மன்றம் அமைத்தவர் ஒரு இஸ்லாமியர் என்பதை அறிகிறோம். அந்தக்காலத்தில் மாதம் 150 ரூபாய் சம்பாதிக்கும் ரசிகர் கூட ரசிகர் மன்ற உறுப்பினர் கட்டணமான ஐந்து ரூபாயைச் செலுத்த தவறுவதில்லை. ஆனால், மற்ற ரசிகர் மன்றத்துக்கு ஒரு ரூபாய் கட்டணம் வைத்தால் கூட ரசிகர்கள் செலுத்துவதில்லை. எனவே 25 பைசா என்று குறைத்துவைத்தனர்.

மலைக்கள்ளன் படம் தொட்டு சிரித்து வாழ வேண்டும் படம் வரை எம்.ஜி.ஆர் பல படங்களில் நல்ல இஸ்லாமியர் வேடம் ஏற்று நடித்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில் அலிபாபாவாகவும், பாக்தாத் திருடன் படத்தில் ஆபுவாகவும், ராஜா தேசிங்கில் தேசிங்கின் தந்தைக்கு முதல்மனைவிக்குப் பிறந்த இஸ்லாமிய சகோதரனாகவும் நடித்திருந்தார்.

மலைக்கள்ளன் படத்தில் மலைக்கள்ளன் போடும் மாறு வேடமாக அப்துல் ரகீம் என்ற முஸ்லிம் வேடத்தில் வந்து பல நல்ல செயல்களைச் செய்வார். சிரித்து வாழவேண்டும் அப்துல்ரகுமான் என்ற எம்.ஜி.ஆர் ஒரு சூதாட்ட கிளப் நடத்தி வருவார். பின் இன்ஸ்பெக்டர் எம்.ஜி.ஆர் அதை அழித்ததும் ஆட்டோ ஓட்டுவார். இருவரும் நண்பராகிவிடுவர். கதாநாயகி லதாவுக்குத் தன் வீட்டில் அடைக்கலம் அளிப்பார். இது ஒரு முன்மாதிரி கதாபாத்திரம்.

ராஜா தேசிங்கு படத்தில் அண்ணனாக வரும் எம்.ஜி.ஆரை தம்பி எம்.ஜி.ஆர் கொன்றுவிடுவார். என் வாளால் உன் ரத்தம் சிந்தக் கூடாது என்று முஸ்லிம் எம்.ஜி.ஆர் சொல்லி போரை தடுக்க நினைப்பார். ஆனால் தேசிங்கு எம்.ஜி.ஆர் தன் சொந்த அண்ணன் என்பது தெரியாததால் என் வாளால் நீ சாக வேண்டும் என்று கூறி குத்திவிடுவார். இதிலும் இஸ்லாமிய சகோதரர் கதாபாத்திரம் மிகவும் நல்லவராகச் சித்திரிக்கப்பட்டிருந்தது.

குலேபகாவலியில் ஹாசனாக வரும் எம்.ஜி.ஆர் படத்தின் தொடக்கத்தில் அல்லாவை தொழும் காட்சி இடம்பெறும். அப்போது ஒரு பாடலும் ஒலிக்கும். அது போல ராஜா தேசிங்கில் ஆதி கடவுள் ஒன்றேதான் அதை மாற்ற முடியாது எனத் தொடங்கும் பாட்டை பாடியபடி முஸ்லிம் எம்.ஜி.ஆர் அறிமுகமாவார். உடனே அது எப்படி எல்லாக் கடவுளும் ஒன்றாகும் எனக் கேட்டு அவருடன் இருந்த இளைஞர்கள் எம்.ஜி.ஆருடன் சண்டை போடுவதாக அக்காட்சி தொடரும்.

எம்.ஜி.ஆர் இஸ்லாமிய கடவுளை தொழும் காட்சிகளில் நடித்ததால் அவருக்கு இஸ்லாமியர் ஆதரவும் கிடைத்தது. ஒளிவிளக்கு படத்தில் தீக்காயம் பட்டு உயிருக்குப் போராடும் எம்.ஜி.ஆரை காப்பாற்ற வேண்டி அனைத்து மதத்தினரும் கடவுளை வணங்கும் காட்சியில் இஸ்லாமிய வழிபாடு அதிகமாகக் காட்டப்பட்டு பாங்கு சொல்லும் சத்தமும் சேர்க்கப்பட்டிருக்கும். மற்ற மதத்தினர் நடத்திய வழிபாடுகளின் சத்தம் கேட்காதபடி பின்னணி இசை வந்துவிடும்.

எம்.ஜி.ஆர் அதிமுக கட்சியைத் தொடங்கிய பிறகு எடுக்கப்பட்ட படங்களில் பொதுமக்களைக் காட்டும் காட்சிகளில் இந்துவுக்குக் குடுமி ஐயரும் கிறிஸ்தவத்துக்கு பாதிரியாரும் இஸ்லாமுக்குத் தொப்பி அணிந்த முஸ்லிமும் காட்டப்பட்டனர். மூவரும் வந்து கைகோத்து ஆதரவு அளிக்கும் காட்சிகள் இடம்பெற்றன. உரிமைக்குரல், இதயக்கனி போன்ற படங்களில் பாட்டுக்களிலும் இஸ்லாமியருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது.

ஆசிரியர் அவர்களின் பிற நூல்கள்

